Registered as a News Paper in Sri Lanka

Mr. Jude

பக்கம் 20

ரூபா 12/00

දිනමුරසු වාරමලර් மார்ச்.28–ஏப்.03,1999

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 302

## குறி தவறியது எப்படி?

## படை நகர்வும் புலி நகர்வும்





## ரசிகை கொடுத்த அதிர்ச்சி

## ஒரு வீரப்பெண்ணின் உண்மைக் கதை

## ஒட்டுக்கேட்ட உரையாடல்

படிப்பகம்

# முரசம்

## விடுவிப்பு யுத்தம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

வன்னியில்
பெரும் அவலம்
தோன்றி வருகிறது!

பழம்பெரும்
தமிழ்க் கிராமங்கள்
படைநடவடிக்கைக்கு
இலக்காகியுள்ளன!

இதனால்
பல்லாயிரம் தமிழர்கள்
இடம் பெயர்ந்து
அநாதரவாகியுள்ளனர்!

தமிழ் மக்களை
விடுவிப்பதற்கே யுத்தம்
என்று அரசு
கூறியதன் அர்த்தம்
இப்போது புரிகிறது!

தாம் வாழ்ந்த
பாரம்பரிய பூமியில்
இருந்த பல்லாயிரம்
தமிழ மக்களை
யுத்தம் விடுவித்துள்ளது!

குடிப்பது கூழாக
இருந்தாலும்
குடியிருப்பது தம்
சொந்த இல்லங்களில்
என்று கௌரவமாக. வாழ்ந்தவர்களை
அங்கிருந்து விடுவித்துள்ளது!

தமது விவசாய காணிகளில்
உழைத்து வாழ்ந்தவர்களை
அக்காணிகளில் இருந்து
விடுவித்து–
வெகுதூரம் விரட்டியுள்ளது!

தந்தையும், தாயும்
கொஞ்சி மகிழ்ந்த
செந்தமிழ் பூமியிலிருந்து
அவர்களது சந்ததியை
விடுவித்து
விரட்டியிருக்கிறது!

நிம்மதியிலிருந்து
விடுவிப்பு!

பயமற்ற வாழ்விலிருந்து
விடுவிப்பு!

கௌரவமான
வாழ்க்கையிலிருந்து
விடுவிப்பு!

மனித உரிமைகளிலிருந்து
விடுவிப்பு!

இவ்வாறு பட்டியல்
நீண்டுகொண்டு போகிறது!

தமிழ் மக்களை
விடுவிப்பதற்கான யுத்தம்
என்பதை
இப்போது ஏற்கலாம்!

மண்ணிலிருந்து
வேரோடு மரத்தை
பிடுங்கி எறிவதும்
விடுவிப்புத்தானே!

தாயிடம் இருந்து
கன்றுகளை பிரிப்பதும்
ஒருவகையான
விடுவிப்புத்தானே!

இன்றைய யுத்தத்தின்
இறுதியான விடுவிப்பு
எதுவாக இருக்கும்
என்பதும் தெளிவு!

தனித்துவம், தன்மானம்
என்பவற்றிலிருந்து
தமிழ பேசும் மக்களை
விடுவிப்பதோடு
யுத்தம் முடிவுக்கு வருவதையே
பேரினவாத சக்திகள்
விரும்பி நிற்கின்றன!

வவுனியா–யாழ்
தரைப்பாதைக்கும்
தற்போது படையினர்
தமிழ்க் கிராமங்களை
நோக்கி மேற்கொள்ளும்
நடவடிக்கைக்கும்
இடையே தொடர்பில்லை!

தென்பகுதியில்
அரசு தன் முஷ்டியை
உயர்த்திக்காட்டி
வாக்கு வேட்டையாடுவதற்கு,
வன்னியில் தமிழ் மக்களது
வாழ்வோடு விளையாட்டு!

தமிழ் மக்களை
அன்றாட அவலங்களுக்குள்
தள்ளிவிட்டால்,
அரசியல் தீர்வு பற்றி
அக்கறைப்பட மாட்டார்கள்
என்னும் நோக்கமும்
இந்த விரட்டியடிப்புகளுக்கு
பின்னால் இருக்கிறது!

அதுமட்டுமல்ல,
தமிழ் மக்கள் வெளியேறிய
நிலப்பரப்புகளில்
வெளியாரின்
குடியேற்ற ஆபத்தும்
எதிர்காலத்தில் உள்ளது!

புலிகளை ஓரம்கட்டுவது
என்று கூறியபடி
குடியிருப்புகளுக்குள்
படை நடவடிக்கைகளை
தொடர்ந்து மேற்கொள்வது,
சப்பாத்துக்கு அளவாக
கால்களை வெட்டுவதற்கு
ஒப்பான செயலே!

வன்னியில் இத்தகைய
மாபெரும் அவலம்
தோன்றியுள்ள நிலையில்
ஒரு தமிழ்க் கட்சிகூட
அக்கறை
காட்டாமலிப்பதையும்
அவதானிக்க வேண்டும்!

தமிழ் மக்கள்
அவலம் சுமந்தாலும்,
தங்கள் தேர்தல் அரசியலுக்கு
எதிரான புலிகள்
ஒழிந்தால் போதும்
என்பதே தமிழ்க் கட்சிகளது
எண்ணம் என்பது
அவர்களையும் அறியாது
வெளிப்பட்டு விடுகின்றது!

இந் நிலையில்
மனித உரிமை அமைப்புகள்
மற்றும் சர்வதேச
தமிழர் அமைப்புக்கள்
இப் பிரச்சனையில்
உலக கவனத்தை திருப்ப வேண்டும்.

வன்னியில்
மாபெரும் இடம்பெயர்வை,
சொந்த மண்ணில்
மக்கள் அகதிகளாகும்
அவலத்தை நிறுத்த
உலகின் ஆதரவை
திரட்ட வேண்டிய நேரமிது!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## சத்குருவின் மகிமை

கல்விக்குத் தொடர்பானது அறிவு. அறிவுக்குத் தொடர்பானது உடல். உடலுக்குத் தொடர்பானது உயிர். உயிருக்குத் தொடர்பானவர் ஆண்டவர். இந்த ஆண்டவரைக் கல்வியறிவினால் உணர்த்துபவர் குரு. அதனால்தான் ஆன்றோர்கள் குருமூலம் ஆண்டவனைக் கண்டறிந்தனர். குரு என்பதற்கு அஞ்ஞானத்தை நாசம் செய்பவர் என்பது பொருள்.

நன்னெறியைத் தாமும் கடைப்பிடித்து, தம்மை அணுகும் மாணவனையும் நன்னெறிப் படுத்துபவரே, குரு எனப்படுகிறார். பக்தி இல்லாத பூஜையும், அரசனில்லாத நாடும் தானம் செய்யாத கைகளும், விசுவாசமில்லாத சிநேகிதமும், விபூதியில்லாத நெற்றியும் பயனற்றவையாகும். அதேபோன்று குருநாதரில்லாத மாணவனும் நற்கதிசேரமாட்டான்.

ஏட்டில் இருப்பதை நாம் சுலபமாகப் படித்துத் தெரிந்து கொள்ள முடியாதா? குருவின் துணை எதற்கு. என்பது அறிவீனம் ஆற்றைக் கடக்க வேண்டுமானால் படகோட்டி மூலம்தான் கடக்க முடியும். அதுபோல் சத்குருவின் துணையுடன்தான் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும்.

சத்குரு ஒருவரை நாடிப்பெறும் கல்வியே ஞானத்தைப் பெற்றுத் தரும்.

தொகுப்பு: திருமதி சி. பாலாம்பிகை,
மெல்புர, சிலாபம்.



## சுவர்க்கம் நுழைவதற்கு மூன்று வழிமுறைகள்

ஒரு மனிதர், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து "இறை தூதர் அவர்களே! என்னை சுவர்க்கத்தில் நுழையவைக்கும் ஒரு நற் செயலைக் காட்டித் தாருங்கள். அதன் மூலம் நான் ஈடேற்றம் பெற்றுக் கொள்வேன்," என்றார்.

இதற்கு ஏந்தல் நபி (ஸல்) அவர்கள், "நீர் உம்முடைய கூட்டத்தாரிடையே 'முகத்தின்' ஆகிவிடும் உனது பாங்கு ஒலி அறிவிப்பின் மூலம் அல்லாஹ்வைத் தொழுவதற்காக ஜனங்கள் ஓரிடத்தில் ஒன்று கூடுவார்கள். அதனால் நீ சுவர்க்கம் நுழைவாய்!" என்றார்கள்.

அதற்கு அம்மனிதர் "இது என்னால் முடியவில்லை, என்றால் நான் என்ன செய்வது?" என்று கேட்டார். "நீர் பள்ளிவாசலுக்கு தொழுகைக்காக வருவோருக்கு 'இமாம்' ஆகிவிடும் அவர்கள் ஜமா அத்தை நிலை நாட்டுவதன் மூலம் நீர் சுவர்க்கம் நுழைவாய்," என்றார்கள்.

"இதுவும் என்னால் முடியவில்லையெனில் யாது செய்வது இறை தூதரே?" என அம் மனிதர் மீண்டும் கேட்க,

"நீர் ஜமா அத்தாக தொழும்போது முன் வரிசையில் நின்று தொழுவதை உன் வாழ்நாளில் வழக்கமாக்கிக் கொள்வதன் மூலம் சுவர்க்கம் நுழைவாய்" என திருவாய் மலர்ந்தருளினார்கள்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல.299

## பரிசுக்குரிய கவிதை

### புதுமொழி

வரம்பும், நீரும்,
நெல்லும், கோனும்
உயரும்... ஆனால்!
குடிகள் மட்டும்...?

இரா. இராமகிருஷ்ணன்-
இராணிக்காடு, பொகவந்தலாவை.

## இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

### உயிர்

வாழுவதற்காக,
வாழும்வரை...
சுமக்கிறார்கள்....!

ந. மதி- முத்துவல
மாவத்தை, கொழும்பு-15.

### கனவுகள்!

எங்கள் கனவுகள்
எல்லாம்...
சுமைகளாகி
விட்டன...!

எஸ்.பி. பாலமுருகன்-
பதுளை.

### தட்டுப்பாடு

இங்கு நெல்லுக்குத்
தான் தட்டுப்பாடு;
செல்களுக்கு அல்ல.

எஸ். நாகேந்திரன்- மட்/
ஆரைப்பற்றை.



### கதிரும் புதிரும்

சித்திரையை எதிர்கொள்ள
கதிரெடுக்கும் காட்சி இது!
தேர்தலை எதிர்கொள்ள
புதிர் போடா காட்சி எது?

செல்வன் அரவிந்தன்
ரவீந்திரநாத்- அக்கரைப்பற்று-08.

### நம் நாட்டில்

வரப்புயர-நீர்
உயரும்
நீர் உயர-நெல்
உயரும்
நெல் உயர-அரிசி
விலை உயரும்!

மு. அலெக்சாண்டர்-
ஹய்,'.போரஸ்ட்.

### சுமை

கதிர்ச் சுமையிது
கரையிலே இறக்கலாம்;
எம் இனத்தின்
இதயச் சுமைகளை
எங்கே இறக்குவது?

சி. ஷோபனா- மஹரகம.

### இல்லையானால்...

இந்த அறுவடைகள்
அபகரிப்புகள் இல்லாவிட்டால்
(இ)லாபம் தான்!

றஸீனா புஹார்-லுணுகலை.

### ஊரும் உணர்வும்!

நெல்மணியைத் தலைசுமக்க
நிம்மதியை மனம் சுமக்கும்;
வளம் கண்ட வரலாற்றில்
'ஷெல்'"அடியால் சிதைவுண்டு;
சின்னாபின்னமாய் திரிந்து
கட்டுக் குலைந்த பின்
கட்டுக்கோப்பு ஆக முனைந்தோம்!

செ. ஞானராசா-
சின்னப்பண்டிவிரிச்சான், மடு.

### முன்னுதாரணம்

தன்னுயிர் பேணுதல்
வீரருக்கு அழகல்ல;
சுயநலம் பேணுதல்
தலைமைக்கு அழகல்ல;
இயலாமையில் பாதைமாறுதல்
வழி காட்டிக்கு அழகல்ல:
உடல் நலிந்து மனம் சலித்து
துயரிலுழலும் போதும்
தன் கடமை செய்து
பயன் காட்டும் விவசாயி
ஒரு முன்னு தாரணமே!

தி. இதயகரன்-தவசிக்குளம், வவுனியா.

# கவிதைப் போட்டி இல.302



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 03.04.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.302
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

முத்தான முரசே!

நானும் 300வது முரசை வரவேற்றேன். உன் நடுவில் உள்ள சினிமா விமர்சனம் சிறப்பு. 'இடி அமீன்' இடிக்கிறார். 'இலக்கிய நயம்' இனிக்கிறது. 'சிந்தியா பதில்' சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது. தொடரட்டும் உமது வித்தியாசமான ப(ா)ணி.

அருள் சமானந்தன்,
சங்கமன்கிராமம்.

ஜோசியத்தை 'முரசு' தரும் விதம் சுருக்கமாகவும், சிறப்பாகவும் உள்ளது. ஜெமினியின் சிறு பிராய நிர்வாணத் தோற்றம் கண்டு வெட்கம் வந்துவிட்டதய்யா. மனிதர் அந்தக் காலத்திலேயே அழகாகத்தான் இருக்கிறார்.

கு. ராகவன்,
மன்னார்.



## செம்மணி நாடகம்

இனிய முரசே!

செம்மணி நாடகத்தை அக்குவேறு ஆணிவேறாக அம்பலப்படுத்தினாய். தமிழ் பேசும் மக்களை முட்டாள்களாக நினைக்கிறார்கள். அது அவர்கள் குற்றமல்ல. இன்னமும் தமது நலன்களுக்காக சகல நாடகங்களையும் இரசித்துக் கொண்டிருக்கிறார்களே தமிழ்க்கட்சிகள்! அக்கட்சிகளை வைத்துத்தான் தமிழ் மக்களையும் எடை போடுகின்றனர்.

இ. வினோதன்.
மட்டக்களப்பு.

## மக்களையே வாட்டும்

"கொழும்பில் குண்டுத்தாக்குதல்கள் நடைபெறாது இருப்பது பாதுகாப்பு இறுக்கத்தால் அல்ல. புலிகள் நினைத்தால் தாக்குதல் நடத்துவர்." என்று சில மாதங்களுக்கு முன்னர் நாரதர் குறிப்பிட்டிருந்தார். தற்போது அது உண்மையாகியுள்ளது. பலத்த பாதுகாப்பு விதிகளால் சாதாரண மக்கள் படும் இன்னல்கள் சொல்லில் அடங்காது. அரசின் கெடுபிடிகள் சாதாரண தமிழ் மக்களை மாத்திரமே வாட்டி எடுக்கும் என்பது இன்னமும் புரியவில்லையா?

எஸ்.எல்.பாமினி, வவுனியா.

## எனக்குத் தெரியும்

கண்ணதாசனின் 'அரங்கம் அந்தரங்கம்' அருமையான தமிழ் நடையில், நெஞ்சை அள்ளிச் செல்கிறது. அந்த நடிகர் யார்? என்பது எனக்குத் தெரியும்.

எம். ஜவாஹிர், புத்தளம்.

## நயமும் ருசியும்

நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' வன்னி நிலவரத்தை தெளிவாக்கியது. 'இலக்கிய நயம்' மெருகு கூடி ருசிக்கிறது. தற்போது ரசிகன் எடுத்துக்கொள்ளும் கரு அருமை. அதே போல 'இடி அமீன்' தொடர் இங்குள்ள சில சம்பவங்களுடனும் பொருந்துகிறது. முரசு இங்கும் வெற்றி முரசு கொட்டுகிறது.

பா. ஜெகநாதன். இலண்டன்.




## சிறுவர் ஆர்வம்

அன்பின் முரசே!

பெரியவர்கள்தான் தினமுரசுப் பிரியர்கள் என்று பார்த்தால் சிறுவர்களும் 'தினமுரசே எப்போ வருவாய்' என எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றனர். பாப்பா முரசுக் கதைகளைப் பார்த்து உண்மையில் சிறுவர்கள் மனதில் நன்மையையே செய்யவேண்டும் என்று நினைக்கின்றனர். முரசுக்கு எனது பாராட்டுக்கள்.

த.த. செல்வி,
பயிற்சி நிலையம்,
மகரகம.

## யார் அவர்?

முரசே! கண்ணதாசன் தரும் தொடரில் வரும் நடிகர் யார்? ஓரளவுக்கு விளங்குகிறது. என் கணிப்பு சரியா? என்று அறிய ஆவலாக உள்ளேன்.

பி. பத்மா, திருமலை.

இனிய முரசே,

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் அருமை. உன்னை சுவைப்பது கரும்பை நுனியில் இருந்து அடிவரை சுவைப்பது போல ருசி கூடிக்கொண்டே போகிறது. உன் சுவை இன்றுபோல் என்றும் சுவையாக இருக்க வாழ்த்துக்கள்.

நா. பாரதலெக்ஷ்மி, கொழும்பு-15.

இனிய முரசே!

நீ தரும் அத்தனை அம்சங்களும் அபாரம். அதிலும் அரசியல் அலசல்கள் பிரமாதம். 'இடி அமீன்', 'சதாம் உசேன்' தொடர்கள் அசத்தல்.

எஸ். தேவகி, இத்திக்குளம், வவுனியா.

## சர்வதேச நிபுணர்கள் எங்கே?

சர்வதேச நிபுணர்கள் முன்பாக செம்மணி விசாரணை நடக்க வேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் முன்பு அறிக்கை விட்டன. அரசு தனக்கு விரும்பிய உள்ளூர் நிபுணருடன் குழி தோண்டப்போகிறது. தமிழ்க்கட்சிகள் ஏன் இதனை கண்டிக்க துணியவில்லை? எந்தக் கோரிக்கையில்தான் இவர்கள் உறுதியாக நின்றனர் ? மக்கள் மறந்திருப்பார்கள் என்று மௌனமாக இருக்கின்றனரா? எதுவுமே நடவாதது போல செம்மணியில் நடந்த கூத்துக்களை தமிழ்க்கட்சிகள் ஒன்றுபட்டு வேடிக்கை பார்த்துள்ளன.

க. இராசரத்தினம்.
யாழ்ப்பாணம்.

## நீ ஒரு புதுமை

முன்னூறாவது முரசு கண்டு காலத்தை பின்னுக்குச் சுழற்றி மீட்டுப்பார்த்தேன். முதலாவது முரசின் வடிவம் மனதில் படம்பிடித்துக் காட்டியது. அன்றே உன் உன்னத வளர்ச்சியை அது அறிமுகப்படுத்தி நின்றது நிஜம்! நினைத்தது போலவே உனது பரிணாமம் பரிணமித்து வந்துள்ளது. இவற்றுக்குள் நீ எத்தனை அம்சங்களை அள்ளித்தந்து விட்டாய். தமிழ்ப் பத்திரிகையுலகில் நீயொரு புதுமை! போர்க்கள செய்திகளை பேராடிப் போராடி தந்தாயே! உனது பணி மீண்டும் வளரவேண்டும். வாழ்த்துக்கள். வாழ்க நீ!

வி.எஸ்.ஏ.ரவிஷங்கர், மட்டக்களப்பு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):– 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.



படிப்பகம்

# நிலைகொள்ள அனுமதித்து தொடர் தாக்குதல்!

## விடுதலைப் புலிகள் திட்டமிடுவதாகத் தகவல்

வன்னியில் முல்லைத்தீவு தளம் மற்றும் கிளிநொச்சிப் பகுதியிலேயே புலிகள் தமது முக்கிய கவனத்தைச் செலுத்தி வருகின்றனர்.

ஏனைய பகுதிகளில் படையினரின் நகர்வுகளை பாரிய தாக்குதல் மூலம் தடுத்து நிறுத்துவதை புலிகள் தவிர்த்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் நிலை கொண்ட பின்னரே தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

மடுப்பகுதியையும், அதனை அண்டிய பகுதிகளையும் படையினர் கைப்பற்ற முனைவது பற்றி ஒருவாரம் முன்பாகவே புலிகளுக்கு தெரிந்திருந்தது.

மடுவை அண்டிய பகுதிகளில் அமைந்திருந்த புலிகளது அலுவலகங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டன. இவற்றைக் கண்ட பின்னர் படை நகர்வை ஊகித்த மக்கள் பலரும் மடுவில் இருந்து சில வாரங்களுக்கு முன்னரே இடம்பெயர்ந்தனர். அவர்கள் தற்போது துணுக்காய், மல்லாவி பகுதிகளில் தங்கியுள்ளனர்.

மடு தேவாலயப் பகுதியில் படையினர் நிலைகொள்ள முடியாது. அப்பகுதியில் ஆயுதங்களுடன் நடமாட முடியாது என்று மடு தேவாலய மதகுரு கூறிவிட்டார்.

(நமது நிருபர்)

தற்போது மடுவை அண்டிய பகுதிகளில் படையினர் நிலைகொண்டுள்ளனர். கைப்பற்றிய பகுதிகளில் இருந்து படையினர் தொடுக்கும் ஷெல்கள், கைப்பற்றப்படாத பகுதிகளில் உள்ள மக்களையும் இடம் பெயரச் செய்கின்றன.

### புலிகள் அனுமதி

ஒட்டுசுட்டான், இரணைஇலுப்பைக் குளம், மடு ஆகிய பகுதிகளுக்கு அதிகாலை நேரத்திலேயே படைகள் முன்னேறின. இப்பகுதிகளில் உள்ள மக்களை இடம்பெயர்ந்து தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வருமாறு புலிகள் வற்புறுத்தவில்லை.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் மக்கள் இருப்பதை சில இராணுவ நோக்கங்களோடு புலிகள் அனுமதிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

அதேசமயம் தாமாக இடம்பெயரும் மக்களை புலிகள் தடுப்பதும் இல்லை. புலிகளது கட்டுப்பாட்டு பகுதிகளில் உள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் தம்மால் இயன்றவரை உதவிகளை வழங்கி வருகின்றன.

போரூட் நிறுவனம், இடம் பெயர்ந்த மக்கள் பலருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது.

எனினும் போதிய உதவிகள் வழங்குமளவுக்குத் தொண்டர் நிறுவனங்களின் நிதி நிலை அமையவில்லை.

### நிதி திரட்டல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் வெளிநாடுகளில் நிதி திரட்டி வருகின்றனர். பெரும்பாலான இலங்கைத் தமிழர்கள் நிதி கொடுத்து உதவுவதாகக் கூறப்படுகிறது.

இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்றவை உதவியளிக்காது விட்டால் பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கும்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் வழங்கும் நிதியே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற அமைப்புக்கள் இயங்க உதவுகின்றன.

# ஏப்ரல் 25இல் 'தமிழீழ பிரகடனம்'

## ஐ.நா. முன்வைக்க ஏற்பாடுகள் துரிதம்?

(நமது நிருபர்)

தமிழீழ சுதந்திரப் பிரகடனத்தை வெளியிடுவதற்கு வெளிநாடுகளில் உள்ள அமைப்புக்கள் சில திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ம் திகதி 'சுதந்திர தமிழீழப் பிரகடன'த்தை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இப் பிரகடனம் பற்றி வன்னியில் புலிகளும் செய்தி வெளியிட்டுள்ளனர். எனினும் இப் பிரகடனம் தொடர்பாக தமது கருத்தை புலிகள் கூறவில்லை.

'ஏப்ரல் 25ம் திகதியன்று தமிழீழப் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னால் வைக்கப்படும்' என்று புலிகளின் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஈழத் தமிழர் அமைப்புக்களே இந்தப் பிரகடனத்தை வெளியிடுவதற்கான ஏற்பாடுகளில் இறங்கியுள்ளன.

### தீவிரப்பிரசாரம்

தமிழ் நாடு, இலண்டன், மலேசியா போன்றவற்றில் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான பெரும் பிரசாரங்கள் சமீபத்தில் தீவிரம் அடைந்துள்ளன.

ஃபிரான்ஸ் நாட்டில் ஃபிரான்ஸ் மொழியில் 'தமிழீழ வரலாறு' என்றொரு நூல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நூல் வெளியீடு பாரிஸ் நகரில் நடத்தப்பட்டது. வெளியீட்டு விழாவில் அங்குள்ள மதகுருமார்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ரெலோ தலைவர் கைது

## புலி நாணயம் வைத்திருந்தார்!

## தமிழ்க் கட்சிகளுக்குப் பாடம்

ரெலோ இயக்கத்தின் தலைவரான வினோதலிங்கம் கைது செய்யப்பட்டு இரண்டு வாரகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் செய்தியை ரெலோ பகிரங்கப் படுத்தவில்லை. படையினருக்கு உதவி வரும் தமக்கே இக்கதி என்பதை வெளியே கூறுவதற்கு ரெலோ வெட்கப்படுகிறதோ தெரியவில்லை.

இது பற்றி அறிய வருவதாவது, வினோதலிங்கத்தின் துணைவியார் புலிச்சின்னம் பொறித்த தங்க நாணயம் வைத்திருந்தார்.

### புலிகள் கொடுத்தது

புலிகள் மக்களிடம் தாம் திரட்டிய பவுணை தவணைமுறையில் திருப்பிக் கொடுத்து வந்தனர். அவ்வாறு திருப்பிக் கொடுத்தபோது கிடைத்த தங்க நாணயமே அவையாகும். அப்போது வினோதலிங்கத்துக்கும் அவருக்கும் திருமணம் நடந்திருக்கவில்லை.

திருமணத்தின் பின்னர் தாலிக் கொடியில் அந்தத் தங்க நாணயங்களை கோர்த்து வைத்திருந்தாராம். கொழும்பில் தேவாலயம் ஒன்றுக்குச் சென்றபோது தங்க நாணயம் தொலைந்து போனது. அவை கிடைத்தால் தம்மிடம் சேர்ப்பிக்குமாறு வினோதலிங்கம் தேவாலய மதுகுருவிடம் கூறி தன் முகவரியை கொடுத்துவிட்டுச் சென்றார்.

தற்செயலாக அந்த நாணயங்கள் மதகுருவிடம் கிடைத்துவிட்டன. அவற்றில் புலிச் சின்னத்தை பார்த்த மதுகுரு பொலிசாருக்கு தகவல் கூறினார். வினோதலிங்கம் கைதானார்.

உண்மையை விளக்கியும் ஏற்கப்படவில்லை. அவசரகாலசட்டத்தின் கீழ் தடுத்துவைத்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். தற்போது சிறைக்குள் இருக்கிறார்.

வவுனியா, திருமலை, மட்டக்களப்பு பகுதிகளில் ரெலோ படையினருக்கு உதவி வருகிறது. ஆனால் அதன் தலைவரையே புலிகளோடு தொடர்பு என்று சந்தேகித்து சிறையில் தள்ளியுள்ளனர்.

### நியாயப்படுத்தல்

புலிகளையும், பொது மக்களையும் பிரித்து இனம் காண முடியாமையால்தான் அப்பாவிகளும் கைதாகிறார்கள் என்று வகை தொகையற்ற கைதுகளுக்கு அரசு நியாயம் கூறிவந்தது.

ஆனால், தமிழ் கட்சியொன்றின் தலைவரையே புலியா? இல்லையா? என்று இனம் காண முடியவில்லை என்று எப்படிக் கூறப் போகிறார்கள்?

ஏற்கனவே ஈ.பி.டி.பி. எம்.பி. சந்திரகுமாரின் மெய்க்காவலரும் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரை விடுதலை செய்யுமாறு ஈ.பி.டி.பி தலைவர் கோரிய பின்னரே, தடுப்புக் காவல் உத்தரவு வேகமாகப் போடப்பட்டு சிறையில் தள்ளப்பட்டாராம்.

ரெலோ தலைவர் கைதான விவகாரம் அரச உயர் மட்டங்களுக்கு தெரியப்படுத்தப் பட்டும் விடுதலைக்கு ஆவன செய்யப்படவில்லை. "பிணையில் எடுங்கள், நாம் ஆட்சேபிக்க மாட்டோம்" என்று கூறப்பட்டுள்ளதாம். ■

# அடையாளம் காட்டுகிறார்கள்

## பிடித்த பகுதிக்கு செல்லப் போட்டி

'யுத்தகோஷ' நடவடிக்கை மூலம் வன்னியில் கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்கு செல்வதில் ரெலோ, புளொட் இடையே போட்டா போட்டி ஏற்பட்டுள்ளது.

மூன்றுமுறிப்பு பகுதியில் உள்ள மண்டபம் ஒன்றில் அங்குள்ள மக்களில் இளவயதினர் அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

அப்போது அவர்களை அடையாளம் காண்பிக்க ரெலோ இயக்கத்தினர் உதவியதாகக் கூறப்படுகிறது.

வவுனியாவில் கடந்த சில காலமாக ரெலோமீது புலிகள் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. ரெலோவும் புலிகளை பகைத்துக் கொள்ளாதிருந்தது.

ஆனால் சமீபகாலமாக ரெலோ புலிகளுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்துள்ளது. ரெலோ பா.உ. செல்வம் வவுனியாவில் பவானிதேவி கொலைக்கு புலிகள்மீது பழிசுமத்தியும் இருக்கிறார்.

"புலிகளை வம்புக்கு இழுப்பதும், பின்னர் புலிகள் தாக்கினால் சகோதர படுகொலை என்று புலம்புவதுமே தமிழ்க் கட்சிகளது வழக்கமாக உள்ளது" என்று வவுனியா மக்கள் பேசிக்கொள்கின்றனர். ■

# புளொட் — ரெலோ மோதல்

## ஆயுதங்களுடன் நடமாட்டம்

(நமது நிருபர்)

வவுனியாவில் புளொட்-ரெலோ இயக்க முறுகல் நிலை சற்றும் ஓய்வின்றித் தொடர்கிறது.

19.03.99 அன்று புளொட் இயக்க மகளிர் பிரிவு பெண்மணியான பவானிதேவி (55) வவுனியாவில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைக் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றனர். இக் கொலைக்கு ரெலோமீதே சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

ஆனால் ரெலோ விடுத்த அறிக்கையில் மேற்படி கொலைக்கு புலிகளே காரணம் என்று சந்தேகிப்பதாகத் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கையால் ரெலோமீது வவுனியாவில் பலத்த அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இப்படி அபாண்டமாக பழி சுமத்துகின்றனரே என்று பலரும் அங்கலாய்க்கின்றனர்.

பவானிதேவியின் உடல் போடப்பட்டிருந்த அதே இடத்தில் மறுநாள் 20.03.99 இல் இன்னொரு உடல் கிடந்தது.

ரெலோ இயக்க உறுப்பினர் ஒருவரது அண்ணன் முறையான சிவானந்தமூர்த்தி இராசநாயகம் என்பவரே கொல்லப்பட்டவராவர். இவருக்கும் ரெலோ இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. ரெலோ மரவியாபாரம் செய்தபோது கூலிக்கு மரம் அரிந்து கொடுத்திருக்கிறார்.

பவானிதேவி கொலைக்கு பதிலடியாக யாரையாவது தீர்த்துக்கட்டாவிட்டால் தமக்கு மதிப்பிருக்காது; மக்களிடம் பயமிருக்காது என்று கருதியே, அவரைக் கொலை செய்துள்ளனர். இக் கொலை தொடர்பாக புளொட் மீதே சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் மற்றொரு ரெலோ உறுப்பினரையும் புளொட் சுட்டுக் காயப் படுத்தியுள்ளது. ரெலோ முகாம்மீதும் எட்டத்தில் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டுள்ளது.

முன்பு மோதல்கள் நடந்ததும், "இரு இயக்கங்களும் ஆயுதங்களுடன் நடமாடத் தடை" என்று படையினர் கூறியிருந்தனர். ஆனால் இன்று இவ்விரு இயக்கங்களும் ஆயுதங்களுடன் பகிரங்கமாக நடமாடி வருகின்றன.

# நாளொரு சட்டம் அமுல் — மன்னாரில் மக்கள் திண்டாட்டம்

(மன்னார் நிருபர்)

செட்டிகுளம் ஊடாக மன்னார் வரும் நூற்றுக் கணக்கான பொது மக்கள் மன்னாரிலிருந்து மீண்டும் திரும்பிச் செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

மன்னாரை நிரந்தர பிறப்பிடமாகக் கொண்ட மக்கள் தற்போது வேறு மாவட்டங்களில் பெருமளவில் இடம்பெயர்ந்தவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறானவர்கள் தமது தேவைகளை நிறைவு செய்யவும், உறவினர்களைப் பார்வையிடவும் மன்னாருக்கு வருகின்ற போது திரும்பிச் செல்ல பொலிஸார் பாஸ் வழங்க மறுத்து வருகின்றனர். இதனால் நூற்றுக்கணக்கானவர்கள் மாவட்ட செயலாளரிடம் முறையிட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்கள் மன்னாரில் நிரந்தரமாக வசிக்காதவிடத்து, தற்போது வசிக்கும் பகுதி பிரதேச செயலாளர்களினால் வசிப் பிடத்தை உறுதிப் படுத்திய கடிதம் கொண்டு வந்தால் மாத்திரமே தென்பகுதி செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான நிலையில் உள்ளவர்களை செட்டிகுளத்தில் வைத்தே திருப்பி அனுப்பிவிட்டால் தம் இருப்பிடம் சென்று குறித்த கடிதத்தை பெற்றுக் கொண்டு வரமுடியும். ஆனால் அவ்வாறு செய்யாமல் மன்னாருக்கு வர அனுமதித்துவிட்டு இவ்வாறு விளையாடிப் பார்ப்பதையிட்டு சம்பந்தப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கெடுபிடி நடவடிக்கையானது மன்னாரில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கையை வெகுவாகப் பாதித்துள்ளது.

நாளுக்கொரு சட்டம் மன்னாரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் இங்குள்ள மக்களும் இங்கு வரும் மக்களும் செய்வதறியாது திகைக்கின்றனர். ■

# புலிகள் தாக்கியது எப்படி?

## ஆங்கில விமர்சகர் வியப்பு

தள்ளாடி முகாம் தாக்குதலின்போது 11 இராணுவத்தினரும் பொதுமக்களில் 3 பேரும் கொல்லப்பட்டனர். 15 இராணுவத்தினரும் 4 பொது மக்களும் காயமடைந்துள்ளனர்.

முகாமுக்குக் கொண்டு வரப்பட்டு, லொறிகளிலிருந்து இறக்கப்படாமல், வகை வகையான ஏவுகணைகளும் வெடி பொருட்களும் வாகனங்களிலேயே வைக்கப்பட்டிருந்தன. அவையாவும் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலினால், முற்று முழுதாகத் தீப்பிடித்து வெடித்து எரிந்து நாசமாகிவிட்டன. இவற்றின் பெறுமதி பல இலட்சக் கணக்கான ரூபாவாகும். இதிலிருந்து கிளம்பிய தீ ஆங்காங்கே இருந்த எண்ணை-பெட்ரோல் குதங்களிலும் தாவி, மேலும் வெடி ஓசைகளையும் பல கிலோ மீட்டர் தொலைவிலிருந்து பார்க்கும்போது பெரும் தீச்சுவாலையையும் எழுப்பியுள்ளன.

பீரங்கிகளை வெவ்வேறு இடங்களுக்கும் இழுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும் பாரிய இழுவை வண்டிகளான- 'இரும்புக் குதிரை' என்றழைக்கப்படும் 9 வண்டிகளும் நாசமாயின. இவை தவிர 4 சிறு ரக வாகனங்களும் சேதமடைந்தன.

மோட்டார்களுடன் இருந்த வாகனங்களின் முன்புறமாக முதலாவது குண்டு வீழ்ந்ததும், ஒரு சிப்பாய் அவ்வாகனங்களைப் பத்திரமான ஓரிடத்துக்குக் கொண்டு செல்ல எத்தனித்தார். இவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாக இருவாகனங்களைக் கொண்டு சென்றார். ஆனால் ஏனைய வாகனங்களின் மீது புலிகள் ஏவிய குண்டுகள் வந்து வீழ்ந்து வெடித்தன.

### எச்சரிக்கை

தள்ளாடி முகாம் மீது தாக்குதல் நடத்த புலிகள் திட்டமிட்டிருப்பதாக உளவுப் பிரிவினர் ஏற்கனவே எச்சரித்துள்ளனர். தள்ளாடி அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் படி, பிரபாகரனே-மன்னார் பிரதேசத்துக்கு 20முதல்30 புலிகளைப் பிரத்தியேக பயிற்சியின் பின் அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது.

இத்தாக்குதலில் வியப்புக்குரிய விடயம் என்னவென்றால், ஏவுகணைகளும் ஏனைய வெடிபொருட்களும் கொண்ட வாகனங்கள் குறிப்பாக எவ்விடத்தில் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன என்ற விபரம் புலிகளுக்கு எப்படித் தெரிந்தது என்பதுதான்.

இவ்வாகனங்கள் தரித்து நின்ற அதே இடத்தில் துல்லியமாக குண்டுகள் வீழ்ந்து வெடித்துள்ளன. புலிகளுக்கு இந்த இலக்கு எவ்வாறு தெரிந்தது. விடைகாண முடியாத வினாவாக இது உள்ளது. இவ்வாறு சண்டே ரைம்ஸ் இராணுவ ஆய்வாளர் வியப்புத் தெரிவித்துள்ளார். ■

# குறிதவறிய குண்டுவீச்சு — எவருக்கும் பாதிப்பில்லை!

அக்கரைப்பற்று-சாகாம வீதி சாரதா பட மாளிகைக்கு அருகில் 21.03.99 அன்றிரவு ஏழு மணியளவில் புலிகள் கைக்குண்டுகளை வீசி வெடிக்கச் செய்தனர். யாருமில்லாத நேரத்தில் கைக்குண்டுத் தாக்குதல் திட்டமிடப்பட்டதன் மர்மம் என்ன என்று பலரும் பேசிக் கொண்டனர்.

பொலிஸார் அவ்விடத்தில் கூடி நிற்பதை நோட்டமிட்டு அவர்களைக் குறி வைத்தே தாக்குதல் இலக்குத் தீர்மானிக்கப்பட்டிருப்பது தெரிகிறது.

எனினும் அன்றைய தினம் பொலிஸார் எவருமே அவ்விடத்தில் நிற்கவில்லை. சற்றுத் தொலைவிலேயே பொலிஸார் காணப்பட்டனர். கைக்குண்டு வீசப்பட்டதை அறிந்த பொலிஸார் சிறிது நேரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஆனாலும் யாருக்கும் சேதமெதுவும் ஏற்படவில்லை. மறுநாள் சுற்றிவளைப்பும் இடம் பெற்றது.

இதே வேளை அம்பாறை மத்திய பஸ் நிலையத்தில் அதிசக்தி வாய்ந்த குண்டொன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ■

# இரவு பகலாக ஷெல் — மக்கள் இடம்பெயர்வு

கடந்த 17.03.99 அன்று தள்ளாடி இராணுவ முகாம் தாக்கப்பட்டபின் வன்னிப் பகுதியிலிருந்து உயிலங்குளம் ஊடாக எவரும் வர அனுமதிக்கப்படவில்லை ஆயினும் 23.03.99 அன்று குறிப்பிட்டளவான மக்கள் மன்னார் வர அனுமதிக்கப்பட்டனர்.

வட்டக் கண்டல் பகுதியில் தொடரான ஷெல் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் நடைபெற்றதால் அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து காத்தான்குளம் தேவாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

தற்போது தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து இரவு பகலாக ஷெல் தாக்குதல் நடைபெறுவதால் மக்கள் அஞ்சியபடி உள்ளனர். வட்டக்கண்டல் பகுதியில் ஷெல் விழுந்ததால் 2 பேர் காயமடைந்துள்ளதுடன் வயோதிபர் ஒருவரும், சிறுவனும் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந் துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மடு தேவாலயப் பகுதியில் அதிகளவான மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களுக்கான நிவாரணப் பணிகளை மேற் கொள்வதில் நிவாரணப் பணியாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக அறிவிக்கப்படுகிறது. ■

# புலிகள் நடத்தும் வைத்திய சேவை!

## "கட்டுப்பாடுகள் புலிகளை கட்டுப்படுத்தாது"

மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் வசமுள்ள பகுதியில் இயங்கிவந்த ஏழு மத்திய மருந்தகங்களும், ஒரு கிராமிய வைத்திய சாலையும், ஒரு பிரசவ விடுதியும், மருந்தகமுமாக மொத்தம் ஒன்பது வைத்திய சாலைகளும் 1990ஆம் ஆண்டுக்குப்பின் இழுத்து மூடப்பட்டுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களைக் கருதி இவ்வைத்திய சாலைகளிலும் மருந்தகங்களிலும் வைத்தியர்கள் தங்கியிருந்து சேவை செய்ய முடியாது. மருந்துகளையும் அங்கு வைத்திருக்க முடியாது என்பதாலேயே இக்கதி நேர்ந்துள்ளது.

இதனால் வறிய மக்கள் வாழும் அப்பகுதிகளின் மருத்துவச் சேவை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. புலிகளின் வசமுள்ள பகுதிகளில் வாழும் ஆயிரக் கணக்கானோர் வைத்தியசேவையை நாடி 25-30 மைல் தொலைவிலுள்ள படையினரின் கண்காணிப்பிலுள்ள நகரப் பகுதிக்கு வரும்போது பல வித கெடுபிடிகளையும் நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டியுள்ளது என்று மனம் சலித்துக் கொள்கிறார்கள்.

இதேவேளை மெடிசின்ஸ் சான்ஸ் புரொன்டியர் (MEDICINS SANS FRONTIER) எனும் வெளிநாட்டு வைத்தியர்களின் ஒத்துழைப்புடன் வாரத்தில் ஒரு தடவை நடமாடும் வைத்திய சேவை நடத்தப்பட்டு வருகிறது.

### மருந்து விநியோகம்

இது தவிர தினந்தோறும் புலிகளால் நடத்தப்படும் வைத்திய சேவையொன்று மட்டக்களப்பு-பதுளை வீதியில் உள்ள கரடியனாற்றில் நடைபெறுகிறது. இவ் வைத்திய சேவையில் பொதுமக்களிடமுள்ள வசதியைப் பொறுத்து மருந்துக் கட்டணம் மாத்திரம் அறிவிடப்படுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் நிரந்தர வைத்திய சாலைகளில்லை. வைத்தியர்கள் அங்கே நிரந்தரமாகத் தங்கியிருந்து சேவை புரிவதும் மருந்துப் பொருட்களை அங்கு வைத்திருப்பதும் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் ஏழைப் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்களே என்று வைத்தியர் ஒருவரிடம் கேட்டபோது அவர் பின்வருமாறு கூறினார்:

"எதையெதையெல்லாம் படையினர் இங்கு தடை செய்கிறார்களோ அவை அத்தனையும் புலிகளின் வசமுள்ள பகுதியில் தாராளமாகக் கிடைக்கின்றன. வைத்திய சேவை உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வரை படையினர் விதிக்கும் தடை பொதுமக்களை மாத்திரம்தான் பாதிக்கும். புலிகள் சகல சேவைகளையும் கொண்டிருக்கிறார்கள். எனவே படையினர் விதிக்கும் பொருட்கட்டுப்பாடுகளாலும் தடையாலும் புலிகள் பாதிக்கப் படப் போவதில்லை. இது படையினருக்கும் தெரியாததல்ல" என்றார் அவர். ■



படிப்பகம்

# நியமனம் வழங்க முன்னர் வாக்காளர் பதிவேடு ஏன்?

(திருமலை நிருபர்)

சில அரச திணைக்களங்கள் பதவி வெற்றிடங்கள் நிரப்புதற்காக விண்ணப் பங்களைக் கோரும் பொழுதோ அல்லது நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும் பொழுதோ வாக்காளர் பதிவேட்டின் பிரதியையும் கோருவதால் விண்ணப்பதாரிகள் தேவையற்ற சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இடம்பெற்ற வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கென மட்டுப்படுத் தப்பட்ட மாணவ தாதியர் நேர்முகத் தேர்வில் ஐந்து வருடங்களுக்கான வாக்கா ளர் பதிவேட்டுப் பிரதிகள் கேட்கப்பட்ட தால், சகல விண்ணப்பதாரிகளும் தலா இருநூறு ரூபா பயனற்ற செலவு செய்ய வேண்டியேற்பட்டது. குறிப்பிட்ட சில தினங் களுக்குள் பலநூற்றுக்கணக்கான பிரதி களை விநியோகிக்க வேண்டியேற்பட்டதால் தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் பெரும் சிரமத்தை அனுபவிக்க நேர்ந்திருக் கிறது.

தற்போதுள்ள வழக்கமான நடைமுறை யில் நியமனத்துக்குத் தகுதி பெற்றோரிடம் மட்டுமே வாக்காளர் பதிவேட்டுப் பிரதி கோரப்பட்டு வருகிறது.

இதைவிட ஒருபடி மேலே போய் திருக் கோணமலை நகரசபையும் அண்மையில் 13 வகையான பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியபோது, விண்ணப்பத்துடன் வாக்காளர் பதிவேட்டுப் பிரதியையும் இணைக்குமாறு கேட்டிருந்தது. இதனால் வேலையற்றோர் வீண் சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

நியமனம் வழங்குதற்குத் தெரிவு செய்யப் பட்டால் வாக்காளர் பதிவேட்டுப் பிரதி கேட்பதில் நியாயமுண்டு. நியமனங் கோரும் விண்ணப்பதாரிகளையெல்லாம் பதிவேட்டி லும் பிரதி கேட்பதில் என்ன நியாயமுண்டோ தெரியவில்லை" என்று விண்ணப்பதாரியொரு வர் முரசு நிருபரிடம் கூறினார்.

வேலையற்றோரின் பணத்தைச் சுரண்டி அரசாங்கத்திடம் சேர்ப்பதில் உள்ள நியாயத்தை சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள்தான் கூறவேண்டும்!

# காந்தியவாதி பேரின்பநாயகம் நூறாவது பிறந்தநாள்

யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபராக பத்தாண்டுகள் பணி புரிந்தவர் அமரர் எஸ். ஹன்டி பேரின்ப நாயகம். அவரது நூறாவது பிறந்த நாள் விழா கொழும்பில் கொண்டாடப்படுகிறது.



கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளை அதற் கான ஏற்பாடுகளைச் செய்துள் ளது. 28.03.99 அன்று கொழும்பு இராம கிருஷ்ண மண்டபத்தில் நூற்றாண்டு பிறந்தநாள் நிகழ்ச் சிகள் நடைபெறவுள்ளன.

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் அமரர் கல்கி அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து தமிழ்நாடு திரும்பி, ஹன்டி பேரின்பநாயகம் பற்றி பின்வருமாறு எழுதியிருந்தார்:

"இலங்கைக்கும், சிறப்பாக யாழ்ப் பாணத்திற்கும் ஸ்ரீ பேரின்பநாயகம் செய்தி ருக்கும் தொண்டு அளவிடமுடியாதது. இலங்கைத் தீவுக்கு காந்தி மகானையும், நேரு அவர்களையும், ராஜாஜியையும் தருவிப்ப தற்கு மூல காரணமாக இருந்தவர் அவர் தான். ஏன் நான் இம்முறை இலங்கை சென்றதற் கும் முக்கிய காரணம் அவர்தான்..."

# திருமலையில் வழிப்பறி

திருமலை மாவட்டத்தில் நிலாவெளிப் பாதையில் வழிப்பறி சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

15.03.99 அன்று நிலாவெளிக்குச் செல்லும் பாதையில் 6ம் 7ம் மைல்களுக்கு இடைப் பட்ட பகுதியிலேயே வழிப்பறி நடந்துள்ளது.

அதிகாலை 6.30 மணியளவில் இனம் தெரியாத கும்பல் ஒன்று தமிழ், முஸ்லிம் வியாபாரிகளை மிரட்டி வழிப்பறி நடத்தியுள்ளது.

தாம் புலிகள் என்றும் அக் கும்பல் கூறியதாம். மீன் வியாபாரிகளும், மரக்கறி வியாபாரிகளுமே குறிப்பிட்ட கும்பலிடம் பணத்தைப் பறிகொடுத்தனர்.

# நிதி வசூலால் இழப்புகள் அதிகரிப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவ சாயச் செய்கையாளர்கள் தாம் அதிகளவு நஷ்டமடைய வேண்டியிருப்பதாக கவலை தெரிவிக்கிறார்கள்.

நாளுக்கு நாள் அதிகரித்துவரும் எரி பொருள் செலவு, கிருமி நாசினி, களை நாசினி, உரம், உழவு இயந்திரக்கூலி, கூலி யாட்களின் சம்பளம் எனப் பல்வேறு வகை யாலும் விவசாயச் செலவு அதிகரித்திருக் கின்றன. இது ஒரு புறமிருக்க; புலிகள் இயக்கத்தினர் முதற்கொண்டு படையினர், பொலிஸார், படையினருடன் சேர்ந்து செயற் படும் ரெலோ, புளொட், ராசிக் குழுவினர் ஆகியோருக்கு கணிசமான அளவு நிதியும் 'அன்பளிப்பும்' கொடுக்க வேண்டியிருப்ப தால் இலாபத்தைவிட அதிகளவு நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. போதாக் குறைக்கு இயற்கையும் அவ்வப்போது கடும்வரட்சி, கடும் மழை, வெள்ளம் என்று பாதிப்புக்களை ஏற்படுத்துவதால் சொல்லொண்ணாக் கஷ்டத்தை எதிர் கொள்வதாகவும், எதிர்காலத்தில் தாங்கள் தொடர்ந்து விவசாயச் செய்கையில் ஈடுபடு வதா- இல்லையா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது என்று மட்டக் களப்பு மாவட்டங்கள் சங்கத்தின் முக்கிய பிரமுகர்கள் தெரிவிக்கிறார்கள்.

"விவசாயிகளின் கஷ்டங்களை உணர்ந்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பாரும் விவசாயிகளிடமிருந்து நியாயமற்ற நிதி வசூலிப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் அல்லது எமது பிரதேசம் மேலும் பட்டினிச் சாவை எதிர்நோக்கும்!" என்று விவசாயிகள் எச்சரிக்கை விடுக்கிறார்கள்.

# மதிலை இடிக்க உத்தரவு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு-வாழைச்சேனை பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சுற்றுப்புற மதிலை இடிக்கும்படி படையினர் உத்தர விட்டுள்ளனர். கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் படையினர் இருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதன் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பிரதான வீதியின் இருமருங்கிலும் மதில் இருப்பதால் அதற்குள் மறைந்திருந்து புலிகள் தங்களைத் தாக்கக்கூடும் என்ப தாலே மதிலை இடித்துத் தள்ளும்படி உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

ஆனால் இந்த மதில் உடைக்கப்பட்டால் வாழைச்சேனை ப.நோ.கூ.சங்கத்தின் சொத்துக்களுக்குப் பாதுகாப்பற்ற நிலை உருவாவதோடு இரு தரப்புக்குமிடையில் அவ்வப்போது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் நடக்கும்போது அங் குள்ள ஊழியர்கள் பாதிக்கப்படவும் சந்தர்ப்பம் இருக்கிறது. அத்துடன் பெருந்தொகையான பணச் செலவில் கட்டி முடிக்கப்பட்ட இந்த மதிலை இடித்துத் தள்ளுவது எவ்வளவு அநியாயம் என்று கூட்டுறவுச் சங்கம் கூறுகிறது.

இந்த விடயங்கள் குறித்து பிரதேசச் செயலாளர் திரு.கே.கதிர்காமநாதன் பிரதேச இராணுவ தலைமை அதிகாரி திரு அல்விஸிடமும் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் புகார் தெரிவித்துள்ளார்.


விளம்பரப் பகுதி

## வேலாயுதம். நாணு ஆசாரி

2ம் ஆண்டுநினைவஞ்சலி

மலர்வு: 8.5.1927 உதிர்வு: 25.3.1997



எங்கள் அன்புத் தெய்வமே
ஐயா எம்மைவிட்டுப்பிரிந்து
ஆண்டு இரண்டு சென்றிடினும்
ஐயாவின் பிரிவுத்துயர் இன்னும்
எமது நெஞ்சை விட்டகலவில்லை
ஐயா பாசத்துடன் எம்மை வளர்ந்து
எங்களை கண்ணீர் கடலில்
ஆழ்த்தி விட்டீரே ஐயா
உங்கள் ஆன்மா சாந்தியடைய
தினமும் பிராத்திக்கிறோம்
உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி பிள்ளைகள்
மருமக்கள் பேரப்பிள்ளைகள்
உற்றார் உறவினர்கள்

தகவல்: நாணு றங்கநாதன்
பலர் மோ இற்றாலி

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



தேனுகா 18.03.1999

நண்ணிருற்றைச் சேர்ந்த திரு- திருமதி சிவநாதன்- இந்திரநாயகி தம்பதியினரின் செல்வ புதல்வி செல்வி தேனுகா தனது முதலாவது பிறந்த நாளை வவுனியா-நெளுக்குளத்தில் தனது இல்லத்தில் விமரிசையாக கொண்டாடி னார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, அத்தை, மாமாமார், சித்திமார், அண்ணன், மச்சான், பெரி யம்மா, பெரியப்பா, அண்ணன்மார், கௌசி அக்கா, மற்றும் உற்றார், உறவினர்கள், பலகலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்:- யோகீசன்-உக்கிரைன் (மாமா)

## இன்டர்நெட்.ஈ-மெயில்

Internet, E-Mail & Webpage Designing பாடநெறி.
வயது வித்தியாசமின்றி அனைவரும் கட்டாயம் பயிலவேண்டியது.
காலம்: 1½ மாதம் கட்டணம்: 3500/= மட்டுமே.

Computer Hardware பாடநெறி (Technology & Troubleshooting)
கட்டணம்: 6000/=

கணணித்துறையில் ஓர் அடித்தளமிட்டுக்கொள்ள ...........
Microsoft Office'97(Windows, Word, Excel, Access & Power Point)
கட்டணம்: 6500/= மட்டுமே.

Contact as for your Computer Assembling Software Installments & Computer Repairs

Brighton System International[Pvt] Ltd.
414, Galle Road, Colombo 06. Tel:-597409

## தெய்வீக மருத்துவம்

THEIVIGA SAKTHY CENTRE DIVINE MEDICAL AND ASTROLOGICAL SERVICES

சர்வதேச சமூக தெய்வீக சேவை
CHARITY REGED NO. HA\04\BT\219
NTSF துயர் தீர்க்குமிடம்

வாழ்க்கையில் கிரக மற்றும் வேறு தீவினைகளால், தீராத மனத்தாக்கம், காதல், கல்வி, தொழில், விவாகத்தடைகள், கணவன்- மனைவி சந்தோஷமின்மை, வெளிநாட்டுப் பிரயாணத்தடைகள் என்பவற்றிற்கும், வேறு எவ்வித பிரச்சனைகளானாலும் நீங்கி மகிழ்ச்சியாக வாழ இறைவனால் சித்தர்களுக்கு போதித்தருளப்பட்ட புனித புராதன நீங்கற்று தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளித்து வருகின்றோம். காண்டமெனும் சோதிடத்தினால் உங்கள் பலன்களையும் தெரிந்து கொள்ளலாம்.

ஆயுர்வேத மருத்துவர் பாலுசோதிடர் (SAMP) "நேரில் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் கடல் கடந்து உடன் பலன்தரும் தெய்வீக மருந்துப் பொருட்களை தபால்மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தபால் செலவுகளை அனுப்புபவர்களின் விடயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கவனிக்கப்படும்."

தெய்வீகம் ஸ்ரீலங்கா,
தலைமை அலுவலகம்
கல்லடி-அரசவிடுதி வீதி, மட்டக்களப்பு.

THEIVEEGAM SRI LANKA,
HEAD OFFICE
BATTICALOA. SRI LANKA.
T.PHONE: 065-24825

"வாழ்வினி குளை நீக்கி ஒளியையேற்றுவோம்." - "DISPEL DARKNESS IN LIFE LET LIGHT SHINE"

## மஹாசக்தி மருத்துவம்

GOVT APPROVED CHARITABLE Services Reg NO. HA 14-BT/176

காலம் பகைக்கும்போது காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத் தடைகளும் கணவன், மனைவி குடும்பபிரச்சனைகள், அன்புக்குரியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், மதுவிற்கு அடிமை, தகாத உறவு, தீய சக்திகளின் தொல்லைகள், தீராத உடல்நோய், மனநோய், மருந்தீடு, வேறு பிரச்சனைகளும் ஏற்படலாம். இவைகளிலிருந்து விடுபட அல்லது வெற்றிகொள்ள இலவசமாக சோதிட மருத்துவ மனோதத்துவ, மாந்திரீக ஆன்மீக ஆலோசனைகள் வழங்குகின்றார் மஹாசக்தி உபாசகர் (வைத்திய கலாநிதி) சுகாதார அமைப்பினால் பதிவு செய்யப்பட்ட இந்தியன் வைத்தியசாலையின் டாக்டர்- "மந்திரயோகி"

(D.H.M.S.D.Ac (இலங்கை), M.B.B.S.H.D.S.M. (இந்தியா)) வரமுடியாதவர்கள் வெளிநாட்டவர்கள் வெளியில் சொல்லமுடியாத வெட்கமான, வேதனையான பிரச்சனைகள் நோய்கள், தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகள் கோரிக்கைகளை எழுதியும் தொலைபேசி மூலமும் தொடர்புகொண்டு தபால் மூலம் விருப்பங்களை நிறைவேற்றலாம். மாலை 4-30 மணியிலிருந்து 6.30 மணிவரை தியான (MEDITATION) நேரமாகையால் தொடர்பு கொள்ளப்படாது. விரும்பி அனுப்பும் குருதட்சணைகளை ஏற்று முதலில் உடன் கவனிக்கப்படும். மணியோடர்: றாப்ற் எடுக்கவேண்டிய பெயர் GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC) விலாசம். மட்டக்களப்பு கல்லடி, மணிக்கூட்டு கோபுரத்துக்கு கிழக்குப்பக்கம் இராமகிருஷ்ணபுரம் வீதியில்.

தொலைபேசி இலக்கம் 065-24872

INDIAN CLINIC (GURUSKTHY CENTRE)
KALLADY-BATTICALOA (P.O) (SRI LANKA)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 7 8 1923



உதிர்வு 24 03 1998

அமரர் ஸ்ரீமான் ஆறுமுகம் திருநாவுக்கரசு
புளியங்கூடல், ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம்

ஆண்டாண்டு அழுதாலும் மாண்டாரோ மீள்வதில்லை ஆனாலும் அழுது துயர் ஆறாமல் துடிக்கின்றோம் அன்பின் இருப்பிடமாய் அனைவரையும் ஆதரித்தாய் உற்றார், உறவினர்க்கும் உற்சாகம் ஊட்டி வைத்தாய் இன்னல் பெரிதெனினும் இன்முகம் காட்டி நின்றாய் இன்றெமை விட்டு ஐயா இறைவனிடம் ஓடிவிட்டாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள் எல்லோரையும் வாழவைத்த அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது ஐயா

'அன்று எம்முடன் வாழ்ந்து மறைந்தீர்!
,இன்று எம்முடன் மறைந்தும் வாழ்கின்றீர்!
ஐயா உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும் மனைவி, மகன்மார், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தகவல் : சிவகுமார், சத்தியநாதன், ராஜன் (மகன்மார் - கனடா)
666 Spadina Ave # 611, Toronto - Ontario, M4S 248, Canada.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



கனடா ஸ்காபுரோவில் வசிக்கும் சிறிகாந்தன்- பத்மஸ்ரீ தம்பதிகளின் செல்வப்புதல்வன் அஜித் தனது முதலாவது பிறந்தநாளை 29.03.99 திங்கட்கிழமை வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணா, இலங்கையில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, சின்னசித்தப்பா, ஆசைசித்தப்பா, அத்தை, கனடாவில் இருக்கும் அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, பெரியமாமா பெரியத்தை ரஞ்சன் பெரியப்பா, பெரியம்மா, நோவா பெரியப்பா, பெரியம்மா, தயா பெரியப்பா, பெரியம்மா, சுந்தர் பெரியப்பா,

அஜித் 29.03.99

பெரியம்மா, சின்னமாமா, சின்னத்தை, தாத்தா, விஜிதாமாமி, பவன் சித்தப்பா, பெரியக்கா, பெரியண்ணா, சின்னண்ணா, கஜன்மச்சான், சுபதா மச்சாள், துசியக்கா, அபியக்கா, ருசன் அண்ணா, அனுஜன் அண்ணா, அர்வின் அண்ணா, அபரனா அக்கா, விலோசன் அண்ணா, விதுசன் அண்ணா, ஐஸ்வரியா அக்கா, துசானி அக்கா, கபில் மச்சான் மற்றும் உற்றார் உறவினர்கள் பிள்ளையார் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். அன்றைய தினம் பிறந்த தினத்தை கொண்டாடும் விஜிதா மாமியை அஸ்வரன், அஜித், வாழ்த்துகின்றார்கள். திரு திரு மதி. சிறிகாந்தன், கனடா.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



பிரபாகரன்-பிரதீப் 25.03.99

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த பிரபா-கீதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் பிரதீப் 25.03.99 அன்று கனடாவில் தனது முதலாவது பிறந்த தினத்தை கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா அம்மா, அக்கா, இலங்கை- யாழ்ப்பாணத்தில் வசிக்கும், அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், கொழும்பில் வசிக்கும், மாமா, அத்தை, மச்சான்மார், பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா, கனடாவில் வசிக்கும் அம்மம்மா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியம்மா, பெரியப்பா, அக்காமார், ஜேர்மனியில் வசிக்கும், மாமா, அத்தை, மச்சான், மச்சாள், அண்ணன்மார், பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், பிரான்ஸில் வசிக்கும் பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார், சகல கலைகளையும் கற்று பல்லாண்டுகாலம் நீடுழி வாழ வாழத்துகிறார்கள்.

தகவல்: சி.குமாரசாமி (மாமா)கொழும்பு.





படிப்பகம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நாரதர்**

**கொ**ழும்பில் தாக்குதல் நடத்துவதற்கான திட்டங்கள் புலிகளது மட்டக்களப்பு மையத்திலிருந்தே தற்போது தீட்டப்படுகின்றன.

ஏற்கனவே ஒரே தினத்தில், கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

மலையகப் பகுதியில் இயங்கும் புலிகளது அணிகளும் மட்டக்களப்பு மையத்தின் மூலமே வழிநடத்தப்படுகின்றன.

கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு அம்பாறை ஆகிய பகுதிகளில் புலிகளது நடவடிக்கைகள் ஒரே மையத்திலேயே திட்டமிடப்படுகின்றன.

கொழும்பில் செவ்வாய் குண்டு வெடிப்புகளும் மட்டக்களப்பிலேயே திட்டமிடப்பட்டன.

தொடர்ந்து இரண்டு செவ்வாய்க்கிழமைகள் ரயில், பஸ், மின்மாற்றி என்று குண்டுகள் வைத்த புலிகள், மூன்றாவது செவ்வாய்க்கிழமையான 16.03.99 அன்று சற்றுப் பெரிய குண்டுத் தாக்குதலுக்கு திட்டமிட்டனர்.

புலிகள் பஸ், ரயில், மின்மாற்றி போன்றவற்றுக்கே குண்டு வைத்துவந்ததால், அத்திசையிலேயே பாதுகாப்பு தரப்பினரின் கவனம் குவிந்திருந்தது.

அவ்வாறு கவனம் குவிந்திருந்தபோது அவர்கள் எதிர்பாராத இலக்கொன்றை புலிகள் தெரிவு செய்தனர்.

அதுதான் இன்ஸ்பெக்டர் நிலாப்தீன். பயங்கரவாத தடுப்பு பிரிவில் முக்கிய அதிகாரியாக பொறுப்பு வகிப்பவர் நிலாப்தீன்.

16.03.99 அன்று இரண்டு தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகளை தீர்த்துக்கட்ட புலிகளது மட்டக்களப்பு மையத்தில் திட்டம் தயாரானது.

ஒருவர் மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சங்கர். இன்னொருவர் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிலாப்தீன்.

கிழக்கில் பொலிஸ், மற்றும் பாதுகாப்பு தொடர்பான பணிகளில் உள்ள தமிழ் பேசும் அனைவரும் விலக வேண்டும் என்று புலிகள் பலமுறை எச்சரித்துள்ளனர்.

பொலிஸ் அதிகாரி சங்கர் சிலகாலம் முன்புதான் மட்டக்களப்பில் பணியாற்றச் சென்றுள்ளார்.

தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகளால் புலிகள் பற்றிய விபரங்களையும் சுலபமாக பெற்றுக் கொள்ள முடியும். சிங்கள அதிகாரிகள் என்றால் குறிப்பாக மொழிப் பிரச்சனை ஒரு தடையாக இருக்கும்.

வடக்கு-கிழக்கில் முக்கிய பொறுப்புகளில் உள்ள தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகள்மீது புலிகள் குறிவைப்பதற்கு அதுவும் ஒரு காரணம்.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக வடபகுதியில் பஸ்தியாம்பிள்ளை, பத்மநாதன், குருசாமி, குமார், (1) சண்முகநாதன், (2) சண்முகநாதன் போன்ற பல பொலிஸ் அதிகாரிகளும், பொலிசாரும் போராட்ட ஆரம்பக் கட்டத்தில் புலிகளாலும், குட்டிமணி, தங்கத்துரை ஆகியோராலும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இப்போதும் தமிழ் பேசும் பொலிஸ் அதிகாரிகள் பலர்மீது புலிகள் குறிவைத்துள்ளனர். கொழும்பிலும் சில தமிழ் பேசும் அதிகாரிகள் புலிகளது குறியில் உள்ளனர்.

மட்டக்களப்பில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி தியோபிலஸ்மீது புலிகளுக்கு கடும் கோபம். பல தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்தவர் என்று குற்றம் சாட்டியிருந்தனர்.

தியோபிலஸ் மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்கு மாறினார். அவரைப்பற்றி தொடர்ந்து உளவறிந்து, கொழும்பில் வைத்து புலிகள் தீர்த்துக்கட்டினார்கள்.

இம் முறை மட்டக்களப்பிலும், கொழும்பிலும் ஒரே தினத்தில் இரண்டு தமிழ் பேசும் பொலிஸ்அதிகாரிகளை தீர்த்துக் கட்ட புலிகள் திட்டமிட்டனர்.


மட்டக்களப்பில் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் குண்டுவெடிப்பு மூலம் பொலிஸ் அதிகாரி சங்கரை தீர்த்துக் கட்டுவது.

கொழும்பில் கரும்புலித் தாக்குதல் மூலம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிலாப்தீனை தீர்த்துக் கட்டுவது என்பதே புலிகளது திட்டம்.

ஆனால், இரண்டு திட்டங்களும் பிசகி விட்டன. இலக்கை எட்ட முன்பே பிசகி விட்டன.

மட்டக்களப்பில் மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த நடேசானந்தராசா மூலம் அனுப்பிய குண்டு, பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக வாயிலில் சோதனையில் சிக்கியது.

கொழும்பில் கல்கிசையில் கரும்புலி



சிங்களப்பெயரில் அடையாள அட்டை

தாக்குதலுக்கு சென்ற பெண்புலி இலக்கை எட்ட முன்னரே குண்டை வெடிக்கச் செய்ததால், நிலாப்தீன் சிறு காயங்களுடன் தப்பிவிட்டார்.

கொழும்பில் புலிகளது இலக்கில் உள்ள

## வேவுப் புலிகள் திரட்டிய தகவல்!

பொலிஸ் அதிகாரிகளில் நிலாப்தீனும் ஒருவர். அவர்மீது தாக்குதல் நடந்ததால், அவர் மட்டும்தான் இலக்கு என்று அர்த்தமாகாது.

குறியில் உள்ளவர்கள் பற்றி முதலில் உளவுத் தகவல்கள் திரட்டப்படும். அதில் முதலில் தாக்க வசதியான இலக்கு எதுவோ அது தெரிவு செய்யப்படும்.

கொழும்பில் தேர்தல் கால தாக்குதல்கள் நடத்த புலிகள் தீர்மானித்தபோது, கரும்புலித் தாக்குதல் ஒன்றையும் நடத்த திட்டமிட்டனர். நிலாப்தீன் பற்றிய தகவல்கள் ஏற்கனவே முழுதாக திரட்டப்பட்டு இருந்தமையால், அவரைத் தீர்த்துக்கட்ட மட்டக்களப்பு மையத்திலிருந்து உத்தரவு கிடைத்தது.

உத்தரவை ஏற்றவர் ஜீவேந்திரன். ஜீவன், சீலன் ஆகிய பெயர்களும் உண்டு. கொழும்பில் பல்வேறு குழுக்களாக புலிகள் நடமாடுகின்றனர். ஒரு குழு பற்றி மற்றொரு குழுவுக்கு தெரியாது. ஒவ்வொரு குழுவுக்கு ஒரு பணி.

கொழும்பில் புலிகளுக்கு எதிரான பொலிஸ் அதிகாரிகளைப் பற்றி தகவல் திரட்டும் வேலை ஜீவேந்திரனுக்கு. அதற்கு தோதாக வத்தளையில் உளவுப் பிரிவைச் சேர்ந்த முஸ்லிம் பொலிஸார் ஒருவரையும் பழக்கம் பிடித்துக் கொண்டார். இவர் புலி என்று அவருக்கு தெரியாது. நட்பில் பணத்தை தாராளமாக புழங்கவிட்டார் ஜீவேந்திரன்.

கரும்புலித் தாக்குதலுக்கு தயாராக கொழும்பில் பெண் கரும்புலிகள் பலர் நீண்ட காலத்திற்கு முன்னரே வந்து தங்கியுள்ளனர். வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு ரூபத்தில் தங்கியுள்ளனர்.

அவர்களில் நிலாப்தீன் தாக்குதலுக்கு தெரிவானவர் குயின் மேரி. மன்னார் வங்காலையைச் சேர்ந்தவர். புறக்கோட்டையில் 17ம் இலக்க வீட்டில் மன்னார் குடும்பம் ஒன்றுடன் தங்கியிருந்தார். 1998 டிசம்பரில்தான் கொழும்புக்கு வந்திருந்தார். கம்பியூட்டர் கல்வி கற்றுக் கொண்டார்.

சிங்களப் பெண் போன்ற தோற்றத்துடன் சிறியாணி பிரியதர்சினி அபேசிங்க என்ற பெயரிலும் ஒரு போலி அடையாள அட்டையை இவருக்காக தயார் செய்து கொடுத்தார் ஜீவேந்திரன். ஆனால் தாக்குதலுக்கு செல்லும்போது அந்த அடையாள அட்டை பயன்படுத்தப்படவில்லை.

தாக்குதலுக்கு குறிக்கப்பட்ட தினத்தன்று காலையில் வத்தளையில் இருந்தே ஜீவனும், மேரியும் ஒன்றாகப் புறப்பட்டுள்ளனர். அப்போது மேரி கறுத்த பாவாடை அணிந்திருந்ததாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. ஆனால் தாக்குதலின்போது சிவப்பு நிற பாவாடையுடன் சென்றுள்ளார். எனவே, கொழும்பு நகருக்குள் வைத்தே உடைமாற்றி தற்கொலை அங்கியை அணிந்து சென்றுள்ளார்.

கொழும்பு நகரில் புலிகளது இரகசிய மறைவிடம் ஒன்று தற்கொலை அங்கிகள் போன்றவற்றுடன் இயங்கிவருவதையே இது வெளிப்படுத்துகிறது. ஜீவேந்திரன் உயிரோடு பிடிபட்டிருந்தால் அந்த மறைவிடம் அறியப்பட்டிருக்கும்.

நிலாப்தீனுக்கு தொலைபேசி அழைப்பு வந்து அவர் சென்றதாகவும், தாக்குதல் நடந்ததாகவும் வெளியான செய்திகளில் உண்மையில்லை. தொலைபேசி அழைப்பு கொடுத்து நிலாப்தீனை அழைக்க முடியுமானால், வசதியான இடத்தில் வைத்து தாக்கியிருப்பார்கள். கரும்புலித் தாக்குதலை, அதுவும் பொலிஸ் நிலையம் அருகே சிரமம் எடுத்து மேற்கொள்ளத் தேவையிருந்திருக்காது.

நிலாப்தீன் தினமும் எப்போது அலுவலகம் வருகிறார், எப்போது திரும்புகிறார் என்று தொடர்ந்து கவனித்து வந்தார் ஜீவன். மாலை 5.30க்கும் 6.00 மணிக்கும் இடையே அலுவலகத்தில் இருந்து திரும்புவது வழக்கம் என்று தெரிந்தது.

துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடிய சூழல் இல்லை. பொலிஸ் நிலையம் அருகில் உள்ளது. ஆகவே உத்தரவாதமான தாக்குதலாக கரும்புலித் தாக்குதல் நடத்த தீர்மானித்தனர்.

நிலாப்தீனின் நடமாடும் ஏனைய இடங்களை புலிகளால் கண்டறிய முடியாததும் கல்கிசையில் பொலிஸ் நிலையம் முன் தாக்குதலுக்கு திட்டமிட முக்கிய காரணம். தனக்கு புலிகளால் ஆபத்து நேரும் என்பதை ஊகித்து தனது நடமாட்டங்களை நிலாப்தீன் இரகசியமாக வைத்திருக்கிறார்.

16.03.99 அன்று ஐந்து மணியளவில் ஒட்டோ ஒன்றிலே வந்து கல்கிசை பொலிஸ் நிலையம் அருகே ஜீவனும், மேரியும் இறங்கினார்கள். மேரியை பஸ் நிறுத்தம் அருகே நிற்கவைத்துவிட்டு, மறுபுறம் சென்று காத்திருந்தார் ஜீவன்.

மாலை 5.45 மணியளவில் நிலாப்தீனின் கார் அலுவலகத்தில் இருந்து வெளியே வந்தது. அதனைக் கண்டதும் மறுபுறத்தில் நின்ற ஜீவன் தெருவை கடந்து ஒடி வந்து, மேரியிடம் சென்று காரைக் காட்டி விரைவுபடுத்தியிருக்கிறார்.

அதுதான் ஜீவன் செய்த தவறு. ஜீவன் மேரியிடம் பதட்டமாக ஓடி வந்ததையும், விரைவுபடுத்தி அனுப்பியதையும் பஸ் நிறுத்தத்தில் நின்ற பலர் பார்த்துள்ளனர்.

அதே சமயம் மேரியும் பதட்டமடைந்து காரை நோக்கி ஓடுகிறார். நிலாப்தீனின் காரை மேரி நெருங்கும் முன்பாக ஒட்டோ ஒன்று தற்செயலாக குறுக்கிடுகிறது.

வெட்டி வெட்டி குறுக்கும் மறுக்குமாக ஓடுவது ஒட்டோக்காரர்களது வழக்கம். நிலாப்தீனின் காரை கடந்து வந்த ஒட்டோ, மேரிக்கும் காருக்கும் இடையே வந்தபோது கார் தாண்டிச் செல்லப் போகிறது என்ற பதட்டத்தில் மேரி குண்டை வெடிக்கவைத்துவிட்டார்.

குண்டு வெடித்ததும் காருக்கு ஏற்பட வேண்டிய பாதிப்பை ஒட்டோ தடுத்து விட்டது. ஒட்டோவில் இருந்த ஒட்டுநரும், இன்னொருவரும் பலியானார்கள்.

குண்டின் சன்னங்கள் சிதறிப் பாய்ந்ததில் நிலாப்தீனின் கார் கண்ணாடிகள் மட்டும் உடைந்தன. சிறு காயத்துடன் நிலாப்தீன் உயிர் தப்பினார். குண்டு அதிர்வு காரணமாக அவர் மயக்கமுற்றதாக தெரிகிறது.

ஜீவன் அவ்விடத்தைவிட்டு உடன் சென்றிருந்தால் தப்பியிருக்கலாம். தாக்குதலின் விளைவை அறிய எட்ட நின்றிருக்கிறார். மேரியை அவர் அனுப்பி வைத்ததை கண்டவர்கள் ஒடிச் சென்று பொலிசாரிடம் கூறிவிட்டனர்.

அதன் பின்னர் பொலிசார் துரத்திப் பிடிக்க, தன்னைப் பிடித்த பொலிஸ்காரரை தாக்கிவிட்டு, தன் சட்டைப் பையில் கிடந்த சயனைட்டை கடித்து பலியானார் ஜீவன்.

பின்னர் ஜீவன் இருந்த வத்தளை வீட்டில் 9 எம்.எம். பிஸ்டல் ஒன்றும்,சயனைட் வில்லைகளும், மேரியின் போலி அடையாள அட்டை போன்றவையும் கைப்பற்றப்பட்டன. ஆனால் பெருந்தொகையான ஆயுதங்கள், வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

தற்போது பொலிசார் முன்பாக விசுவரூபமாக எழுந்துள்ள கேள்விகள் இதுதான்;

1) குண்டு பொருத்திய அங்கியை மேரி எங்கு அணிந்து வந்தார்?
2) எங்கிருந்து, ஒட்டோவில் ஏறிவந்தனர்?

இதற்கிடையே களனி ரயில் பாலத்தில் வைக்கப்பட்ட குண்டு ஒன்றை பொலிசார் கைப்பற்றினார்கள்.

16.03.99 செல்வாய்க்கிழமை வெடிப்பதற்காக அங்கு கொண்டு செல்லப்பட்ட குண்டே வெடிக்கத் தவறி, 17.03.99 இல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

குண்டு வெடித்ததோ இல்லையோ, கொழும்பில் நகரிலும், புற நகரிலும் குண்டுகளுடன் புலிகள் நடமாடுகிறார்கள் என்ற பதட்டத்தை ஏற்படுத்தி விட்டது. புலிகள் விரும்புவதும் அதனைத்தான்.

○●○

**'எ**திரி எம்மைத் தேடி வரமுன்பு நாம் அவர்களை தேடி அவர்கள் வாயிலுக்கே செல்ல வேண்டும்' இதுதான் புலிகளது தலைவர் பிரபாகரன் அடிக்கடி கூறும் வாசகம். அதற்கேற்ப தாக்குதல்களும் பலமுறை நடத்தப்பட்டுள்ளன.


சமீபத்தில் மன்னார் தள்ளாடி முகாம்மீதான தாக்குதலும் தமது எதிரியை முந்துகின்ற புலிகளது தாக்குதல்தான்!

மன்னார் பூநகரி பாதை ஊடாக பெரும் நகர்வு ஒன்றுக்கு படையினர் தயாராவதாக புலிகளுக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

தள்ளாடி இராணுவ முகாமில் ஆயுத தளபாடங்கள் குவிக்கப்பட்டு, நகர்வுக்கான ஏற்பாடுகள் நடப்பதை புலிகள் வேவு பார்த்தனர்.

தள்ளாடி முகாமுக்குள் புலிகளது வேவுப் பிரிவினர் புகுந்து தகவல் திரட்டினர். முகாமில்

## கிட்டுப் பீரங்கிப் படையணி தாக்குதல்!




எங்கெங்கு ஆயுத தளபாடங்கள் வைக்கப்பட்டுள்ளன, எங்கு புதிதாக வந்த இராணுவ வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன போன்ற விபரங்களை துல்லியமாக அறிந்த பின்னரே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முகாம்களுக்குள் இரவோடு இரவாக ஊடுருவி தகவல் திரட்டுவது 'றெக்கி ரிப்போர்ட்' என்று கூறப்படும். முட்கம்பி வேலிகள், காவலரண்கள், மற்றும் பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தாண்டி ஒருவரோ அல்லது சிலரோ மட்டும் உட்பிரவேசித்து தகவல் திரட்டுவர்.

பெரும் பாதுகாப்பான பலாலி இராணுவ தளத்தின் மையம்வரை யார் கண்ணிலும் படாது சென்று அங்கு நிறுத்திவைக்கப்பட்ட விமானங்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் புலிகள். முல்லைத்தீவு முகாம் போன்றவற்றுக்குள்ளும் 'றெக்கி ரிப்போர்ட்' துல்லியமாக எடுத்தபின்பே அதற்கேற்ப திட்டம் தீட்டி, தாக்குதல் நடத்தப்பட்டது.

தள்ளாடி இராணுவ தளம் பாரிய நிலப்பரப்பில் அமைந்திருக்கிறது. மன்னார் தீவையும், மன்னார் பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் சந்தியில் இது அமைந்துள்ளது. இங்கிருந்தே வவுனியா-மன்னார் சாலையும், மன்னார்-பூநகரி சாலையும் பிரிந்து செல்கின்றன.

வேவுத் தகவல் பெறுவதில் தேர்ச்சி பெற்ற புலிகளது வேவு அணிகளுக்கு தள்ளாடி தளத்திற்குள் ஊடுருவி தகவல் திரட்டுவது பெரிய காரியமல்ல. தகவல் திரட்டியது மட்டுமல்ல, தாக்குதல் நடந்தபோதும் வேவுப் புலிகள் சிலர் முகாம் பகுதிக்குள் பதுங்கி இருந்துள்ளனர்.

17.03.99 அன்று மாலை ஆறரைமணியளவில் முதலாவது ஷெல் தள்ளாடி முகாம் நோக்கி புலிகளால் ஏவப்பட்டது. ஷெல்கள் சென்று விழுந்து கொண்டிருக்க, வேவுப் புலிகள் சிலர் தரையோடு தரையாக நகர்ந்து முகாம் பகுதிக்குள் புகுந்து விட்டனர். அவர்களும் ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் இருந்தபோதும், அதற்கும் தயாராகவே அனுப்பப்பட்டனர்.

முகாமுக்குள் புலிகள் ஏவிய ஷெல்கள் எங்கெங்கு விழுகின்றன என்று பார்ப்பதும், சரியான இடத்தில் விழுகிறதா என்பதை உடனுக்குடன் வோக்கி டோக்கியின் மூலம் பீரங்கிப் படையணி தளபதிக்கு அறிவிப்பதுமே அவர்களது வேலை.

அதனால்தான் புலிகள் ஏவிய ஷெல்கள் ஆயுத தளபாடங்களுடன் நின்ற வாகனங்கள், மற்றும் ஆயுதக் களஞ்சியப் பகுதி போன்றவற்றில் துல்லியமாக விழுந்து வெடித்தன.

ஷெல் ஏவப்படத் தொடங்கியதும் படையினர் படுத்து நிலை எடுத்தமையால் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்படவில்லை.

புலிகளது நோக்கமும் படைக்கலங்களை அழித்தொழிப்பதாகவே இருந்திருக்கிறது.

உள்ளே புகுந்த வேவுப் புலிகள் திரும்பி வந்து கொடுத்த மேலும் சில தகவல்களை வைத்து 18.03.99 காலை எட்டுமணிக்கும் மறுபடி ஷெல்கள் ஏவப்பட்டன.

தள்ளாடி முகாம் தாக்குதலில் 15 பேர் பலியானதாக படை வட்டாரங்களே கூறுகின்றன என்றால், இழப்பு எத்தகையது என்பதை ஊகிக்கலாம். ஆயுதக் களஞ்சியம் முற்றாக எரிந்துள்ளது. இராணுவ வாகனங்கள் பத்துவரை நாசமாகியுள்ளன. படை நகர்வுக்கு கொண்டுவரப்பட்ட வாகனங்களில் இருந்த பலரக ஆயுதங்களும் நாசமாகியுள்ளன. பல கோடி ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தள்ளாடி முகாம் அமைந்திருப்பது பரந்த வெளியான நிலப்பரப்பில். எனவே முகாமை முற்றுகையிட்டு தாக்குவதானால் பாரிய ஆட்பல இழப்பை எதிர்கொள்ள நேரும். அதனாலேயே ஷெல் தாக்குதலுடன் நிறுத்திக் கொண்டனர். கிட்டுப் பீரங்கிப் படையணியே இத் தாக்குதலை நடத்தியுள்ளது. முகாம் ஒன்றுமீது கிட்டு பீரங்கியணியால் நடத்தப்பட்ட முதலாவது பாரிய தாக்குதல் இதுதான்.

இத் தாக்குதலுக்கு புலிகளது ஆட்டிலெறியும், மோட்டார்களும் பயன்பட்டுள்ளன. ஆனால் படை வட்டாரங்கள் புலிகள் புதியகள ஆயுதம் ஒன்றை பயன்படுத்தி இருக்கலாம் என்று கூறியதாக ஞாயிறு ஆங்கிலப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. மன்னார் தள்ளாடி முகாம் தாக்குதலால் மன்னார் பூநகரி பாதையில் படை நகர்வு தள்ளிப்போனது.

நாம் சென்றவாரம் கணிப்பு வெளியிட்டது போல, மடுவை கைப்பற்றும் படைநகர்வு ஒன்று 18.03.99 காலையில் மேற்கொள்ளப்பட்டது. புலிகள் பாரிய எதிர்ப்பு காட்டாதபோதும் படை நகர்வு குறிப்பிட்ட வரையறையுடன் நிறுத்தப்பட்டது. இது புலிகளின் எதிர்ப்பை ஆழம் பார்க்கும் வெள்ளோட்டம் போன்று நடத்தப்பட்டது.

தள்ளாடி முகாம் தாக்கப்படாதிருந்தால் 18.03.99 அன்று பல முனைகளில் மன்னாரில் படை நகர்வு மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது.

ஆனால் தள்ளாடி முகாம் தாக்குதல் செய்தி மாகாணசபை தேர்தலில் அரசின் வீரகர்ஜனைக்கும் விழுந்த அடியாகிவிட்டது. ஆகவே, முன்பு திட்டமிட்டபடி நகர முடியாது போனாலும், ஏதாவது ஒரு நகர்வை மேற்கொண்டாக வேண்டிய கட்டாயம்.

அப்படி நகர்ந்தால்தான் தேர்தல் மேடைகளில் முழங்க வசதியாக இருக்கும். தள்ளாடி தாக்குதல் செய்திகளையும் அமுக்கலாம்.

ஆகவேதான் 22.03.99 அன்று மடுறோட் வழியாக படை நகர்ந்து மடுவைச் சுற்றியுள்ள பகுதிகளை கைப்பற்றியது. இரணை இலுப்பைக் குளத்தில் நிலைகொண்டுள்ள படையுடன் இணைப்பை ஏற்படுத்தி பாதுகாப்பு வேலிகளை மேலும் விஸ்தரித்துள்ளனர்.

பலத்த மோதல் நிகழ்ந்தது. இரு தரப்பும் ஆட்டிலெறிகளை பயன்படுத்தியது. படை முன்னேறும்போது புலிகள் பங்கர்களுக்குள் இருந்து தாக்கினர் என்றெல்லாம் செய்திகள் வந்தன. ஆனால், புலிகள் எதிர்ப்பே காட்டவில்லை. தமது தரப்பில் யாரும் பலியானதாகவும் புலிகள் கூறவில்லை.

இரணை இலுப்பைக்குளம் பகுதியில் படையினர் நிலைகொண்ட பின்னர் புலிகள் தாக்குவர் என்று கூறினோம் அல்லவா. 21.03.99 அன்று இரணை இலுப்பைக்குளத்திற்கும் பூவரசங்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் புலிகள் தாக்குதல் நடத்தினர். இதில் ஏழு படையினர் பலியாகினர். இத்தகைய தாக்குதல்கள் இனி தொடரப் போகின்றன.

மடுப்பகுதியிலும் படையினர் நிலைகொண்ட பின்பே புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். முன்னேறும்போது மறிப்புச் சண்டையில் ஈடுபடவில்லை.

படையினர் வன்னியில் அகலக் கால் வைத்துள்ளதால், புலிகளது பரவலான தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

'யுத்த கோஷ-02' புலிகளை பலவீனப்படுத்தாது. படையினரின் செறிவுதான் பலவீனமாகப் போகிறது. அதனால் புலிகள் ஊடுருவித் தாக்கவும் வாய்ப்புக்கள் அதிகமாகிவிட்டன.

## அதிரடி அய்யாத்துரை



**யுத்தமே ஒரே தீர்வு** என்று முழங்கி பல்லாயிரம் உயிர்களைப் பலி எடுத்தவன் அசோக சக்கரவர்த்தி. பின்னர் புத்தரின் பக்தனாகி, சாந்தியைப் போதித்தவன். காலம் கடந்த ஞானமாவது ஏற்பட்டது. அந்த அசோகனின் போதனைகள் அடங்கிய வெண்கலப் படிமம் ஒன்றினை இந்திய வெளிநாட்டமைச்சர் சிறீலங்காவின் வெளிநாட்டமைச்சருக்குப் பரிசளித்துள்ளார். அசோகனைப் போல மனம் திருந்தி சாந்தி மார்க்கத்தைக் கடைப்பிடிக்குமாறு சொல்லாமல் சொல்லிவிட்டாரோ! அறிவுரை சொன்னால் தலையிடு என்பார்கள். அதுதான் அசோகனின் போதனைகளைக் கொடுத்துள்ளாராக்கும்!

**யாழ் குடாநாட்டில்** காணி சுவீகரிப்பு என்று மட்டும்தான் கூட்டணி கூறுகிறது. அங்கு குடியேற்றத் திட்ட யோசனை பற்றி மூச்சுக்கூடவிடவில்லை. முகாம் விஸ்தரிப்புக்கு என்று சிருடை தரப்பு சொல்கிறதாம். அதை இவையும் நம்பி அப்படியே சொல்லுகினம். இது தெரியாமல் செய்யும் தவறு அல்ல; தெரிந்தே செய்யும் சாணக்கியம். தாம் எதிர்ப்பதாக சனம் நினைத்தால் சரிதானே என்று நினைக்கினம். இப்ப சனம் புத்திசாலிகள். அறிக்கைகளை அலசி ஆராய்ந்து பார்த்து நழுவல்கள், வழுவல்களைக் கண்டு பிடிக்கினம்.

**செம்மணிப் புதைகுழியை** தற்போது தோண்டினால் என்ன கிடைக்கும்? யார் தோண்டுகினமோ அவையின் விருப்பத்துக்கு ஏற்பத்தான் எதுவும் கிடைக்கும்...! என்ன புரியுதோ?! அது ஒரு புறமிருக்க அப்படித் தோண்டுவதைக்கூட மாகாண சபைத் தேர்தல் முடிந்த பின்னர்தான் நடத்த உத்தேசமாம்.

**வவுனியாவில்** ரெண்டு எழுத்து இயக்கத் தலைவரது பெயருடன் இருந்ததால் ஒருவர்பாடு திண்டாட்டமாகிப் போச்சுது. தமிழ்க் கட்சி ஒன்று அவரைக் கடத்திச் சென்று கப்பம் கேட்குதாம். அதிகமில்லை, ஒரு இலட்சம் மட்டும்!

**கொன்று தீர்த்துவிட்டு,** அழுது தீர்ப்பதுதான் புதிய கொலை யுக்தி. வவுனியாவில் பெண்மணி ஒருவரை தமிழ் இயக்கம் ஒன்று கொலை செய்தது. அதற்குப் பதிலடியாக மற்றொரு இயக்கம் தனது பகை இயக்க உறுப்பினரது உறவினரைத் தீர்த்துக் கட்டியது. இதன் பின்னர் பெண்மணியைத் தீர்த்துக்கட்டிய இயக்கம் அந்தப் பெண் மணிக்காகவும், தனது ஆதரவாளருக்காகவும் அனுதாபக் கண்ணீர்விட்டு ஒரு கலக்குக் கலக்கிப் போட்டுது. சனத்தை எந்தளவு முட்டாள்களாக நினைக்கினம் பார்த்தியளோ?

**தலைநகரில்** நண்பர் ஒருவர் கூறினார்: "இப்ப இருக்கிற நிலவரத்திலை மனைவியோடு சேர்ந்து வெளியே நடமாடப் பயமாக் கிடக்குது. அதனால் மனைவி முன்னால் போக கொஞ்சத் தூரம் விட்டு நான் தொடர்ந்து போக வேண்டிக் கிடக்கு!" என்றார். "கல்யாணத்திற்கு முந்தி இதைத்தானே செய்தனீர்? இப்பவும் தொடருதோ?" என்று கேட்டேன். "சும்மாபோம். தம்பதியாக வந்து பஸ்ஸில் குண்டு வைச்சவை எண்ட செய்தி வந்தது தெரியாதோ? தம்பதியாகப் போனால் சந்தேகம் வந்து தொலைக்காதோ?" என்றார்.

**வடக்கு-கிழக்கு** முன்னாள் முதல்வர் இந்தியா திரும்பியிருக்கிறார். அவர் எந்தநேரம் திரும்பினார் என்பது உட்பட பல தகவல்களை கட்சிக்குள் முக்கியமானவரே பத்திரிகைகளுக்கு இரகசியமாகக் கொடுத்தாராம். கட்சிக்குள் இராணுவப் பிரிவை உருவாக்கும் திட்டம் முன்னாள் முதல்வருக்கு இருக்கிறது என்றும், அதற்கு கட்சிக்குள் ஆதரவில்லை என்றும் கதை கூறியதும் அவர்தானாம். தலைமைக்கு ஆபத்து என்றால் கூட இருப்போரின் தலையைக் காவு கொடுக்கவும் தயங்காத ஜனநாயகவாதிகளைப் பார்த்தியளோ?

**இவ்வாரப் பொன்மொழி.** அறிஞர் பிளாட்டோவின் உபயம்.

"நல்லவர்கள்
வெகு சிலரே!
தீயவர்களும்
வெகு சிலரே!
பெரும்பாலானவர்கள்
இவை இரண்டுக்கும்
மத்தியில் இருக்கிறார்கள்!"



படிப்பகம்

226

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# உயிரோடு பிடிக்க ஒத்திகை

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூர். தமிழர்கள் அதிகம் வாழும் நகரங்களில் அதுவும் ஒன்று.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களும் பெங்களூரில் இருக்கின்றன.

சிவராசனையும், சுபாவையும் பெங்களூரில் பாதுகாப்பாக தங்கவைக்கலாம் என்று புலிகளது நெருங்கிய ஆதரவாளர்கள் தீர்மானித்தனர்.

ராஜீவ் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்பது தமிழ்நாட்டிலிருந்த புலிகளது தீவிர ஆதரவாளர்களுக்கு நன்கு தெரிந்துவிட்டது.

அவர்கள் ராஜீவ் கொல்லப்பட்டதை நியாயம் என்றே நினைத்தனர். சென்னையில் உள்ள நேரு சிலையைக்கூட குண்டு வைத்து தகர்க்க முற்பட்டது தமிழ்நாட்டில் உள்ள அமைப்பு ஒன்று.

அந்தளவுக்கு இந்திய மத்திய அரசு மீதும், மத்தியில் ஆட்சி புரிபவர்கள்மீதும் கடும் கோபம் கொண்ட அமைப்புக்கள் தமிழகத்தில் உள்ளன.

எண்ணிக்கையில் இவர்கள் பெருமளவில் இல்லையானாலும், பத்துப் பேர் நூறுபேருக்கு சமமானவர்கள்.

தமிழக அரசியல்வாதிகளைவிட தமிழக இன உணர்வு அமைப்புக்களையே புலிகள் ஆரம்பம் முதல் நம்பினார்கள்.

அரசியல்வாதிகள் தமது நலன் கருதியே முடிவுகளை எடுப்பார்கள். தமது நலனுக்கு ஆபத்து என்றால் நம்மை கைவிடவும் தயங்க மாட்டார்கள். இன உணர்வு அமைப்புக்கள் மட்டுமே கடைசிவரை நம்மோடு நிற்பார்கள் என்று புலிகள் கூறிவந்தனர்.

அந்த நம்பிக்கை வீணபோகவில்லை. சிவராசன், சுபா ஆகியோரை பாதுகாக்க அவர்கள் முன்வந்தனர்.

ஆயினும் இரகசியம் கருதி மிக நம்பிக்கையான சிலருடன் மட்டுமே சிவராசன் தொடர்புகளை வைத்திருந்தார்.

## பலர் கைது

புலிகள் எதிர்பார்த்ததுக்கு மாறாக சிறப்பு புலனாய்வுக் குழு துரிதமாக செயற்பட்டது.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலரை குறிவைத்து மடக்கியது. அதனால் முக்கிய உறுப்பினர்கள் பலர் சயனைட் உட்கொண்டு பலியானார்கள்.

சிவராசனுக்கு உதவியாக தமிழ் நாட்டுக்கு அனுப்பப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினரான நேருவையும் புலனாய்வுக்குழு வலைவிரித்து பிடித்தது. நேரு சயனைட் உட்கொண்டு மரணமானார்.

புலிகளின் தமிழகப் பொறுப்பாளர் சாந்தன் பற்றி தகவல்களையும் புலனாய்வுக் குழு பெற்றிருந்தது.

## மாட்டிய கடிதம்

புலனாய்வுக்குழு தனக்கு புள்ளி வைப்பது சாந்தனுக்கு தெரிந்துவிட்டது.

யாழ்ப்பாணம் செல்ல முயன்றார். முடியவில்லை

இரகசியவானொலி உரையாடலை புலனாய்வுக்குழு ஒட்டுக் கேட்டது புலிகளுக்கு தெரிந்துவிட்டது.

அதனால் இந்தியாவுக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையேயான வானொலித் தொடர்புகளை புலிகள் நிறுத்திவிட்டனர்.

எனவே, இரும்பொறை என்னும் தமிழக ஆதரவாளர் ஒருவரை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார் சாந்தன்.

இரும்பொறை புலிகளின் மிக நம்பகமான ஆதரவாளர்.

இந்திய மீனவர் படகு ஒன்றில் மீனவர் போன்று இரும்பொறை புறப்பட்டார்.

தாமும் சென்றால் இனம் காணப்படலாம் என்பதால் இரும்பொறையை மட்டும் அனுப்பி வைத்தனர்.


கடற்பகுதியில் கண்கொத்திப் பாம்பாக கண்காணிப்புச் செலுத்தப்பட்ட நேரம் அது.

இரும்பொறை சென்ற படகு சோதனையிடப்பட்டு, அவர் கைது செய்யப்பட்டார்.

இரும்பொறையிடம் சாந்தன் கொடுத்தனுப்பிய கடிதமும் கைப்பற்றப்பட்டதாக புலனாய்வுக் குழு கூறியது.

அந்தக் கடிதம் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு சாந்தனால் எழுதப்பட்டது என்று புலனாய்வுக்குழு கூறியது.

அக் கடிதமும் பின்னர் ராஜீவ் கொலை வழக்கில் தடயமாகியது.



சாந்தன் எழுதிய கடிதம்

அன்புள்ள அண்ணனுக்கு!

நீண்ட இடைவேளைக்குப் பின் வேதனைகளும், சோதனைகளும் நிறைந்துள்ள நேரத்தில் இக் கடிததததை எழுதுகிறேன். எனினும் மனம் தளரவில்லை.

இங்கு நடந்த விசாரணைகளில் எம்மைப் பற்றிய செய்திகளை முழுமையாகவே அறிந்து விட்டனர். இத்தனைக்கும் காரணம் எமது இயக்க உறுப்பினர்கள் உயிருடன் பிடிபட்டதே.

Po (பொட்டு அம்மான்) வின் வேலைக்கு வந்தவர்கள் பிடிபட்ட காரணத்தால்தான் ரகுவரனுக்கு இவ்வளவு நெருக்கடி வந்தது.


அதிலும் சாந்தன் பிடிபட்டது எமக்கெல்லாம் ஆபத்தாய் முடிந்தது.

பத்மநாபா சம்பவத்தில் இருந்து Po, HA சாவகச்சேரியில் இருப்பதுவரை கூறியுள்ளார்.

ஆதரவாளர்கள் பயந்த நிலையில் உள்ளனர். ஐ.பி.கே.எ.ஃப். வந்த புதிதில் சனங்கள் தண்ணீர்கூட தரப் பயந்தமாதிரி இங்குள்ள ஆதரவாளர்கள் உள்ளனர். ஐந்து பேரோ பத்துப் பேரோ என்றால் இங்கிருந்து வேலை செய்யலாம்.

இங்கு என்றும் இல்லாதளவு பந்தோபஸ்து போடப்பட்டுள்ளது. கரையோரங்கள் யுத்தம் நடக்கும் இடம் போன்று காணப்படுகிறது.

மணல் மூட்டை அடுக்கி அரண்கள் அமைத்துள்ளனர். கடற்படை நாகப்பட்டணம், வேதாரண்யம், கோடிக்கரை,



சிவராசன் தப்பிச் சென்ற டாங்கர் லொறி

மல்லிபட்டினம், தொண்டி, இராமேஸ்வரம், ஆகிய இடங்களில் தலா 150 கடற்படையினர் வீதம் இட்டுள்ளனர்.

இதைவிட எல்லைக் காவல் படையினர் 10 கிலோ மீட்டர் தூர இடைவெளிக்கு ஒரு பொயின்ட் (காவலரண்) போட்டுள்ளனர்.

எம்மிடமிருந்து பெரிய தாக்குதல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றனர்.

குளத்தூர் மணியண்ணையை பிடித்து மல்லிகைக்கு கொண்டு சென்று அடித்துள்ளனர். அவர் மூலம் என்னுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இவர்களின் பேச்சுவார்த்தை தந்திரம் ஏற்கக்கூடிய மாதிரி இல்லை. அவர்கள் உயிருடன் பிடிப்பதற்கு முயற்சிப்பதாக தெரிகிறது.

எம்மிடம் பிடித்ததில் ஒரு செற்றைக் கொடுங்கள் (தகவல் தொடர்பு சாதனத்தை செற் என்றே சுருக்கமாக குறிப்பிடுவதுண்டு) கேட்டுவிட்டு வருகிறேன் என்று கூறினேன்.

இரும்பொறையுடனும் பேசுங்கள். முடிந்தால் சிவத்தானையும் அனுப்புகிறேன். இருவரையும் திரும்ப அனுப்புங்கள்.

இவ்வண்ணம் அன்புடன்
சாந்தன்

என்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## பெங்களூரில்

கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது போலவே தமிழ்நாடு முழுக்க கடும் சோதனைகள் நடத்தப்பட்டன.

இலங்கைத் தமிழர் எங்கு தென்பட்டாலும் சந்தேகக் கண்கொண்டு நோக்கப்பட்டனர்.

தமிழ் நாட்டிலிருந்த இலங்கைத் தமிழ இயக்கங்களது உதவியும் கோரப்பட்டது.

இந்நிலையில்தான் கர்நாடக மாநிலத்தில் பெங்களூர் பாதுகாப்பான இடமாக சிவராசனுக்கு தோன்றியது.

பெங்களூருக்கு காரிலோ, பஸ்ஸிலோ செல்ல முடியாது. சிவராசன், சுபா ஆகியோரது படங்கள் இந்தியா முழுக்க பிரசித்தம்.

எனவே டாங்கர் லொறி ஒன்றுக்குள் சிவராசன், சுபா ஆகியோரை மறைத்து வைத்து, பெங்களூர் கொண்டு செல்ல முடிவானது.

அதன்படி டாங்கர் லொறியில் சிவராசன், சுபா இருவரும் சென்றனர். பெங்களூரில் அவர்கள் சென்று இறங்கிய இடம் இந்திரா நகர்.

ராஜீவின் தாயாரான இந்திரா காந்தியின் பெயரில் உள்ள பகுதி.

பெங்களூரில் ஒரே வீட்டில் தங்காது, அடிக்கடி இடம் மாறக் கூடியதாக இரண்டு மூன்று வீடுகள் வாடகைக்கு பிடிக்கப் பட்டன.

ஜகநாதன் என்பவரே அந்த வீடுகளை வாடகைக்கு எடுத்திருந்தார்.

ஆனால், ராஜீவ் கொலை விவகாரத்தில் புலிகளுக்கு தொடர்ந்து சறுக்கலே ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்றாக இருந் தது.

சிவராசன், சுபா ஆகியோரை பெங்களூரில் தங்கவைத்தவர்களில் ஒருவர் விக்கி.

30.07.91 அன்று கோவையில் வைத்து விக்கி எனப்படும் விக்கினேஸ்வரன் கைது செய்யப்பட்டார்.

சிவராசன் பற்றிய பல தகவல்களை விக்கி கூறிவிட்டார். பயங்கரமான சித்திரவதை மூலம் தகவல்களை பெற்றுக் கொண்டனர்.

சிறப்பு புலனாய்வுக்குழு பெங்களூர் விரைந்தது. ஆனால், ஏமாற்றம் காத்திருந்தது.

## முற்றுகை

விக்கி கூறிய வீட்டில் இருந்து சிவராசனும், சுபாவும் வேறு வீட்டுக்கு மாறி விட்டனர்.

ஆனால் புலனாய்வுத் துறையினர் விடுவதாக இல்லை. தொடர்ந்து துருவித் துருவி ஆராய்ந்தனர்.

அவர்கள் முயற்சிக்கு பலன் கிட்டியது. 18.08.91 அன்று ரெங்கநாத் என்பவர் கைதானார்.

சிவராசன், சுபா ஆகியோர் அவரது

**அற்புதன் எழுதுவது**

வீட்டில்தான் தங்கியிருந்தனர்.

ரெங்கநாத்தை தமது முறையில் விசாரித்தபோது சிவராசனும், சுபாவும் தங்கியிருந்த வீடுபற்றிய தகவல் கிடைத்தது.

தகவல் கிடைத்ததும் உடனடியாக அந்த வீட்டை முற்றுகையிட்டு விடவில்லை.

முதலில் அங்கு சிவராசன், சுபா ஆகியோர் இருப்பதை உறுதி செய்து கொள்வது.

பின்னர் சிவராசன், சுபா இருவருக்கும் சந்தேகம் ஏற்படாதவாறு வீட்டை நெருங்கி, அவர்களை உயிருடன் பிடித்துவிடுவது என்பதே சிறப்புப் புலனாய்வுக் குழுவின் நோக்கம்.

அவர்கள் இவருவரையும் உயிருடன் பிடிப்பதுதான் தமக்கு உண்மையான வெற்றி என்று கருதியது புலனாய்வுக்குழு.

சிவராசன், சுபா ஆகியோர் தங்கியிருப்பதை உறுதி செய்வதற்கு புலனாய்வுக் குழு கையாண்ட தந்திரம் என்ன? சுற்றி வளைப்பு நடந்தது எப்படி? என்பதை அடுத்தவாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)

# ஒட்டுக்கேட்ட உரையாடல்

சிவராசனுக்கும் பொட்டம்மானுக்கும் இடையே நடைபெற்ற இரகசிய வானொலி உரையாடலை சிறப்பு புலனாய்வுக் குழு (எஸ்.ஐ.டி) பதிவு செய்தது.

அவர்கள் சங்கேத மொழியிலேயே உரையாடினர். தம்மிடம் கைதான புலிகள் மூலம் அவர்களின் சங்கேத வார்த்தைகளுக்கு அர்த்தம் கண்டு பிடித்ததாக எஸ்.ஐ.டி கூறியது. தாம் ஒட்டுக் கேட்டதாக கூறி எஸ்.ஐ.டி. வெளியிட்ட விபரம் இதுதான்.

ராஜீவ் கொலை வழக்கில் இவை தடயங்களாகவும் சமர்பிக்கப்பட்டது.

**1991, மார்ச் 22.**

**அம்மானிடம் சிவராசன்:** சென்னைக்கு வருவார். தில்லியில் என்றால் முயற்சியும் நேரமும் தேவை. நேரு வந்தால் நல்லது.

**எஸ்.ஐ.டி.தரும் விளக்கம்:** மார்ச் மாதம் ராஜீவ் சென்னைக்கு வருவார் என்று சில தமிழ் நாளிதழ்களில் செய்தி வந்தது. தனது திட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்ய அக் கூட்டத்தை பயன்படுத்திக் கொள்ள சிவராசன் விரும்புகிறார். நேருவும் வயர்லஸ் ஆபரேட்டர்.

**1991, ஏப்ரல் 6.**

**சிவராசனிடம் அம்மான்:** சந்திரஹாசன் மீது கத்தி உபயோகிக்காதே. பிஸ்டலால் தாக்கு. பிஸ்டல் இல்லாவிட்டால் ஏற்பாடு செய்துகொள்.

**எஸ்.ஐ.டி.யின் விளக்கம்:** எஸ்.ஐ.டி. கைப்பற்றிய சிவராசனின் டயரியில் சந்திரஹாசன் (இலங்கைத் தமிழர்) பெயர் சிவப்பு மையில் எழுதப்பட்டிருந்தது. இவரைத் தீர்த்துக் கட்டும்படி சிவராசன் தன்னை பணித்ததாக சிவராசனின் சகாவான முருகன் கூறுகிறார்.

**1991, மே 7.**

**அம்மானிடம் சிவராசன்:** இந்து மாஸ்டர் வீட்டில் அவள்தான் மூத்த பெண் நெருக்கமாகப் பழகி வருகிறேன். நம்மைத் தவிர வேறு யாருக்கும் தமது நோக்கம் தெரியாது. ஆட்சியைப் பிடிக்கப்போகும் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்காகத்தான் இது என்று அவளிடம் சொல்லி இருக்கிறேன். வி.பி.சிங் இங்கு வருகிறார். அவரை நாம் வரவேற்கிறோம். அதுபோலவே எல்லா தலைவர்களையும் வரவேற்கிறோம் என்று சொன்னேன்.



**"நமது இயக்கத்திற்கோ வீரமரணம் அடைந்த போராளிகளுக்கோ என்னால் களங்கம் நேராது"**



**எஸ்.ஐ.டி.யின் விளக்கம்:** இங்கே குறிப்பிடப்படுவது நளினி. கொலைத் திட்டத்திலும் வி.பி.சிங் கூட்டத்தின் போது பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆழம் பார்க்கும் பரிசோதனையிலும் ஈடுபடுத்தப்பட்டவர்.

**1991, மே 22.**

**சிவராசனிடம் அம்மான்:** பெரிய செய்திகளை அனுப்பாதே. அது சந்தேகத்தை கிளப்பிவிடும். 2-ம் தேதி நீ சொல்லும் இடத்துக்கு படகு வரும்.

**எஸ்.ஐ.டி.யின் விளக்கம்:** இது படு கொலைக்கு அடுத்த நாள். சிவராசன் தப்பிவர அம்மன் திட்டமிடுகிறான்.

**1991, மே 25.**

**சிவராசனிடம் அம்மான்:** அன்புவின் புகைப்படம் அடையாளம் தெரிகிறதா? நித்யா வலுவான துணைதான். நீ செய்ய வேண்டியது பற்றி பிறகு சொல்கிறேன்.

**எஸ்.ஐ.டி.யின் விளக்கம்:** மே 24-ம் தேதி ராஜிவைக் கொன்ற 'மனித வெடிகுண்டான தனு' என்கிற அன்புவின் படம் முதல் முறையாக செய்தித்தாள்களில் வெளியாகிறது. சிவராசனின் கூட்டாளியான சுபா என்கிற நித்யாவுக்கு வேறொரு வேலை விடுவதாக திட்டம் இருக்கிறது. இந்திய தலைவர்களுக்கு எதிராக அம்மன் திட்டமிட்ட தொடர் பயங்கரவாதச் செயல்களின் பகுதியாக அது இருக்கலாம்.

**1991, ஜூன் 11.**

**அம்மானிடம் சிவராசன்:** நமக்குத் தெரிந்தவர்கள் பிடிபட்டு விட்டார்கள். ஜீவரத்தினத்தின் கூட்டாளி லிங்கமும் மாட்டிக்கொண்டு விட்டான். சோகனை தேடுகிறார்கள்.

அன்புவை விட்டுப் பிரிந்ததால் நித்யா சோர்ந்து விட்டாள்.

உற்சாகப்படுத்த நான் செய்த முயற்சி



பலிக்கவில்லை.

**எஸ்.ஐ.டி.யின் விளக்கம்:** புலனாய்வுக் குழு சிவராசன் கோஷ்டியினரை நெருங்கி வருகிறது. தனு இறந்ததால் சுபாவுக்கு விரக்தி.

**1991, ஜூன் 12.**

**சிவராசனிடம் அம்மான்:** கரிகாலன் உட்பட ஒன்பது பேர் மீட்கப்படவில்லை. படகும் மூழ்கிவிட்டது. நித்யா, வீரம் செறிந்த நமது ஆட்களை அங்கீகரித்து நமது குழுவின் சரித்திரத்தில் அவர்களது வெற்றிகளை பொன்னெழுத்துக்களால் பொறிக்க முடியாமல் போகலாம். ஆனால் அவர்களது லட்சியங்கள் என்றும் மாறாது.

**அம்மானிடம் சிவராசன்:** நித்யாவின் புகைப்படத்தை சி.பி.ஐ. வெளியிட்டிருக்கிறது. எனவே, நித்யாவை தனியாக விடாமல் என்னுடனேயே வைத்துக் கொண்டிருக்கிறேன். எனது தலைவனின் இனிய நாமத்தின் மீது ஆணையாகச் சொல்கிறேன். நமது இயக்கத்திற்கோ, வீர மரணம் அடைந்த போராளிகளுக்கோ என்னால் எந்தக் களங்கமும் ஏற்படாது.

**எஸ்.ஐ.டி.யின் விளக்கம்:** நித்யாவை அம்மான் தேற்றுகிறார். தனுவின் பணியை நடைமுறை காரணங்களுக்காக வெளிப்படையாக அங்கீகரிக்க முடியாததை சொல்கிறார். பிரபாகரன்மீதும் இயக்கத்தின்மீதும் தனக்குள்ள கொள்கைப் பற்றினை சிவராசன் வலியுறுத்திக் கூறுகிறார்.

**1991, ஜூன் 20.**

**அம்மானிடம் சிவராசன்:** நெருக்கடி ஏற்பட்டால் என் ஆயுதம் பகைவர்களுக்கு எதிராக இயங்கும். ராபர்ட்டும் மற்றவர்களும் சி.பி.ஐ. அலுவலகத்தில் உட்கார்ந்திருக்கும் இடம் எனக்குத் தெரியும். அன்புவின் ஆத்மா சாந்தி அடையும். சி.பி.ஐ.யின் மன உறுதி சரியும்.

**1991, ஜூன் 21.**

**சிவராசனிடம் அம்மான்:** உங்கள் அனைவரிடமும் சயனைட் குப்பிகள் இருக்கிறதா? இந்து மாஸ்டரிடம் இருந்ததா? நீலனிடமும் ரமணனிடமும் சயனைட் இல்லாவிட்டால் ரவி மூலமாக ஏற்பாடு செய்.

**1991, ஜூன் 23.**

**சிவராசனிடம் அம்மான்:** சிறப்புப் படையிடம் எச்சரிக்கையாக இரு. உன்னை உயிரோடு பிடிக்க முயல்கிறார்கள். கண்ணீர்ப்புகை போன்ற எதையாவது திடீரென்று பயன்படுத்தி உன்னை சயனைட் சாப்பிட முடியாதபடி செய்துவிடுவார்கள்.

(எஸ்.ஐ.டி. சிவராசனை நெருங்கி விட்டதால் வயர்லஸ் தொடர்பை விடுதலைப்புலிகள் முற்றிலுமாக நிறுத்தி விட்டார்கள்)

# அலசுவது -இராஜதந்திரி

# வெடித்த குண்டுகளும் வெளிப்படுத்திய செய்திகளும்

சார்க் வெளிவிவகார அமைச்சர்களது மாநாடு கொழும்பில் நடந்து முடிந்துள்ளது.

எழில் கொஞ்சும் மலையகப் பகுதியான நுவரெலியாவில் சார்க் வெளியுறவு அமைச்சர்கள் கூடிப்பேசியுள்ளனர்.

அம் மாநாட்டை முன்னிட்டு நுவரெலியாவில் உள்ள தமிழர் வீடுகள் அனைத்திலும் தேடுதல் நடத்தப்பட்டது. தீவிரக் கண்காணிப்பு செலுத்தப்பட்டிருந்தது.

இனப்பிரச்சனையும் அதன் காரணமான பாரிய யுத்தமும் இலங்கைத் தீவின் பிடரியைப் பிடித்து உலுப்பி வருகிறது.

இந்துமகா சமுத்திரத்தின் முத்து என்று ஒரு காலத்தில் புகழப்பட்ட இலங்கைத்தீவு, தற்போது இந்து மகா சமுத்திரத்தின் வெடி மருந்துப் பேழையாகவே திகழ்ந்து வருகிறது.

ஆனாலும், இலங்கை அரசு இங்குள்ள பிரச்சனையின் தீவிரத்தை உலகின் முன்பு முடிமறைப்பதற்கே பலத்த முயற்சி செய்து வருகிறது.

இலங்கைத் தீவில் அமைதியும், மகிழ்ச்சியும் எங்கும் வியாபித்துள்ளதுபோலவும், எங்கோ சிறு பகுதியில் சிறு சம்பவங்கள் மட்டுமே நிகழ்வது போன்றுமே உண்மைக்கு மாறான தோற்றப்பாட்டை உலகின் கண்களுக்கு காண்பிக்க முனைகின்றனர்.

சார்க் வெளியுறவு அமைச்சர்களது மாநாட்டை நுவரெலியாவில் நடத்தி முடிக்க அரசு காட்டிய ஆர்வமும் அதனையே பிரதிபலிக்கிறது.

ஆயினும் சார்க் வெளிவிவகார அமைச்சர்கள் நுவரெலியாவில் தங்கியிருந்தபோது கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்கள் இலங்கை அரசை சங்கடத்தில் ஆழ்த்திவிட்டன.

இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளும், தொலைக்காட்சி செய்திகளும் அவர்களுக்கு கொழும்புச் செய்திகளை தெரிவித்திருக்கும்.

விடுதலைப் புலிகளை ஓரம் கட்டிவிட்டு, நாடெங்கும் சமாதானத்தை ஏற்படுத்தி வருவதாக, சார்க் வெளியுறவு அமைச்சர்களிடம் நமது வெளிநாட்டமைச்சர் பூரிப்போடு கூறுவதற்கு முடியாமல் போயுள்ளது.

நாட்டின் தலைநகரில் அடுத்தடுத்து குண்டுகளை வெடிக்க வைப்பதோடு, பொலிஸ் நிலையம் அருகிலேயே கரும்புலித் தாக்குதலையும் புலிகள் நடத்தியமை, அவர்களது கரங்கள் தலைநகர்வரை தாராளமாக நீண்டுள்ளதையே புலப்படுத்தியிருக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் குண்டு வெடிப்புக்கள் நடந்துள்ளன. எனினும் அந்த நாடுகளது தலைநகர்களுக்குள் தொடர்ச்சியாக குண்டுவெடிப்புக்கள் நடத்தப்பட்டதில்லை. எப்போதாவது ஒரு தடவையே குண்டுவெடிப்புக்கள் நிகழ்ந்ததுண்டு.

அதுமட்டுமன்றி நுவரெலியாவில் சார்க் அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மன்னார் தள்ளாடி இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியம் பற்றி எரிந்து கொண்டிருந்தது.

இந்தியா- பாகிஸ்தான் படையினர் தமது நாடுகளின் எல்லையில் ஆட்டிலெறி தாக்குதல்களில் ஈடுபடுவதுண்டு.

இலங்கைக்குள்ளேயே ஆட்டிலெறி மோதல்கள் நடைபெறுவது இந்திய, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

போர்முனையில் புலிகளை ஓரம் கட்டிவிட்டதாக சார்க் வெளியுறவு அமைச்சர்களுக்கு விளக்கம் கொடுக்க முடியாதவாறும் செய்துவிட்டது தள்ளாடி முகாம்மீதான தாக்குதல்.

புலிகளின் தாக்குதல் செய்திகள் மூலமே இலங்கையில் இனப்பிரச்சனையின் தீவிரத்தை சார்க் வெளியுறவு அமைச்சர்கள் மட்டுமன்றி, வெளியுலகமும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இல்லையெனில் இலங்கையில் இனப்பிரச்சனையே கிடையாது என்று இலங்கை அரசு கூறினாலும், அதனை நம்பும் நிலையிலேயே வெளியுலகம் இருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிக்கா பதவிக்கு வந்த பின்னர் இலங்கை தொடர்பான வெளியுலக அபிப்பிராயம், அரசுக்கு சாதகமானதாகவே மாறியிருந்தது.

1970களில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பதவியில் இருந்தபோதும் உலக அபிப்பிராயம் அவருக்கு சாதகமானதாகவே விளங்கியிருந்தது.

பெண்கள் என்ற கோணத்தில் நோக்கி, அவர்கள் கடும் போக்கை கொண்டிருக்க மாட்டார்கள் என்று நம்பப்படுவதும் அதற்கு ஒரு காரணமாகும்.

பிரேமதாசா பதவியில் இருந்தபோது, அவர் கொலைகளுக்கு தயங்காதவர், மனித உரிமை மீறல்களுக்கு அஞ்சாதவர் என்ற அபிப்பிராயமே உள்நாட்டிலும் வெளியுலகிலும், மேலோங்கியிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்ததும் அதற்கு நேர்மாறான அபிப்பிராயமே சர்வதேச அரங்கில் தோன்றியிருந்தது.

எனவேதான் தீர்வுப்பொதி என்ற பெயரில் அரைகுறையான தீர்வை ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்தபோது உலகம் அதனை வரவேற்றது. வெளியுலக ராஜதந்திரிகள் பாராட்டியிருந்தனர்.

தமிழ் பேசும் தரப்புக்கு அப்பொதி குறித்து எத்தகைய அபிப்பிராயம் இருக்கிறது என்பதைக்கூட அறிய முயற்சிக்காது, வெளியுலக இராஜதந்திரிகள் பொதியைப் புகழ்ந்தனர்.

எனவே, ஜனாதிபதி சந்திரிகா தாம் முன்வைத்த அரைகுறைப் பொதியை காட்டியே, இலங்கை இனப்பிரச்சனை தீர்ந்துவிட்டது என்று உலகை நம்பவைக்கவும், அப் பொதியை மேலும் கனம் குறைத்து தமிழ் பேசும் தரப்பின் தலையில் கட்டியடிக்கவும் சந்தர்ப்பம் சாதகமாகவே இருந்தது.

தமிழ்க் கட்சிகள் எதுவும் அரசின் பொதி நாடகத்தை அம்பலப்படுத்த முன்வரவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி இந்த நாடகத்தின் பிரதான பாத்திரமாகவே மாறியிருந்தது. பொதியில் நல்ல விஷயங்களும் உள்ளன என்று மக்களை ஏமாற்றவும் முயன்றிருந்தது. ஏனைய தமிழ்க் கட்சிகள் பொதிக்கு திருத்தம் கொடுத்ததாக கூறியபோதும், பொதியை கடுமையாக எதிர்த்தால் அம்மையாரின் கசப்பை சந்திக்க நேரும் என்று அடக்கியே வாசித்தன.

இதுவரை வைக்கப்பட்ட திட்டங்களில் முன்னேற்றமானது என்று சில தமிழ்க் கட்சிகள் நாக்கூசாது மனமறிந்து பொய் கூறியுமிருந்தன.

எனவே, புலிகளை போரில் வெற்றி கொள்ள முடிந்திருந்தால், தற்போதுள்ளதைவிட கனம் குறைந்த பொதியைக்கூட தமிழ் பேசும் தரப்பிடம் ஆட்சியாளரால் திணிக்க முடிந்திருக்கும். உலகமும் கை கொடுத்து வரவேற்றிருக்கும்.

ஆனால், போர்முனையில் ஆட்சியாளருக்கு ஏற்பட்ட அதிர்ச்சித் தோல்விகளும், மனித உரிமை பிரச்சனைகளும் இலங்கை இனப்பிரச்சனைக்கு ஜனாதிபதி சந்திரிக்காவாலும் தீர்வு காணமுடியவில்லை என்பதையும், தீர்வுப் பொதி வெறும் இழுத்தடிப்பு தந்திரமே என்பதையும் வெளிப்படுத்தியுள்ளன.

உலகம் தானாக முன்வந்து எப்பிரச்சனையிலும் நியாயம் உரைப்பதில்லை. அதன் செவிகளை எட்டும் வகையிலும், கவனத்தை கவரும் வகையிலும் போராட்டங்கள் தீவிரம் பெறும்போதே வெளியுலகம் கவனிக்கத் தொடங்குகிறது.

இங்கும் தமிழ் பேசும் தரப்பு பலவீனமாக இருந்து, அதன்மீது பேரினவாத தரப்பு தாம் நினைக்கும் தீர்வை திணிக்குமானால், வெளியுலகம் தலையிடாது.

தமிழ் பேசும் தரப்பு தன் பலம் மூலமாக தன்மீது திணிக்கப்படும் அரைகுறைத் தீர்வுகளை நிராகரித்து போராடும்போதே, அத் தீர்வின் நியாயம், அநியாயம் பற்றி பேசுவதற்கு வெளியுலகம் முன்வரும்.

'தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' என்பதுபோன்றே வெளியுலக கரிசனைகளும் அமைந்திருக்கும்.

இங்குள்ள தமிழ் மக்கள் தினமும் அனுபவிக்கும் அவலங்களை தமது அவலங்கள் போன்ற துடிப்போடு வெளியுலகம் நோக்கப்போவதில்லை.

அதனால், படிப்படியாகவே வெளியுலக கவனம் இலங்கை இனப்பிரச்சனைகள்மீது திரும்பும். அவ்வாறு கவனத்தை திருப்புவதற்கு தமிழ் பேசும் தரப்பின் அரசியல் கட்சிகளும் சோர்வின்றி முயற்சித்தாகவேண்டும்.

அம்பலப்படுத்தல் என்பதே வெளியுலக அனுதாபத்தை திரட்டுவதற்கான பிரதான வழி முறையாகும்.

அரசின் ஒவ்வொரு தவறுகளையும் சர்வதேச அரங்கின் முன்பாக கொண்டு செல்லுதலும், பிராசரப்படுத்தலுமே அம்பலப்படுத்தலாகும்.

சந்திரிகா அரசு தமிழ் பேசும் தரப்புக்கு உலக அனுதாபத்தை திரட்டித்தரக்கூடிய சந்தர்ப்பங்களை தவிர்க்க முடியாமலும், தம்மையறியாமலும் வழங்கியிருந்தது.

யாழில் காணாமல் போனோர் விவகாரம் மற்றும் செம்மணிப் புதை குழி விவகாரங்களை தமிழ் கட்சிகள் மட்டும் நேர்மையுடன் அம்பலப்படுத்தியிருந்தால் அரசின் நிலை பெரும் தர்மசங்கடமாகியிருக்கும்.

அதனை செய்யத் தவறியது மட்டுமன்றி, இந்த விடயங்களில் அரசின் வாக்குறுதிகளை மக்களிடம் பிரசாரம் செய்யும் பணியையே தமிழ்க் கட்சிகள் மேற்கொண்டன. அதன் மூலம் குறிப்பிட்ட பிரச்சனைகளை அரசு 'ஆறின பழம் கஞ்சி' என்ற நிலைக்கு உள்ளாக்கவும் தமிழ்க் கட்சிகள் துணைபோயுள்ளன.

தமிழ்க் கட்சிகள் அரசிடம் மன்றாடி மகஜர் கொடுத்து அதனைவைத்து தமிழ் மக்களிடம் நற்பெயர் எடுக்கும் குறுகிய அரசியல் விளையாட்டிலேயே ஈடுபட்டு வருகின்றன.

கண்ணுக்குத் தெரியாத சக்தி ஒன்றின் கரம் நீண்டு தமிழ் மக்களை ஆட்டிப் படைப்பது போன்றும், அதனை ஜனாதிபதியோ, அரசாங்கமோ அறிந்திருக்கவில்லை என்பதால், தாம் கூறித்தான் அவர்களுக்கே தெரியவருவது போன்றுமே இக் கட்சிகளது அறிக்கைகளும், அணுகு முறைகளும் அமைந்துள்ளன.

அரசுடனும் பகைக்காது, அதே நேரம்தமிழ் மக்களின் நலன்களுக்காக தாம் பாடுபடுவது போலவும் காண்பிக்கும் இரட்டை வேட நிலைப்பாடே இதுவாகும்.

எனவே, இக் கட்சிகள் ஒருபோதும் தமிழ் மக்களின் அவலங்களையும் ஆட்சியாளரது தவறுகளையும் உலக அரங்கின் முன்னால் அம்பலப்படுத்த முன்வரப்போவதில்லை.

இந்நிலையில் அரசியல் ரீதியான அம்பலப்படுத்தல்கள் தமிழ் பேசும் தரப்பின் மத்தியில் இருந்து போதியளவு வெளிப்படவில்லை.

இதனால் விடுதலைப் புலிகளது இராணுவ ரீதியான நடவடிக்கைகள் மட்டுமே இங்குள்ள நிலவரங்களை வெளியுலகுக்கு தெரியப்படுத்தத்தக்கதாக அமைந்து வருகின்றன.

குண்டு வெடிப்புக்களை நிச்சயமாக கண்டிக்கவே வேண்டும். அப்பாவி மக்கள் பலியாக நேர்வதை கண்டிக்காமல் இருத்தலாகாது.

ஆனால், இவற்றைக் கண்டிக்கும் தார்மீக பலம் தமிழ்க் கட்சிகளுக்கு தற்போது கிடையாது. தமிழ்பேசும் மக்களின் மனித உரிமை பிரச்சனைகளை வெளியுலகுக்கு கூறாது மறைத்துவரும் இக் கட்சிகளுக்கு மனித உரிமைகள் பற்றி பேசும் அருகதை இல்லாமல் போயுள்ளது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை கண்டிக்கும்போது, பிரபாகரனையும், அந்த அமைப்பையும் ஒட்டுமொத்தமாகவே இக் கட்சிகள் கண்டிக்கின்றன.

ஆனால், ஆட்சியாளரது மனித உரிமை மீறல்களை கண்டிக்கும்போது ஜனாதிபதிக்கும், அரசாங்கத்துக்கும் நோகாதவாறே கண்டித்து வருகின்றன. ஜனாதிபதி அறியாமல் நடைபெறும் சம்பவங்கள் போலவும் தாமே வலிந்து தோற்றப்பாட்டை உருவாக்கித் தருகின்றன.

**நுவரெலியாவில் சார்க் வெளியுறவு அமைச்சர்களது மாநாடு நடைபெறுகையில் தள்ளாடி முகாம் ஆயுதக் களஞ்சியம் எரிந்துகொண்டிருந்தது.**

1977ம் ஆண்டு பொதுத் தேர்தலின் முன்னர் இலங்கைக்கு வெளிநாட்டு பிரமுகர்கள் எவர் வந்தாலும் அரசை அம்பலப்படுத்தி மகஜர் கொடுப்பதை கூட்டணி தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மேற்கொண்டு வந்தார்.

அரசின் தடைகளையும் மீறி வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு மகஜர்கள் தரப்பட்டன. அப்போதெல்லாம் இலங்கை இனப்பிரச்சனை பற்றி விளக்குவதற்கு மிகுந்த சிரமப்பட வேண்டியிருந்தது.

ஆனால் தற்போது இலங்கை இனப்பிரச்சனை உலகறிந்த விடயமாகியுள்ளது. இப்பிரச்சனையில் அரசு நியாயமாக நடக்கிறதா? இல்லையா? என்பதை மட்டுமே இன்று வெளியுலகுக்கு விளக்க வேண்டியுள்ளது.

அவ்வாறு இருந்தும் தமிழ்க் கட்சிகள் அரச சார்புக் கட்சிகளாக மாறியுள்ளதால், தற்போது அம்பலப்படுத்தல்களை மேற்கொள்ளாது இருக்கின்றன.

இலங்கையில் சார்க் மாநாடு நடைபெற்றது. சமீபத்தில் சார்க் வெளியுறவு அமைச்சர்களது மாநாடும் நடைபெற்றுள்ளது.

இவற்றில் கலந்து கொள்ள வந்த பிரதிநிதிகள் மத்தியில் அம்பலப்படுத்தலை மேற்கொள்ள யாரும் இல்லாத வெற்றிடமே காணப்பட்டது.

அதுமட்டுமன்றி இலங்கைக்கு வரும் வெளிநாட்டு பிரமுகர்களை அரசின் நட்புக் கட்சிகள் என்ற வகையிலேயே தமிழ்க் கட்சித் தலைவர்கள் சந்தித்து வருகின்றனர். சந்திப்புகளுக்கு வெளிநாட்டமைச்சே ஏற்பாடு செய்தும் கொடுத்து வருகிறது.

எனவே, அம்பலப்படுத்தல் செய்யத் தவறியது மட்டுமல்லாமல், அரச சார்பு பிரசாரகர்களாகவே இன்றுள்ள தமிழ்க் கட்சிகள் திகழ்கின்றன. ●


வள்ளுவர் ஆண்டு 2005, பங்குனி23, ரபி:அவ் 23 (6-4-75) ஞாயிறு புத்தகம் 28, இதழ் 36

சுதந்திரத்தமிழ்நாடு ஏன் கோருகிறோம்?

இலங்கை வாழ் தமிழத் தேசிய இனம் சுதந்திரத் தமிழ் நாடொன்றை அமைத்துக் கொள்ளப்போராடுவது என்று முடிவு செய்யவேண்டியேற்பட்ட காரணங்களை விளக்கி தமிழர் கூட்டணித் [illegible] தந்தை செல்வா அவர்கள் பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு அர[illegible]ல் நடைபெறும் அனைத்துலக பாராளுமன்ற ஒன்றியத்தின் வசந்த கால மாநாட்[illegible]ல் கலந்துகொள்வதற்கென இலங்கை வந்துள்ள உலக நாடுகளின் 600க்கு மேற்[illegible] பிரதிநிதிகளிடம் முறையீடு ஒன்றைக் கையளித்துள்ளார்.

"தமிழ்த் தேசிய இனம் இந்நாட்டு [illegible] அடிமைகளாக நடத்தப்படுகிறது: தமிழினத்தை பூண்டோடு [illegible] முயற்சிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதன் காரணமா[illegible] சிங்கள இனத்திலிருந்து நிலப் பரப்பிலும், மொழி, கலாசாரத்திலும் முற்றிலு[illegible] வேறுபட்ட தனித் தேசிய இனமான தமிழினம், தங்கள் இழந்த சுதந்திரத் [illegible] மீட்டும அமைத்துக்கொள்வது என்று முடிவு [illegible]" என்று அவர் அதில் தெரிவித்திருக்கிறார்.

1975 இல் கொழும்பில் அனைத்துலக பாராளுமன்ற வசந்தகால மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பிரதிநிதிகளுக்கு கூட்டணி மகஜர் கொடுத்த செய்தி. (சுதந்திரன் 6.04.75)

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

யாழ் குடாநாட்டில் காணி சுவீகரிப்பு விடயத்தை எப்படி தம் சொந்த அரசியலுக்கு பயன்படுத்தலாம் என்பதில் தமிழ்க் கட்சிகள் இடையே போட்டி ஏற்பட்டுள்ளது.

ஆரோக்கியமான போட்டி என்றால் வரவேற்கலாம். ஆனால் நடப்பதோ அரசுக்கு சாதகமாக முடியப்போகும் போட்டி.

ஜனாதிபதியை முதலில் சந்திப்பது யார்? சந்தித்துவிட்டு வந்து, "அப்படி ஒரு திட்டமே இல்லை. ஜனாதிபதி உத்தரவாதம் தந்து விட்டார்" என்று முதலில் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவது யார்? என்பதுதான் போட்டி.

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விடயத்திலும் இப்படி ஒரு போட்டி ஜோராக நடந்தது.

"உடனடியாக விசாரணை ஆணைக்குழு நியமிக்க ஜனாதிபதி உத்தரவாதம். மூன்று மாதத்துக்குள் முழு உண்மை வெளியாகும்" என்று தமிழ்க் கட்சிகள் மாறி மாறி கூறின. அவ்வாறு கூறப்பட்டு ஒரு வருடமும் நான்கு மாதங்களும் கடந்து விட்டன. தமிழ்க் கட்சிகளும் அதனை மக்கள் மறப்பதையே விரும்புகின்றன.

பின்னர் செம்மணி விவகாரம். 'ஜனாதிபதியை சந்தித்தோம். உடன் தோண்ட ஏற்பாடு' என்று கிட்டத்தட்ட சகல தமிழ்க் கட்சிகளுமே போட்டி போட்டுக் கூறின.

அப்படிக் கூறியும் பல மாதங்கள் கடந்துவிட்டன. செம்மணி விவகாரத்தில் உரிய மர்மங்கள் உருவாகியுள்ளன.

இப்போது காணி சுவீகரிப்பு, மற்றும் குடியேற்ற விவகாரத்திலும் ஜனாதிபதி கொடுக்கும் வாக்குறுதி நிறைவேறும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

கூட்டணியின் அரசியல் ஞான பண்டிதரான இரா.சம்பந்தன் அரசுக்கு தகுந்த நேரத்தில் தோள் கொடுப்பவர்.

சென்ற ஆண்டு பாரிசில் இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளது மாநாடு நடைபெற்ற போது, கொழும்பில் மனித உரிமைக் குழு முன் தோன்றி கூத்தாடினார். கொழும்புக் கைதுகளைவிட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காண்பிக்க நடந்த நாடகமே அது. அவருடன் டாக்டர் நீலனும் பங்கேற்றிருந்தார்.

### உடுக்கை இழந்தவர் கைபோல- அரசின் இடுக்கண் களையும் சம்பந்தர்

தமிழ் மக்கள் தொடர்பாக ஜனாதிபதி கூறியதாக வெளியான வார்த்தைப் பிரயோகம் தொடர்பான சர்ச்சையில், ஜனாதிபதிக்கு ஆதரவாக அறிக்கை விட்டார் நீலன். ஆனால் சம்பந்தன் என்று கையொப்பம் இட்டார். அதனை தன் சம்மதத்தோடு நடந்த காரியம் என்று கூறினார் சம்பந்தர்.

தற்போது யாழ்காணி சுவீகரிப்பு விடயத்திலும் எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது போல தன் நிலைப்பாட்டை காண்பித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளரைப் பார்த்தாராம். ஜனாதிபதிக்கு அப்படி ஒரு எண்ணம் இருப்பதாக தான் அறியவில்லை என்று செயலாளர் கூறினாராம். அதனை பத்திரிகைகளுக்கு கொடுத்துள்ளார் சம்பந்தர்.

சிங்கள மக்கள் சம்பந்தப்பட்ட சர்ச்சைகள் என்றால், அது காலையில் செய்தியாக வந்தால், அன்று மாலையிலேயே ஜனாதிபதி செயலகம் மறுப்பறிக்கை வெளியிடும்.

ஆனால், தமிழ் மக்களது இந்த நிலப் பிரச்சனை பாராளுமன்றத்தில் கேட்கப்பட்டபோது பிரதிப் பாதுகாப்பு அமைச்சரே மௌனமாக இருந்துள்ளார். பத்திரிகைகளில் வெளியாகி ஒரு வாரமாகியும் அரச தரப்பு மௌனம் சாதித்தது.

இப்படி ஒரு பிரச்சனை எழுந்துள்ளமை ஜனாதிபதிக்கு தெரியாது என்று கூறுவது, ஜனாதிபதியை கின்டல் செய்வது மாதிரித்தான். ஆனால் ஜனாதிபதியோ, ஜனாதிபதி செயலகமோ மறுப்பு வெளியிடவில்லை.

ஆனால் அவர்கள் சார்பாக சம்பந்தன் பத்திரிகைகளுக்கு கூறுகிறார்.

இப்படித்தான், தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்று தான் கூறியது பற்றி இன்றுவரை ஜனாதிபதி மறுக்கவே இல்லை.

ஆனால் தமிழ் கட்சிகள் மாய்ந்து மாய்ந்து ஜனாதிபதி அப்படி கூறினார், இப்படி கூறினார் என்று வியாக்கியானம் செய்தன.

வடக்கு-கிழக்கு ஆளுநராக வருவதற்கு சம்பந்தர் முயற்சி செய்ததாக முன்னர் கூறப்பட்டது. ஜனாதிபதியின் செயலாளராக மாறுவதற்கு முயற்சி செய்கிறாரா? என்று இப்போது சந்தேகம் வருகிறது. (இந்தக் கண்டறியாத புலிகள் இல்லையானால் அப்படிப்பட்ட பதவிகளில் அமர பலத்த போட்டி இருந்திருக்கும்.)

ஆபத்தான நேரத்தில் உதவுபவனே நண்பன். 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு'. அரசுக்கும், ஜனாதிபதிக்கும் தான் நல்ல நண்பர் என்பதை இரா.சம்பந்தர் பல முறை நிரூபித்திருக்கிறார்.



படிப்பகம்

**உ**ண்டா இராணுவத்துக்குள் அமீனுக்கு எதிரான சதி ஒன்று மிகவும் இரகசியமாக உருவாகிக் கொண்டிருந்தது.

பிரிகேடியர் சார்ள்ஸ் அருபேதான் அந்தச் சதியின் நாயகன். படைக்குள் அமீனுக்கு எதிரான அதிகாரிகளை இனம் கண்டு, அவர்களை ஒன்று சேர்க்க ஆரம்பித்தார் சார்ள்ஸ் அருபே.

பலமுறை அவர்கள் கூடிப்பேசினார்கள்.

"உகண்டா இராணுவத்தின் தரம் தாழ்ந்துவிட்டது. சர்வாதிகார ஆட்சியின் கைக்கூலிகளாக நாம் மாறிவிட்டோம். யார் யாரோ உயரதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள். அந்த பன்றிகளுக்கு நாம் சலாம்போடுகிறோம். மக்களும்இராணுவம் என்றால் கொலைப் படை என்றுதான் தூற்றுகிறார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவு காணவேண்டும்!"

பிரிகேடியர் சார்ள்ஸ் அருபே கூறியதை அமீனை எதிர்க்கும் அதிகாரிகள் முற்று முழுதாக ஏற்றுக்கொண்டனர்.

"படையினர் மத்தியில் படிப்படியாக நம் கருத்துக்கு ஆதரவு திரட்டுவது முதற் கட்டம். அதன் பின்பே அவர்கள் உதவியுடன் நாம் செயலில் இறங்க வேண்டும்!" என்றார் சார்ள்ஸ் அருபே.

"அப்படியா சொல்கிறான் அந்த நம்பிக்கைத் துரோகி?" என்றான் இடி அமீன்.

"ஆம், அதுதான் அவர்கள் திட்டம். தாங்கள் உடன் நடவடிக்கை எடுப்பது நல்லது!" என்றான் மேஜர் ஜலால்.

# இடி அமீன்

பிரிகேடியர் அருபேயின் நண்பனாக இருந்த மேஜர் ஜலால் திடீரென்று கட்சி மாறி விட்டான்.

அவன் கட்சி மாறக் காரணம் பணம். அவனுக்கு பெரும் சொத்தொன்றை வாங்குவதற்கு பணம் தேவைப்பட்டது.

அருபேயுடன் இருந்தால் பணம் வராது. அமீனிடம் மாட்டினால் பிணம் தான் வீட்டுக்குப் போகும்.

ஆகவே, அமீனிடம் காட்டிக் கொடுத்தால் பதவி உயர்வு கிடைக்கும். அதனை வைத்தே பணம் சம்பாதித்து விடலாம். அதுதான் மேஜர் ஜலாலுக்கு சரியாகத் தோன்றியது.

சந்தித்தான். காட்டிக் கொடுத்தும் விட்டான். ஆனால் அவன் எதிர்பாராத கோணத்தில் அமீனின் சிந்தனை ஓடியது.

"எத்தனை நாளாக இந்தச் சதி நடக்கிறது மேஜர் ஜலால்?" என்று கேட்டான் அமீன்.

மேஜர் ஜலாலுக்கு அமீனின் கேள்விக்குள் ஒளிந்திருந்த விபரீதம் புரியவில்லை. "மூன்று மாதங்களாக நடக்கிறது!" என்று உண்மையைக் கூறினான்.

அமீன் எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். ஜலால் பதில் கூறியதும் நின்று, நேராக நோக்கினான். அந்தப் பார்வையே ஜலாலை பயமுறுத்தியது.

"நீ எனக்கு விசுவாசமானவன்-இல்லையா?"

"நிச்சயமாக அதிபர் அவர்களே!" என்றான் ஜலால். அவன் இதயம் தடதடக்க ஆரம்பித்திருந்தது.

சட்டென்று இடிச் சிரிப்பு எழுந்தது அமீனிடம். "பயங்கரமான விசுவாசி. மூன்று மாதங்களுக்குப் பின்னர்தான் என்னிடம் கூறுவதற்கு வந்திருக்கிறாய்! நீ விசுவாசி! சரி, நடித்ததுபோதும், உனக்கும் பிரிகேடியர் அருபேயக்கும் இடையே என்ன பிரச்சனை? பாதியிலே காட்டிக் கொடுக்க நினைத்தாயே, ஏன்? உண்மையான பதில் தேவை!" என்று கண்டிப்புடன் கூறிய அமீனின் கையில் பிஸ்டல் குந்தியிருந்தது; மேஜர் ஜலாலின் உயிரை சுவைக்க பிரியப்பட்டுக் கொண்டிருந்தது.

ஜலாலுக்கு உடம்பெல்லாம் உதறல் எடுத்தது. அவனது சீருடை இடுப்புக்கு கீழே நனைந்து போனது. அதனைக் கவனித்த அமீன்; "நீ ஒரு கோழை. மகா கோழை. உன்னை தன் திட்டத்தில் இணைத்துக் கொண்டது அருபாவின் முட்டாள்தனம். அடேய், ஜலால், நீ யாருக்கும் உபயோகம் இல்லாதவன். யாருக்கும் நன்றி இல்லாதவன்!"

அமீனின் விரல் பிஸ்டலின் விசையை அழுத்த, குண்டு சீறி மேஜர் ஜலாலின் மார்பில் பொத்தல் போட்டது.

தொடர்ந்து ஆறு வேட்டுக்கள். மரணம் உத்தரவாதம்.

மேஜர் ஜலாலின் உடலை எங்காவது கொண்டு சென்று வீசுமாறு கூறிய அமீன், "பிரிகேடியர் சார்ள்ஸ் அருபேயை கைது செய்யுங்கள்!" என்று உத்தரவு பிறப்பித்தான்.

பெண் மந்திரவாதி கூறியது அமீனின் நினைவுக்கு வந்தது. "உன் ஆட்களில் ஒருவன் சூனியம் வைத்திருக்கிறான்...!" என்று அவள் கூறியது சத்தியமான வார்த்தை என்று சிலிர்த்துப் போனான்.

"உன் ஆட்களில் ஒருவன்...!" என்று அவள் கூறியது அருபேயைத்தான் என்று அமீன் தீர்மானித்தான்.

அந்த மந்திரவாதியின் கருணை இருந்ததால்தான் தன் தலைக்குவரவிருந்த ஆபத்தில் இருந்து தப்பியதாகவும் அமீன் நினைத்தான்.

பிரிகேடியர் அருபேயை கைது செய்த செய்தி அறிந்ததும், அவருடன் சேர்ந்து சதி செய்த ஏனைய அதிகாரிகள் மூவர் தப்பிச் சென்றுவிட்டனர்.

"சே... தப்புச் செய்துவிட்டோம். ஒரே நேரத்தில் ஒப்பரேசன் செய்திருக்க வேண்டும். முட்டாள்கள்! நான்தான் கூறினேன் என்றால், நீங்களாவது யோசித்து செய்திருக்கலாம் அல்லவா, என்னிடமாவது யோசனை கூறியிருக்கலாமே?" என்று தன் முன் நின்ற படை அதிகாரிகளைத் திட்டினான்.

அவர்கள் பதில் பேசவில்லை. அமீனின் உத்தரவை அப்படியே அமுல் நடத்தாதுவிட்டால் தங்கள் தலை இருக்காது என்பது அவர்களுக்கு தெரியும். 'யோசனை கூறியிருக்கலாம், யோசித்து செய்திருக்கலாம்' என்று இப்போது அமீன் கூறுவதை நம்புவதற்கு அவர்கள் முட்டாள்களல்ல.

பிரிகேடியர் அருபேயிடம் தப்பியோடியவர்கள் பற்றிய தகவல்களைக் கறக்க முயன்றனர்.

அருபே நல்ல பலசாலி. தன்னைத் தாக்கிய சிப்பாய்களை தாக்கிவிட்டு தப்பியோடினார்.

அருபேவின் தாக்குதலில் திக்குமுக்காடிப் போன சிப்பாய்கள், சுதாகரித்துக் கொண்டு கூச்சலிட்டனர்.

"தப்பி ஓடுகிறான்..., விடாதே பிடி..." என்று கத்தியபடி ஓடி வந்தனர். அதனால் முகாமின் பிரதான கதவருகே நின்ற சிப்பாய் உஷாரானான்.



கதவைநோக்கி ஓடிவந்த அருபேவைக் கண்டதும் சுடலாமா, விடலாமா என்று ஒரு நொடி தயங்கினான்.

பிரிகேடியராக அருபே இந்த முகாமுக்கு பலதடவை வந்துள்ளார். அப்போதெல்லாம் 'சல்யூட்' பண்ணியவன் அந்தச் சிப்பாய்.

ஒரு நொடிதான் அந்தத் தயக்கம். மறு நொடியே ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டான்.

அவனது துப்பாக்கி உயர்ந்தது. தோட்டாக்களை கக்கியது.

பிரிகேடியர் அருபே சர்வ நிச்சயமாய் மரணத்தை இறுகத் தழுவினார்.

அமீனே அவரை நேரடியாக விசாரணை செய்ய வருவதாகக் கூறியிருந்தான். அதற்கு முன்பே அவரது மரணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது.

அருபேயின் உடலை முலாகோ மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். உடல் அங்கு கொண்டு செல்லப்பட்ட சில நிமிடங்களில் அமீன் அங்கு வந்து சேர்ந்தான்.

ஹென்றி சியம்பாவும் அமீனுடன் வந்திருந்தார். அமீன் வந்திருப்பதை அறிந்ததும் பிரதி சுகாதார மேலதிகாரி பதை பதைக்க ஓடிவந்தார்.

"அருபே, பிரிகேடியர் அருபேயின் உடல் எங்கிருக்கிறது?" என்று கேட்டான் அமீன்.

அவர் வழிகாட்டி முன்னால் செல்ல, அமீனும், சியம்பாவும் பின்னால் சென்றனர்.

பிரேத அறையை நெருங்கியதும் ஏனையோரை அங்கேயே நிற்குமாறு அமீன் சைகை காட்டினான். காவலாளி கதவைத் திறந்துவிட, அவனிடமிருந்த சாவியைப் பெற்றுக்கொண்டு உள்ளே நுழைந்த அமீன், கதவை உட்புறமாக பூட்டிக்கொண்டான்.

பிரதி சுகாதார மேலதிகாரி சியம்பாவின் முகத்தைப் பார்த்தார். அவருக்கு குழப்பமாக இருந்தது. உள்ளே தனியே நின்று அமீன் என்ன செய்யப்போகிறான் என்பது புரியாத புதிராக இருந்தது.

உள்ளே சென்ற அமீன் கால் மணிநேரமாக வெளியே வரவில்லை.

சியம்பாவும், அதிகாரியும் ஒருவரை ஒருவர் அடிக்கடி பார்த்தபடி வெளியே காத்திருந்தனர்.

## உண்மைத் தொடர்

## அதிர் இடி 54

**கடந்தவாரம்**

**பெண் மந்திரவாதியை ஜிஞ்சா நகரில் சந்திக்கிறான் அமீன்—அவள் அமீனை உடல்ரீதியாக தீண்டி மகிழ்விக்கிறாள். அமீனுக்கு அவள்மீது நம்பிக்கை பிறக்கிறது. துன்பம் யாவும் தீரும் என்று ஆசிர்வதித்து அனுப்புகிறாள்.**

இனி...

20 நிமிடம் கரைந்த பின்னர் கதவு திறந்தது. அமீன் வெளியே வந்தான். விறு விறுவென்று நடந்து காரில் ஏறிப்போய்விட்டான்.

உள்ளே என்ன நடந்தது, அமீன் ஏன் அங்கே தனியாக இருந்தான்?" என்பதை அறிய விரும்பினார் மேலதிகாரி.

பிரிகேடியர் அருபேயின் உடல் வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருந்தது.

அந்தத் துணியை தன் கரங்களால் அகற்றி அருபேயின் உடலைப் பார்வையிட்ட மேலதிகாரியின் இதயம் அதிர்ந்தது.

அருபேயின் வலது கையின் புறப்பகுதியில் சதை வெட்டி எடுக்கப்பட்டிருந்தது. பிரேத பரிசோதனைக்குப் பின்னர் அந்த உடல் துணியால் மூடப்படும் போதும் பார்த்திருந்தார் அதிகாரி.

'அப்போது இப்படி இருக்கவில்லை. அப்படியானால்...' அவருக்கு அதனை நினைக்கவே பயமாக இருந்தது.

உடலை மறுபடி மூடினார். மூடும் போது அவரது கைகள் பயத்தில் நடுங்கின.

தான் கண்ட காட்சியை எவரிடமும் சொல்லவில்லை. அமீன் மனித மாமிசம்-பச்சையாகவே சாப்பிடுபவன் என்று அவருக்கு அதுவரை தெரிந்திருக்கவில்லை.

அதனால், தனக்கு மிகப் பெரிய இரகசியம் ஒன்று தெரிந்துவிட்டதாக அவர் நினைத்தார்.

அதற்காக அவர் சந்தோசப்படவில்லை. சாவுப்பயம்தான் ஏற்பட்டிருந்தது.

தனக்கு அந்த இரகசியம் தெரியும் என்பது அமீனுக்கு தெரிந்தால் தன் உயிர் தங்காது என்று பயந்தார்.

உகண்டாவில் பலதரப்பட்ட இன மக்கள் வாழ்ந்து வந்ததால், அங்கு பல விதமான சம்பிரதாயங்கள் காணப்பட்டன.

பல்லாண்டுகளாக இன மோதல்களும் நிலவி வந்தன. ஓரினத்துடன் இன்னோர் இனம் இணைந்து செயற்படுவது அரிது. எப்போதுமே பகைமை பாராட்டிய வண்ணமே இருப்பர்.

ஆண்கள் எப்போதும் ஈட்டி, கோடாரி, கத்தி போன்ற ஆயுதங்களுடன் மோதலுக்குத் தயாராக இருப்பார்கள்.

தாங்கள் வாழும் பிரதேச எல்லைக்குள் பிறிதோர் இனம் பிரவேசிக்க அனுமதிக்க மாட்டார்கள்.

உகண்டாவில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் பல இனங்கள் தங்கள் பழைய பழக்க வழக்கங்களை மாற்றிக் கொண்டன.

எனினும் சில இனங்கள் மட்டும் தமது சம்பிரதாயங்களை அப்படியே கடைப்பிடித்து வந்தன.

இடி அமீன் 'கக்வா' இனத்தைச் சேர்ந்தவன். அந்த இனத்தினர் எதிரிகளை கொன்றால், அவர்களது இரத்தத்தில் கொஞ்சமாயினும் ருசிபார்ப்பது வழக்கம். கொல்லப்பட்ட எதிரியின் உடலில் ஒரு துண்டை வெட்டிப் புசிப்பதும் உண்டு.

அதற்கு ஒரு காரணம் வைத்திருந்தார்கள்.

கொலையானவரது ஆவி கொலைக்குக் காரணமானவரைப் பழிவாங்காது. தன்னுடைய இரத்தமோ, அல்லது உடலின் ஒரு பகுதியோ, கொலைகாரரின் உடலில் ஐக்கியமாகிவிடுவதனால், தன்னுடன் இணைந்த ஒரு உடலுக்குத் தீங்கு செய்ய அந்த ஆவி துணியாது. அப்படித்தான் தமது செயலுக்கு 'கக்வா' இனத்தவர் காரணம் வைத்திருந்தனர்.

நாகரிகம் அடைந்துவிட்டபோதும், 'கக்வா' இனத்தவர் மத்தியில் தற்போதும் இப்பழக்கம் இருக்கிறது. நகரங்களில் வாழ்வோர்கூட இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை கைவிடாதிருக்கின்றனர்.

உகண்டாவின் ஜனாதிபதியாக இருந்து கொண்டே அமீன் மனிதமாமிசம் சாப்பிடுவான் என்பதைத்தான் பலரால் நம்ப முடியாதிருந்தது.

அப்படி நம்ப மறுத்தவர்களும் நம்பும் விதமாக பல கொடூரங்கள் நிகழத் தொடங்கின.

பெண் மந்திரவாதியை உகண்டாவின் தலைநகரான கம்பாலாவிற்கே அழைப்பித்தான் அமீன்.

(இடி தொடரும்)

## தருவது ரசிகன்

# மலையில் காதலர்கள்



இளவரசர் சாள்ஸ் இப்போது தன் காதலியுடன் வெளியே சுற்றுவதற்கு தயங்குவது கிடையாது.

50 வயதான கமீலாவுடன் சாள்ஸ் கைகோர்த்தபடி வலம் வருகிறார். டயானா உயிரோடு இருந்தவரை கமீலா, சாள்ஸ் காதல் திரைமறைவிலேயே தொடர்ந்தது.

சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றுக்கு தன் மகனுடன் காரில் வந்தார் கமீலா. சிறிது நேரத்தில் சாள்ஸ் காரில் வந்தார்.

விழா முடிந்ததும் மூவரும் ஒரே காரிலேயே சென்றனர். அவர்களை முற்றுகையிட்டு 'கிளிக்' செய்தனர் புகைப்படக்காரர்கள். அவர்களது எண்ணிக்கை இருநூறுக்கு மேல்.

சாள்ஸ் தற்போது ஆல்ப்ஸ் மலைக்கு சென்றுள்ளார். வழக்கமாக தனது மகன்மார் இருவருடனும்தான் மலைக்கு சென்று பொழுதைக் கழிப்பார்.

இம்முறை மகன்மார் செல்லவில்லை. கமீலா சென்றிருக்கிறார். மலை, தனிமை, இந்த வயதான காதலர்களுக்கு அதுதான் இனிமை.

# குழந்தையோ குழந்தை



அமெரிக்காவில் கொழு கொழுகுழந்தை ஒன்று பற்றி பத்திரிகைகள் பெரிதாக செய்தி வெளியிட்டுள்ளன.

குழந்தையின் பெயர் லிண்டன் வாஸ். ஒரு வயதில் 24 கிலோ இருக்கிறது. இந்த வயதில் சாதாரணமாக எட்டு, பத்துக் கிலோதான் இருக்க வேண்டும். இரண்டரை அடி உயரத்துடன் 24 கிலோ எடையுள்ள குழந்தை ஆச்சரியம்தான்.

ஆனாலும் இதனைவிட குண்டுக் குழந்தைகள் கின்னஸில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், இக் குழந்தையை கின்னஸில் சேர்க்க முடியவில்லை.

இந்தப் பெண் குழந்தையைப் பெற்ற தம்பதி பூரித்துப் போயிருக்கிறது. பத்திரிகைகள் மொய்க்கின்றன.

கொடுத்ததுதான் கொடுத்தான் கொழு கொழுப்பாய் குடுத்தான்.

# கிளின்ரன் கிலாரி உறவில் விரிசல்



1982ல் கிளின்ரன்-கிலாரி

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன்மீது படு கோபத்தில் இருக்கிறார் கிலாரி. கிளின்ரன் பயங்கரமான செக்ஸ் பிரியர். அவரைத் திருத்தவே முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார் கிலாரி.

தன்னுடன் எப்படியெல்லாம் கிளின்ரன் இன்பம் அனுபவித்தார். எப்படியான உறவில் கிளின்ரனுக்கு விருப்பம் என்பதையெல்லாம் மோனிகா விலாவாரியாக விபரித்திருந்தார்.

இப்போது ஜுவானிட்டா பிராட்ரிக் என்னும் அழகி தன்னுடன் கிளின்டன் எப்படியெல்லாம் உறவு வைத்துக் கொள்வார் என்று விபரிக்கத் தொடங்கியுள்ளார்.

அப் பெண்மணி கிலாரிக்கு ஃபோன் செய்து, கிளின்ரனின் அந்தரங்க தகவல்கள் சிலவற்றைக் கூறி, 'இப்போதாவது நம்புகிறீர்களா? நான் கிளின்ரனை முற்றாக அறிந்தவள் என்பதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்?" என்று கேட்டாராம்.

கிளின்ரனைப் பற்றி கூறப்பட்ட அந்தரங்க தகவல்கள் சரியாக இருந்ததால்தான் கிலாரி கடும் கோபம் அடைந்துள்ளார்.

"மோனகாவுடன் மட்டும் மனது தடுமாறிவிட்டது. வேறு பெண்கள் யார்மீதும் மோகம் கொண்டதே கிடையாது" என்று கிலாரியிடம் கிளின்ரன் பொய் கூறியிருக்கிறார்.

அந்தப் பொய் சாயம் வெளுத்து வருவதால் கிளின்ரன், கிலாரி உறவில் விரிசல் தோன்றியுள்ளது.

பெண்களைக் கண்டாலேபோதும் வழிந்து நிற்கும் ஆசாமிதான் கிளின்ரன் என்று அவரது எதிரிகள் கிண்டல் பண்ணுகிறார்கள்.

சிறு வயது முதலே செக்ஸ்மீது அதீத ஈடுபாடு கொண்டவர் கிளின்ரன். அதுவும் வக்கிரமான செக்ஸ் ஆசைகள் கொண்டவர். கிலாரியிடம் பெறமுடியாத சில சந்தோசங்களை தன் பெண் நண்பிகள் மூலம் பெற்றுக் கொண்டார் என்று கூறப்படுகிறது.

# அம்பிகா விபத்து



நடிகை அம்பிகா இரண்டாவது திருமணம் செய்து கொண்டு விட்டார். அவரது கணவர் பெயர் ரவிகாந்த்.

தனது கணவருடன் காரில் சென்ற அம்பிகா விபத்தில் சிக்கினார். சென்னையில் விழுப்புரம் பகுதியில் அவர்கள் சென்ற கார் விபத்துக்கு உள்ளானது. காரிலிருந்து வெளியே வரமுடியாது அம்பிகா அவதிப்பட்டார்.

அப்போது அவ்வழியே வந்த பொலிஸ் அத்தியட்சகர்தான் அம்பிகாவை காரில் இருந்து மீட்டெடுத்து காப்பாற்றினார். அந்த பொலிஸ் அத்தியட்சகரின் பெயரும் ரவி.

சினிமாவில் வருவது போன்ற சம்பவங்கள் நிஜத்திலும் நடப்பதுண்டு. அது நடிகை அம்பிகா வாழ்விலும் நடந்திருக்கிறது.



படிப்பகம்



## வேகப் புறா

நவீன தொடர்புச் சாதனங்கள் அறிமுகமாவதற்கு முன்னர் புறாக்கள் மூலமே ஓரிடத்திலிருந்து வெகு தொலைவுக்கு அப்பாலுள்ள பிறிதோரிடத்துக்கு செய்திகளை அனுப்புவார்கள். மிக வேகமாகப் பறந்து சென்று உரியவரிடம் தகவலைச் சேர்த்து விடுமாம் புறாக்கள். போர்க்களத்தில் போரிடும் போராளிகளுக்கும் காதலன்-காதலி ஆகியோருக்கும் தகவல் பரிமாற பண்டைக் காலத்தில் இப்புறாக்கள் உதவி வந்துள்ளன.

பிரிட்டனில் புறாக்களைப் பறக்கவிடும் போட்டிகள் இப்போதும் நடைபெறுகின்றன. இதற்காகவே புறாக்களை வளர்த்து பயிற்சி கொடுக்கிறார்கள்.

பறவைகளில் மிகவேகமாகப் பறக்கும் சக்தி வாய்ந்தவையாகப் புறாக்கள் விளங்குகின்றன. காலநிலை சாதகமாக இருக்குமானால் மணிக்கு 56 முதல் 64 கிலோ மீட்டர் (35 முதல் 40 மைல்) வரை புறாக்கள் பறக்குமாம். சில சந்தர்ப்பங்களில் 145 கிலோ மீட்டர் வரை பறக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது. பறவைகளில் புறாக்களது இந்த வேகமே உலக சாதனை வேகமாக கின்னஸில் பதியப்பட்டுள்ளது.

ஆண் புறாவும் பெண் புறாவும் ஒன்றை ஒன்று விரும்பினால் சில நாட்கள் ஒன்றாகவே பறந்து திரியும். ஆண் புறா பெண் புறாமீதான தன் அன்பை வெளிப்படுத்த சில விதைகளை பெண் புறாவின் வாயினுள் ஊட்டிவிடும். இவை உடனடியாகவே காதல் லீலைகளில் ஈடுபடுவதில்லை. ஒன்றையொன்று இணை பிரிவதில்லை என்று திடமான முடிவு எடுத்த பின்னர் அவற்றின் வாழ்நாளில் இணை பிரிவதில்லை.

புறாக்கள் வேகமானவைதான். ஆனால் நம்மை வந்தடைய மட்டும் தாமதமாகின்றன. சமாதானப் புறாவைத்தான் சொல்கிறோம்.

## பணக்கட்டு விளையாட்டு



நாணயங்களை வைத்து 'காசுவிளையாட்டு' விளையாடுவோரைப் பார்த்திருக்கிறோம். கற்றை கற்றையாக நோட்டுகளை வைத்து விளையாடுவோரை நிச்சயமாக நாம் பார்த்திருக்க மாட்டோம்.

படத்தில் சில பிள்ளைகள் உண்மையான பண நோட்டு கட்டுக்களையே வைத்து விளையாடுகிறார்கள். ஏறத்தாழ 80 வருடங்களுக்கு முன்னர் 1920ம் ஆண்டளவில் ஜெர்மனியில் பிடிக்கப் பட்ட படம் இது.

முதலாவது உலகப் போர் 1914ம் ஆண்டு தொடங்கி 1919 வரை நடைபெற்றது. யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஜெர்மனியில் அரசியலிலும் சமுதாயத்திலும் ஸ்திரமற்ற நிலமை தாண்டவமாடியது. பணவீக்கம் கட்டுக்கடங்காமல் போனது. அக்கால கட்டத்தில் அளவுக்கு அதிகமாகப் பண நோட்டுகள் அச்சடிக்கப்பட்டன. வெகுவரைவில் அந்நோட்டுகள் செல்லுபடியாகாமல் போய்விட்டன. இந் நோட்டுகளையே கட்டுக்கட்டாக அடுக்கி வைத்துச் சிறுவர்கள் விளையாடுகின்றனர்.

இத்தகைய அரசியல் ஸ்திரமற்ற தன்மையினைப் போக்கி சமூதாய வாழ்விலும் பொருளாதர மற்றும் அரசியலிலும் புரட்சிகரமான மாறுதல்களை அந்நாட்டில் தோன்றிய 'நாஸி' இயக்கம் ஏற்படுத்தியது. 'இரத்தவெறி பிடித்த அரக்கக் கொலைகாரன்' என்று பின்னாளில் வர்ணிக்கப்பட்ட அடோல்ஃப் ஹிட்லர் 1933 ஆண்டில் ஜெர்மன் நாட்டின் அதிபராக பதவியேற்றார். அதன்பின்னரே நாட்டின் நிலமை ஓரளவு சீரடைய ஆரம்பித்தது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உலகிலேயே அதிகளவு பண நோட்டுக்கள் தெருக்களில் குவிந்து கிடந்தது ஜெர்மனில்தான். ஜெர்மன் பொருளாதாரத்திற்கு அது ஒரு சோதனை என்றாலும், அதுவே உலக சாதனையாகவும் அமைந்தது.



## சத்தம் இல்லாத வாகனம்

பிரிட்டிஷ் பொலிசார் குற்றாவாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக முன்பெல்லாம் பெரிய மோட்டார் கார்களையே பயன்படுத்தி வந்தனர்.

இக் கார்களின் உறுமல் சத்தத்தைக் கேட்டவுடன் குற்றவாளிகள் பாய்ந்தோடி ஒளிந்து கொள்வார்கள்.

தென்மேற்கு இங்கிலாந்திலுள்ள டேவோன் பொலிசார் புதிதாக சிறிய அளவிலான-ஒருவர் மட்டுமே பயணம் செய்யக்கூடிய 'முச்சக்கரவண்டிகளை ஜெர்மனியிலிருந்து தருவித்துள்ளனர்.

இந்த வண்டி ஓடும்போது எதுவித ஒலியும் கேட்காது. பட்டரி மூலம் கிடைக்கும் மின்சக்தியால் இவ்வண்டி செலுத்தப் படுகிறது.

ஆக 40 கிலோ மீட்டர் வேகத்தில் ஓடும் இவ்வண்டி மிகக் குறுகிய தெருக்கள் ஊடாகவும் ஓடிச் செல்லக்கூடியது.

2.7 மீட்டர் நீளமும் 90 சென்டி மீட்டர் அகலமும் கொண்ட இவ்வண்டி தொடர்ந்து 50 கிலோ மீட்டர் ஓடும். அதன் பின்னர் இதற்கான பட்டரிக்கு மின்சக்தி பாய்ச்சப் படவேண்டும்.

மேலதிகமாக பட்டரிகளைக் கொண்டு சென்று இடையில் மாற்றிக் கொள்ளவும் முடியும்.

சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் இவ்வண்டியால் எத்தகைய பாதிப்பும் கிடையாது. இதற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்தான் விநோதமாக இருக்கிறது. 'பறக்கும் வாழைப்பழம்' என்பதுதான் இந்த வண்டியின் பெயர்.

## துணிச்சலான வேட்டை



பாம்பு வகைகளில் மலைப்பாம்புகளே அதிக நீளமானவை. பெரும்பாலும் வெப்பமுள்ள நாடுகளிலேயே இவை காணப்படுகின்றன.


தென் கிழக்காசிய மற்றும் ஆசிய நாடுகளில் காணப்படும் மலைப்பாம்புகள் 6 மீட்டர் நீளம் வரை வளர்கின்றன. ஆனால் ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் காணப்படும் பாம்புகள் 9 மீட்டர்வரை வளர்க்கின்றன.

மான், பன்றி, மாடு போன்ற விலங்குகள்மீது பாய்ந்து, அவற்றின் உடல் மீது தனது உடலால் சுற்றி அமுக்கி அவற்றின் உயிரைப் போக்கிவிடும். மூச்சு நின்றதும் வாயை அகலமாக விரித்து மெதுவாக விழுங்க ஆரம்பிக்கும்.

மிருகங்களின் உடலைச் சுற்றி வளைக்கும்போது அவற்றின் எலும்புகளை முறிப்பதில்லை. எலும்புகளை முறித்து மெதுமையாக்காமல் விழுங்குவதில்தான் இப்பாம்புகள் பிரியம் காட்டுகின்றன.

சில சந்தர்ப்பங்களில் ஆபிரிக்க மலைப்பாம்புகள் மனிதர்களையே பிடித்து விழுங்கியுமுள்ளன. ஆபிரிக்க மலைப் பாம்பை மனிதர்களும் வேட்டையாடுவர். காடொன்றில் மலைப்பாம்பை வேட்டையாடிச் செல்லும் காட்சிதான் இது. இந்த வேட்டைக்கு அசாத்திய துணிச்சல் தேவை.

## சிக்காத மீன்



பார்த்ததும், குட்டி விமானம் என்று மனதில் குறித்து விடவேண்டாம். மீன்களில் பற்பல இனங்கள் இருப்பது தெரிந்தது தான். அவற்றில் பலரால் அறியப்படாத, ஆச்சரியமீன் இது.

விமானம் போன்ற அமைப்பை உடைய இந்த மீன், 'பறக்கும் மீன்' என்று அழைக்கப்படுகிறது.

10 அடி முதல் 100 அடிவரை பறக்கக்கூடியது. படகுகளில் இருந்து வலை வீசப்படும்போது, அதில் சிக்காமல் பறந்துவிடும். இதனால் இவை வலையில் விழுவது அபூர்வம். தாமாக படகுக்குள் வந்து விழுந்தால் பிடிக்கலாம்.

## அதைவிட நீளம்


உலகிலேயே அதி நீளமான சோஃபா (இருக்கை) என்ற சாதனையை 1995ம் ஆண்டு பிரிட்டனில் டேர்பி நகரிலுள்ள வீட்டுத் தளபாடங்களை வடிவமைக்கும் நிறுவனமான 'ஆர்ட்ஃபோமா' நிலை நாட்டியது. ஜெர்மன் கொலோங் நகரில் இடம்பெற்ற கண்காட்சியின்போது இச்சாதனை வெளியானது.

17 பேர் இந்த இருக்கையில் வசதியாக அமரலாம். இந்த சோஃபாவின் படம் முரசில் இடம்பெற்றிருந்தது. அதன் நீளம் 24 அடி.

இப்போது அதேபோன்ற 4 மடங்கு, 101 அடி நீளமான சோஃபா உருவாக்கப்பட்டு உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துக் கொண்டது. துபாயில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த சோஃபாவில் விஷால் வெங்கட் என்ற சிறுவன் அமர்ந்திருக்கிறான்.



தகவல் பெட்டி



## வெள்ளோட்டம்

ஆறு வருடங்களைச் செலவிட்டு அசத்தலான சாதனையை நிலைநாட்டியுள்ளார் ரொம் விபேக் என்ற இந்த ஜெர்மன்காரர். 'பிக்ரோ' (பெரிய கால் விரல்) என்ற பெயரை இந்த சாதனை வண்டிக்கு சூட்டியுள்ளார்.

மிகப் பெரிய சக்கரங்கள் முன்னும் பின்னுமாகப் பொருத்தப்பட்டுள்ள இந்த 'மோட்டார் சைக்கிள் 12 சிலிண்டர்களைக் கொண்ட 300 குதிரை வலுக்கொண்ட இயந்திரத்தால் இயக்கப்படுகிறது.

இவ்வண்டி மணிக்கு 100 கிலோ மீட்டர் வேகத்தில் பாய்ந்து செல்லும் 2.3 மீட்டர் உயரமும் 4.7 மீட்டர் நீளமும் கொண்ட இவ்வண்டி 2 இலட்சத்து 30 ஆயிரம் டொலர் பெறுமதியானது என்று விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நம்நாட்டு மதிப்பில் 1 கோடியே 61 இலட்சம் ரூபாய்கள்.

'பிக்ரோ'வை வடிவமைத்த ரொம் விபேக் வண்டியில் அமர்ந்து வெள்ளோட்டம் நடத்திப் பார்க்கிறார்.


படிப்பகம்

திரையுலக மறுபக்கம் 96

# விஜய்க்கு ஏற்பட்ட அதிர்ச்சி
# தந்தை கொடுத்த எச்சரிக்கை

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

நடிகர் விஜய்க்கு ரசிகைகள் தொல்லை இருப்பது தெரிந்த சங்கதிதான். தன்னைச் சந்திக்க வரும் அழகான ரசிகைகளை மனதுக்கு பிடித்துப் போனால் விஜய் விடமாட்டார். தன் உதவியாளர் மூலம் தூதனுப்பி வளைத்துக் கொள்வார். தனியிடத்துக்கு அழைத்துக் கொள்வார்' என்று தமிழக சஞ்சிகை ஒன்று கிசு கிசு வெளியிட்டது.

இதுபற்றி விஜய்யிடம் கேட்டால், சிலர் பொறாமையில் கட்டிவிடும் கதை என்று முற்றுப்புள்ளி வைக்கிறார்.

அந்தச் செய்திக்கு பதிலடியாக விஜய் வட்டாரம் ஒரு நிகழ்ச்சியை உதாரணம் காட்டுகிறது.

விஜய்யை சந்திக்க ரசிகை ஒருவர் வந்தார். மிக அழகானவர். இளமையானவர் விஜய்யிடம் 'ஓட்டோ கிராஃப்' வாங்குவதற்காக சென்றார்.

அப்போது விஜய் தனியாக இருந்தார். 'ஓட்டோ கிராஃப்' வாங்கிய அந்த ரசிகை, திடீரென்று விஜய் எதிர்பாராத விதமாக கட்டியணைத்துக் கொண்டார்.

இளமையான, அழகான பெண். அவரது உடல் முழுக்க விஜய்மீது அழுத்தி நிற்கிறது. விஜய்யும் இளைஞர். வேறு யாராவதாக இருந்தால், சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி இருப்பார்கள். ஆனால் விஜய் உணர்ச்சிவசப்படவில்லை.

அந்த ரசிகையை தன்னிடமிருந்து விலக்கினார். ரசிகையோ விட்டபாடில்லை. 'கிஸ் மீ, கிஸ் மீ, ப்ளீஸ் கிஸ் மீ' என்று முரண்டு பிடித்தார்.

விஜய் தன்பலம் கொண்ட மட்டும் முயற்சித்து ரசிகையின் பிடியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டார்.

அந்த ரசிகை ஏமாற்றம் தாளாது கேவிக் கேவி அழுதார். விஜய் மிகப் பொறுமையாக அந்த ரசிகைக்கு புத்தி கூறினார்.

அதன்பின்னரே ஓரளவு சமாதானமடைந்தவராக அந்த ரசிகை விடைபெற்றுச் சென்றார்.

முன்னணி கதாநாயகர்களுக்கு இதுபோன்ற அனுபவங்கள் ஏற்படுவது புதுமையல்ல. பலர் வாய்ப்பை தவறவிடுவதில்லை. விஜய் வித்தியாசமானவர். என்று அடித்துக் கூறுகின்றது விஜய்யின் நண்பர்கள் வட்டாரம்.

## தந்தை பாய்ச்சல்

**த**மிழ்ப் பட உலகில் தற்போதைய ராசியான நடிகை அவர்தான். அவரும் இளம் நடிகரும் நடித்து வெளியான படம் சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கிறது.

அந்த நடிகையின் காதலரான நடன இயக்குநர், நடிகை தங்கியிருந்த நட்சத்திர விடுதி அறையே கதியென்று கிடந்தார்.

நடிகைக்கும் அதனால் இரவுத் தூக்கம் இல்லாமல் போனது. அதனால் படப்பிடிப்பில் எரிந்து விழுந்தார். படப்பிடிப்பு குழுவில் பையன் ஒருவரது கரம் ஏதேச்சையாக நடிகையின் மார்பில் பட்டுவிட்டது. வேண்டுமென்றே பட்டதாக கற்பிதம் பண்ணிக் கொண்டு, அந்தப் பையனை கன்னத்தில் அறைந்துவிட்டார்.

இதற்கிடையே, நடன இயக்குநரது தந்தை நடிகையை தேடிப் போயிருக்கிறார். அந்தச் சமயம் பார்த்து மகன் அங்கு நடிகையுடன் ஜாலியாக இருந்திருக்கிறார்.

அவர்களது கோலத்தைப் பார்க்கவே தந்தைக்கு புரிந்துவிட்டது. நடிகையை ஆபாசமாக திட்டித்தீர்த்தார். 'சினிமா உலகைவிட்டே ஓட விரட்டிவிடுவேன்!' என்றும் மிரட்டினார். நடிகையின் காதலர் தந்தையை தடுக்கவோ, தணிக்கவோ இயலாமல் தலையைச் சொறிந்தபடி நின்றார்.

குறிப்பிட்ட விடுதியில் உள்ள பலர் இந்த சண்டையை வேடிக்கை பார்த்தனர். அதன் பின்னரே விடுதியைக் காலி செய்துவிட்டு, தனியான வீடு பார்த்துக் குடியேறினார் நடிகை.

தந்தை திட்டித் தீர்க்கும் போது வேடிக்கை பார்த்த காதலர்மீது கோபித்துக் கொண்டு சில நாட்கள் அவரைப் பார்க்காதிருந்தார். பின்னர் ஊடல் முடிவுக்கு வந்தது. தற்போதும் காதல் தொடர்கிறது.

## நினைவிருக்கும்வரை

பிரபுதேவா, கீர்த்திரெட்டி, சுஜாதா, விவேக், தாமு நடித்துள்ள படம் நினைவிருக்கும்வரை' முதல் பாதி முழுக்க வயிறு புண்ணாகும் அளவுக்கு சிரிக்கலாம். இடைவேளைக்குப் பின்னர் தொய்வு தலை நீட்டுகிறது.

பிரபு தேவாவின் நடிப்புத் திறமையை வெளிக்கொண்டு வந்துள்ள படம் இது. நடனம் மட்டுமல்ல நடிக்கவும் தெரியும் என் பதை நிரூபித்துவிட்டார். படத்தில் விவேக்தான் நகைச்சுவை ஆட்சி.

'எய்ட்ஸ்' நோயாளியாகவும் வில்லனாகவும் நடித்துள்ளார் ரஞ்சித். சுஜாதா பிரபு தேவாவின் அம்மாவாக இயல்வான நடிப்பில் நெகிழ்த்துகிறார்.

தமிழ்நாட்டில் 50 நாட்களுக்குள் முக்கிய திரையரங்குகளை விட்டு தூக்கப்பட்டுவிட்டது. நம் நாட்டில் விடியோ மற்றும் சி.டி.யில் உலாவுகிறது. பார்க்கலாம்.

## ஹொலிவூட்டில் பிரசாந்த் மடோனாவும் நடிக்கிறார்

ஆங்கிலப் படம் ஒன்றில் முதன் முதலாக தமிழ்ப்பட கதாநாயகனாகவே நடிக்கப் போகிறார் என்பதுதான் புதுமை.

அந்தப் புதுமையைச் செய்யப் போகிறார் பிரசாந்த். அவருக்கு ஜோடி ஐஸ்வர்யாராய். பிரசாந்த்துக்கு இரட்டை வேடம். வயதான பிரசாந்த்துக்கு ஜோடி யார் தெரியுமா? குஷ்பு.

இப்படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'எ ரைட் டு த் ட்ருத்' (உண்மையைக் கண்டறியும் உரிமை)

பிரபல இந்திய இயக்குநர் இயக்கப்போகும் இப்படத்தில் பிரபல பொப் பாடகி மடோனாவும் நடிக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தென்னாபிரிக்காவில் நடைபெற உள்ளது. அனுபம் கெர், ராதிகா, ராணி முகர்ஜி ஆகியோரும் நடிக்கின்றனர்.

தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் தயாராகப்போகிறது.

## 'ஸ்டாலின்'

'குரு பார்வை' வெற்றியின் பின்னர் பிரகாஷ்ராஜ் பக்கம் தயாரிப்பாளர்களது பார்வை திரும்பியுள்ளது.

பிரகாஷ்ராஜ் கதாநாயகனாக மளமளவென்று ஒப்பந்தமாகியுள்ள படங்களில் ஒன்று 'ஸ்டாலின்'. இதில் ஜோடி ரோஜா. 'குரு பார்வை' படத்திற்கு வசனம் எழுதிய பிரபாகர் இப்படத்தை இயக்குகிறார்.

தமிழ், தெலுங்கு இரண்டிலும் இப்படம் தயாராகிறது. நேர்மையான பொலிஸ் அதிகாரியாக பிரகாஷ்ராஜ் நடிக்கிறார். மன்சூரலிகான் உட்பட பலர் நடிக்கிவுள்ளனர். முதற்கட்ட படப்பிடிப்பு முடிந்துவிட்டது.

சோவியத் யூனியன் அதிபராக இருந்து, புரட்சியின் எதிரிகளை ஒடுக்கியவர் ஸ்டாலின். அவரது பெயர்தான் பிரகாஷ்ராஜுக்கு படத்தில் சூட்டப்பட்டுள்ளது.




அப்பாஸ்-ஐஸ்வர்யா ராய்
படம்: கண்டு கொண்டேன் கண்டுகொண்டேன்

## கண்ணோடு காண்பதெல்லாம்

'கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்கு சொந்தமில்லை' இது 'ஜீன்ஸ்' படத்தின் பிரபல பாடல்.

அர்ஜுன் நடிக்கும் படத்திற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்: 'கண்ணோடு காண்பதெல்லாம்'. புதிய இயக்குநர் பிரபு இப்படத்தை இயக்கவுள்ளார்.

முன்னாள் நடிகையும், அரசியல் வாதியுமான வைஜெயந்தி மாலாவின் மகன் பிரவீன் பாலி இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறார்.

கதாநாயகிகள் இன்னமும் முடிவாகவில்லை. இசை: தேவா. நடனம்: ராஜு சுந்தரம்.

'இருபது வயதுவரை என் பெற்றோர் வசமிருந்தேன். இருபது நொடியில் உன் வசமாகி விட்டேன்...'' என்று தொடங்கும் பாடல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பாடலை கலைக்குமார் எழுதியுள்ளார்.

## எல்லைப்படை

சத்யராஜ், பிரபு நடிக்க மணிவண்ணன் இயக்கப் போகும் படம், 'மக்கள் நண்பன்' என்று விளம்பரம் வெளியானது. பிரபு நடிக்க மறுத்து வாபஸாகிவிட்டார். இப்போது பிரகாஷ்ராஜ் ஒப்பந்தமாகியுள்ளார்.

ரோஜா, தேவயாணி, ப்ரியா ராமன் ஆகியோரும் நடிக்கின்றனர். தேவயாணியின் அப்பாவாக நடிக்கிறார் மணிவண்ணன்.

எல்லைப் படையைப் பற்றிய கதையாம். சத்யராஜ் மார்க்கெட்டை உயர்த்துவதே மணிவண்ணனின் தற்போதைய ஒரே நோக்கம்.

## விஜயகாந்த்-சிம்ரான் 'கண்ணுபடப்போகுதய்யா'

இயக்குநர் விக்ரமனின் 'வானத்தைப் போல' படத்தில் விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடிப்பது பழைய செய்தி. இன்னுமொரு படத்திலும் விஜயகாந்த், இரட்டை வேடத்தில் நடிக்கிறார். புதிய இயக்குநர் பாரதிகணேஷ் இயக்கும் இப்படத்திற்கு 'கண்ணு படப் போகுதய்யா' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

தந்தை, மகனாக விஜயகாந்த் நடிக்கிறார். விஜயகாந்த் ஜோடியாக முதன் முதலில் நடிக்கிறார் சிம்ரான். இவர்களோடு சிவகுமார், கரண், ஆனந்தராஜ், லட்சுமி, தாமு, வையாபுரி ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை: எஸ்.ஏ.ராஜ்குமார்.

பாடல்கள்: வைரமுத்து.

'கண்ணுபடப்போகுதய்யா சின்னக் கவுண்டரே' என்ற பாடல் சின்னக்கவுண்டர் படத்தில் இடம்பெற்றது. விஜயகாந்தின் பிரமாண்டமான வெற்றிப்படம் அது. இப்போது அப் படத்தின் பாடல்வரியை படத்தின் பெயராக்கி விட்டனர்.

## பாதி பாதி

அர்ஜுனும், பார்த்திபனும் இணைந்து 'இரட்டை சூரியன்' படத்தில் நடிப்பது தெரிந்ததே. மற்றும் ஒரு தகவல்: அந்தப் படத்தை இருவரும் இணைந்தே தயாரிக்கிறார்கள். இரண்டு நடிகர்கள் இணைந்து படம் தயாரிக்க இணைவது அரிதான விஷயம். படத்தின் இலாபத்தில் இருவருக்கும் ஐம்பதுக்கு ஐம்பது.

## பிரகாஷ் ராஜ் குஷ்பு

"மாசில்லா உண்மைக் காதலே,மாறுமோ உன்மீது கொண்ட நேசமே.. என்று தொடங்கும் பழைய பாடல் மிகப் பிரபலமானது. ஏ.எம்.ராஜா, ஜிக்கி பாடிய பாடல்.

அப்பாடல் வரியில் முதலடியை உருவி, படத்திற்கு பெயர் சூட்டிவிட்டனர். பிரகாஷ்ராஜ், குஷ்பு நடிக்கும் புதிய படத்தின் பெயர்: 'மாசில்லா உண்மைக் காதலே'. இப்படத்தை இயக்குபவரும் புதியவர்தான். பெயர்: நந்தா. இவர் கே.பாலசந்தர், கோடி ராமகிருஷ்ணா போன்ற பெரும் இயக்குநர்களிடம் வித்தை பயின்றவர்.





பிரபுதேவா-கீர்த்திரெட்டி
படம்: நினைவிருக்கும்வரை

## ...டன் மும்பை அழகி

...தின் மகாவெற்றிப் படமான ...' படத்திற்கு இசையமைத்தவர் ...ன்) பட்நாகர்.
...ா நடித்து தற்போது வெளியா ...ன்றும் காதல்' படத்தின் இயக்கு ...ன். 'என்றென்றும் காதல்' படத்திற்கு ...தான்.
...ம் காதல்' நன்றாக ஓடிக் ...தால், மற்றொரு பெரிய படத்தை ...ார். அப்படத்தில் பிரசாந்த் கதா ...ாயகி மும்பை நடிகை பிரீத்திகா. ...கு 'காதல் தென்றல்' என்று ...ளனர். இசையும் மனோஜ் ... ரகுவரன், கரண், ... ஆகியோரும்

## இரண்டு படங்கள்

கார்த்திக் மார்க்கெட் தொடர்ந்து தொய்வின்றி இருப்பதால், பட வாய்ப்புக்களுக்கு குறைவில்லை.

புது இயக்குநர் சிவா இயக்கும் 'தொட்டால் பூ மலரும்' படத்தில் கார்த்திக் ஒப்பந்தமாகியுள்ளார். இசை: இளையராஜா. 'தொட்டால் பூ மலரும். தொடாமல் நான் மலர்ந்தேன். எம்.ஜி.ஆர். படப் பாடல்வரிகள்.

செல்வா இயக்கத்தில் கார்த்திக் நடித்த 'பூவேலி' வெற்றி குவித்த படம். செல்வா இயக்கத்தில் கார்த்திக் மீண்டும் நடிக்கிறார். ஜோடியாக இஷாகோபிகர் நடிக்கிறார். அப்படத்திற்கு ரோஜாவனம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. பூவேலி படத்திற்கு இசையமைத்த பரத்வாஜ் இசையமைக்கிறார். ஏனைய நட்சத்திரங்கள் இன்னமும் முடிவாகவில்லை.

## காதோடு சொல்லுகிறோம்

மந்திரமான நடிகை தமிழில் வாய்ப்பில்லாமல் தெலுங்குப் பக்கம் சென்றார். அங்கு தன் சதைப்பிடிப்புக்கு ஏற்ப படப்பிடிப்புக்களில் நடந்து கொண்டார். நடிகையைத் தேடி பலர் படையெடுத்தனர். நடிகையின் தந்தையார் அதனைக் கண்டித்தார். அதனால் தந்தையாரை வீட்டைவிட்டு துரத்தி விட்டார் நடிகை.

மணியான தாடிக்கார நகைச்சுவை நடிகர் விசித்திரமான நடிகையுடன் ராசியாக இருப்பது பரகசியம். சமீபத்தில் நடிகைக்காக ஒரு பெரிய தொகை கொடுத்து உதவியுள்ளாராம் மணியானவர். தற்போது மணியானவரின் ஊதியம் 40 இலட்சம். அதுவும் ஒரு படத்திற்கு பத்துநாள் தான் நடித்துத் தருவார். முன்னர் இன்னொரு மணியும் இப்படித் தான் லொள்ளுப் பண்ணினார்.

கருத்தம்மா நாயகியான 'ராஜ' நடிகை, தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தொழிலதிபர் ஒருவருடன் ராசியாகிவிட்டார். தன் தங்கைக்காக சில இயக்குநர்களிடமும் வாய்ப்புக் கேட்டு சந்தித்து வருகிறார்.

இஷா கோபிகர் எங்கு போனாலும் அவரது தாயாரும் ஒட்டிக்கொண்டு போவார். இதனால் சங்கடப்பட்ட சிலர் தாயாரின் காதுபட, இஷாவைவிட அம்மா அழகு' என்று கிண்டல் பண்ணினார்களாம். இப்போதெல்லாம் இஷா மட்டும் தனியாக படப்பிடிப்புக்கு செல்கிறார்.

சங்க நடிகையும் மூன்று எழுத்து நடிகரும் நகமும் சதையுமாக இருந்தது பழைய சமாச்சாரம். நடிகருக்கு வேறு பெண்ணுடன் திருமணம் நிச்சயமானதால் சங்க நடிகை மனமுடைந்தார். ஆனாலும் தன் சொந்த படம் ஒன்றில் நடிகைக்கு வாய்ப்புக் கொடுத்து ஆறுதல் படுத்தினார் நடிகர். சமீபத்தில் நடிகையின் பிறந்த நாள் அன்று இரவு பன்னிரண்டு மணிக்கு தொலைபேசி மூலம் வாழ்த்தினாராம் நடிகர். இப்போதும் தன்னுடன் நடிகர் நட்பாகவும், பசுமையான நினைவுகளை மறக்காமலும் இருப்பதை எண்ணி நடிகை மகிழ்ச்சியில் மிதந்தாராம். ஆனால் மறுநாள் நடிகருடன் தொடர்பு கொண்டார் நடிகை. நடிகரோ என்னை மறந்து விடு என்று கூறிவிட்டு தொடர்பை துண்டித்து விட்டாராம்.



இஷா கோபிகர்
படம்: காதல் கவிதை



பிரசாந்த்-கௌசல்யா
படம்: ஆசையில் ஓர் கடிதம்

## மினிசினி

❖ 'கள்ளழகர்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடித்த லைலா, மறுபடியும் விஜயகாந்திற்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடிக்கவுள்ளார்.

❖ 'காதல் கோட்டை 'படத்தை இயக்கிய அகத்தியன், அதை இந்தியிலும் இயக்கினார். விரைவில் வெளிவரவுள்ள இப்படத்திற்கு 'ஹிர்ப் தும்' எனப் பெயரிட்டுள்ளார். 'ஹிர்ப்தும்' என்றால் 'நீ மட்டும்' என்று அர்த்தமாம்.

❖ தமிழில் 'மறவாதே கண்மணியே', 'நினைத்தாலே' ஆகிய படங்களில் மட்டுமே நடித்துவரும் ரவளி, தெலுங்கில் சுமனுடன் நடித்த படமொன்று 'செக்யூரிட்டி ஆபீஸர்' என்ற பெயரில் தமிழில் டப் செய்யப்படுகிறது.

❖ பார்த்திபனின் 'ஹவுஸ்ஃபுல்' படத்தில் நாயகனாக நடித்த விக்ரம், தற்போது நடிக்கும் 'சேது' படத்திற்காக உடம்பை மெலிய வைத்து, மொட்டை அடித்துள்ளார்.

❖ 'துள்ளாத மனமும் துள்ளும்' வெற்றிப்படத்தை இயக்கிய எழில் அடுத்து அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கும் படத்தை இயக்கப் போகிறார்.

❖ மலையாளத்தில் சுரேஷ்கோபியை வைத்து 'லேலம்' (தமிழில் 'ஏலம்') படத்தை இயக்கிய ஜோஷி தற்போது சுரேஷ்கோபி கதாநாயகனாக நடிக்கும் 'பத்ரம்' என்ற படத்தை இயக்கி வருகிறார்.

❖ நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழ்ப் படமொன்றில் நடிக்கப் போகிறார் சங்கவி. இந்தப்படத்தில் கதாநாயகனாக நடிக்க இருப்பவர் சரத்குமார்.

❖ 'அடேங்கப்பா' என்ற பெயரில் முழு நீள நகைச்சுவைப்படமொன்று தமிழில் தயாராகவுள்ளது. இதில் நான்கு கதாநாயகர்கள் நடிக்கவுள்ளனர்.

❖ 'சத்யா' இந்திப்படத்தின் மூலம் இந்தியில் காலடி பதித்த தெலுங்கு நடிகர் சக்ரவர்த்தி, அடுத்து நடிக்கும் இந்திப்படத்தில் இவருடன் ஷாருக்கானும் நடிக்கிறார்.

❖ கே.பாலச்சந்தரின் கவிதாலயா நிறுவனம் தயாரிக்க முரளி நடிக்கும் படத்தை மனோஜ் குமார் இயக்குவதாக இருந்தது. இப்போது அந்த வாய்ப்பு புதிய இயக்குநருக்குப் போய் விட்டது.

## ...சல்ல ...ாயகி

கே.ஆர். விஜயாவின் இளைய சகோதரி கே.ஆர். ...த்திரி. அவரும் நடிகைதான். சில படங்களில் ...காட்டியபோதும், பெருமளவு பணம் சம்பாதித்தவர். ...டிச் சம்பாதித்தார் என்பது இரகசியம்.
...ப்போது அவரது மகள்மார் இரண்டுபேர் நடிகை ...ராகசுதா, அனுஷா. இருவருமே கவர்ச்சி காட்டத் ...ாதவர்கள். அப்படியிருந்தும் சுளையான வாய்ப்புக் ...கிட்டவில்லை.
...ாகசுதா சின்னத்திரை தயாரிப்பாளர் சிலரை ... திறமையால் கவர்ந்து வாய்ப்பு பெற்றுவிட்டார். ...கையில் 'சக்தி ரீ.வி'யில் ஒளிபரப்பாகும் 'குடும்பம்' ...த்திலும் ராகசுதாவை பார்க்கலாம். தன் தங்கைக்காக ...ல தியாகம் செய்யும் பாத்திரத்தில் நடிப்பவர்தான் ...தா.
...ாகசுதா சின்னத்திரை தயாரிப்பாளர்களது செல்ல ...கயாகிவிட்டாராம். மகளின் திறமையை ஊக்குவித்து ...றார் கே.ஆர். சாவித்திரி.

## அம்பிகா திருமணம்

அமெரிக்காவில் இருந்து திரும்பிய அம்பிகா பற்றி சினி விசிட் கூறிய சங்கதிகள் உண்மையாகி விட்டன.

அம்பிகா மறுபடி தன் பழைய கூட்டாளிகளோடு கூத்தடித்ததை அமெரிக்க கணவர் கண்டித்தார். உடனே திரும்பி வருமாறு அழைத்தார்.

அம்பிகாவுக்கு அந்த வாழ்க்கை பிடிக்கவில்லை. அதனால் அமெரிக்கா திரும்ப மறுத்துவிட்டார்.

அதன் பின்னர் நகைச்சுவை நடிகர் வடிவேலுவுடன் அம்பிகா நெருக்கமாக இருந்தார். அதே சமயம் தொழிலதிபரான இளைஞர் ஒருவரையும் காதலித்தார்.

சமீபத்தில் அந்த தொழிலதிபரை மணந்து கொண்டார். 'பூவெல்லாம் கேட்டுப்பார்' பட ஒலி நாடா வெளியீட்டு விழாவுக்கு இருவரும் தம்பதியாக வந்திருந்தனர்.

அம்பிகா தற்போது தொலைக்காட்சி நாடகங்களிலும் நடித்து வருகிறார். நம் நாட்டில் ஒளிபரப்பாகும் 'குடும்பம்', 'பஞ்சமி' ஆகிய நாடகங்களிலும் அம்பிகா நடிக்கிறார்.

## ...சாந்த் எழுதிய கடிதம்

...களசல்யா நடிக்க ஆரம்பித்தது மலையாளத்தில். ...மானது தமிழ்ப் படத்தில். 'காலமெல்லாம் காதல் ...' மூலம் பிரபலமானார்.
...ற்போது மலையாளத்தில் மம்முட்டி, மோகன்லால் ...பாருடன் தலா ஒரு படம் பண்ணுகிறார்.
...மிழில் பிரசாந்த்துடன் முதன் முதலாக ஜோடி ... படம், ஆசையில் ஓர் கடிதம்.
...வளியூரில் கல்யாணம் ஒன்றுக்கு செல்லும் ...ந்த் அழகான பெண் ஒருவரை பார்க்கி... உடனடியாக சிகரெட் அட்டையில் கடிதம் ...கிறார்.
...னால், அந்தப் பெண் தன் நண்பன் ... முடிக்கப்போகும் பெண் என்பது பின்னர் தெரிகிறது.
...தற்குள் நண்பனுடன் அப் பெண்ணுக்கு ...ணம் நடக்கிறது. அதன் பின்னர் அந்த ...விவகாரம் பிரச்சனையாகி படத்தின் உச்சக் ... வரை நீள்கிறது. அதுதான் படத்தின் கதை. ...ரசாந்த், கௌசல்யா இருவருமே இப்படம் ...தமாக வரும் என்று நம்புகிறார்கள்.

## இஷா கலக்கல்

'என் சுவாசக் காற்றே' படத்தில் இஷா கோபிகரின் நடிப்பை பாராட்டாதவர்கள் கிடையாது.

தன் கவிதை என்று தெரியாமல், அரவிந்தசாமி தனது கவிதைகளைப் புகழ்வதாக நினைக்கும் இஷாவின் பிரதிபலிப்பு அருமை. அதுபோல படம் முழுக்க காதல் காட்சிகளில் முத்திரை பதிக்கிறார்.

'காதல் கவிதை' படமும் இஷாவுக்கு நல்ல பெயர் தேடித்தந்துள்ளது. கவர்ச்சியை நம்பாது நடிக்கக் கூடிய நடிகைகளது பட்டியலில் இடம்பெற ஆசைப்படுகிறார்.

வாய்ப்புக்கள் சரியாக அமையுமானால், சென்ற ஆண்டில் கௌசல்யா கலக்கியதுபோல, இந்த ஆண்டில் இஷா கலக்குவார்.



சிம்ரான்

முகப்பில் / தபு / விஜய்

## பிரிய மறந்தனர்

வினீத், ரவளி இணைந்து நடிக்கும் 'மறவாதே கண்மணியே' நீண்டகாலத் தயாரிப்பில் உள்ள படம்.

இப்படத்தின் படப்பிடிப்பில் ரவளியின் சேலை விளக்கில் பட்டதால் தீ பற்றியது. உடனடியாக சேலையை உருவி எறிந்தார் ரவளி. அதனால் காயம் எதுவும் இன்றித் தப்பினார்.

அதே படத்தில் இன்னொரு காட்சியில் வினீத்தும், ரவளியும் முத்தம் கொடுக்க வேண்டும்.

இயக்குநர் 'கட்' சொன்ன பின்னரும் அவர்களது உதடுகளைப் பிரிக்க முடியவில்லை. இதுதான் மிகப் பயங்கரமான விபத்து.

## விஜயகாந்த்–ஷில்பா

'தொப்புள் அழகி' என்ற பெயர் எடுத்தவர் ஷில்பா ஷெட்டி. 'மிஸ்டர் ரோமியோ' படத்தில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடித்தார். படம் தோல்வி கண்டதால், தமிழில் தொடர்ந்து நடிக்க்வில்லை.

இந்தியிலும் ஷில்பாவுக்கு இப்போது அதிக வாய்ப்பில்லை. அவரை தமிழுக்கு கொண்டு வருகிறார் விக்ரமன்.

'வானத்தைப் போல' படத்தில் விஜயகாந்த் ஜோடி ஷில்பா ஷெட்டி. 'தர்மசக்கரம்' படத்தில் விஜயகாந்த் ஜோடியாக ஏற்கனவே இந்தி நடிகை தீப்தி பட்நாகர் நடித்திருந்தார். இப்போது விஜயகாந்த்துக்கு இன்னொரு இந்தி நடிகை ஜோடி.

# தினம் ஒரு தேர்தல் வேண்டும்!

தினமொரு தேர்தல் வந்தால்
தெருவெலாம் கொடிபறக்கும்
இனங்களுக்கிடையே உள்ள
இடைவெளி சுருங்கிப்போகும்;
மனதிலே சுமையைத் தாங்கி
வாடிடும் மக்கள் இன்பக்
கனவிலே மிதந்து துன்பக்
கவலையை மறக்கும் காலம்.
✓✗
கப்பல் போல் காரில் செல்லும்
கனவான்கள் நடையாய் வந்து
“எப்படி நண்பா?” என்று
ஏழையைக் கேட்கும் காலம்;
‘மப்பிலே’ வந்தால்கூட
வந்ததை மறந்திடாமல்
செப்படி வித்தை காட்டி
தேர்தலில் ஜெயிக்கும் காலம்.
✓✗
பருப்பு, பாண், பால்மாவென்று
பல்பொருள் விலைகளெல்லாம்
இருப்பினை விட்டிறங்கி
ஏழையும் வாங்கும் காலம்;
தெருக்களில் சந்தி தோறும்
தேர்தல் வேட்பாளர் நின்று
இருகரம் கூப்பி ஏழை
என்னையும் கெஞ்சும் காலம்.
✓✗
சத்தியம், தர்மம், நீதி
தவறாத அபேட்சகர்கள்;
எத்தனை துயர் வந்தாலும்
ஏழைக்காய் வாழ்ந்த எம்.பி;
பத்தினி விரதம் காக்கும்
பரம்பரை அபேட்சகர்கள்
அத்தனை பேரும் வந்து
அமர்க்களம் செய்யும் காலம்.
✓✗
இனவெறி சுருங்கிப் போகும்
ஏழையும் சிரித்து வாழ்வான்;
அனைவரும் சமமேயென்று
அரசியலாளர் சொல்வார்!
மனை தோறும் களிபுக் கொஞ்சும்
மற்றவை மறந்து போகும்!
தினமொரு தேர்தல் வேண்டும்!
தேர்தலே வருக! வாழ்க!

வீ.எம். சுந்தரம்- களுவாஞ்சிக்குடி.

# தேன் கிண்ணம்

## தோல்வியிலும் வெற்றி...!

ஒரு
காதல்
முடிவு பெறுகிறதென்றால்
அங்கே
ஒரு மரணத்தின் பின்
நிலவும்
துக்கம் நிலவும்...!
**
புதை குழியில்
பூக்கின்ற
பூச்செடியை போல்
ஒரு
மண மேடை தோன்றி
அந்த காதலுக்கு
கல்லறை அமைத்துவிடும்!
**
தோற்றுப் போன
இதயம் மட்டும்
காதலுக்காக
கண்ணீர் அஞ்சலி
செலுத்திக்
கொண்டிருக்கும்...!

இராம. யுவராஜ்- கண்டி.

## திருமுகம் காண ஒரு முகம்...,

உன் திருமுகம்
காணாவிட்டால்
நான் நடைப்பிணம்
என்பது உனக்குத்
தெரியும் தானே?
இருந்தும் ஏனிந்த
இழுத்தடிப்பு?
...
கண்ணீரால்
பலமுறை கழுவியும்
என் காதல் கறை
இன்னும்
அழியவில்லை!
கறை ‘கறள்’
என்பதால்
அழியுமெனவும்
நான் நினைக்கவில்லை!
...
‘ஈ மெயில்’ வந்தும்
ஏனிந்தத் தாமதம்...
நெஞ்சில் ஈரமில்லாததாலா?
அர்த்தமற்ற
காத்திருப்பாயினும்
கருணையில்லையா?
...
இந்த நீர்த்துளி
உலர்ந்துவிடமுன் வா...
உனக்கும்
ஈரமிருந்தால்....!

மாரிமுத்து யோகராஜன்- மட்டக்களப்பு



# ஆக்கிரமிப்பும் அச்சுறுத்தலும்

↑ இது வியட்நாம் மக்களது வீரம்செறிந்த போராட்டத்தில் ஒரு கட்டம். ஆக்கிரமிக்கச் சென்ற அமெரிக்கப் படைகள் ஆற்றைக் கடக்கும் அப்பாவி மக்களை துப்பாக்கி முனையில் அச்சுறுத்துகின்றன. அமெரிக்கர்கள் தாம் அந்நியர்கள் என்பதால் வியட்நாமியர்கள் அனைவரையும் சந்தேகக்கண் கொண்டே நோக்கினர். எதிரிகளாகவே கருதினர்.

என்னதான் கொடுமைகள் சூழ்ந்தபோதும் வியட்நாம் மக்கள் உறுதி குலையவில்லை. அதனால் இறுதி வெற்றி அவர்களுக்கே கிடைத்தது.

# இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் ‘கீரனா’

28.03.99 முதல் 03.04.99வரை

**மேடம்:**
ஜென்ம வீட்டில் சனி நீசம்; சுக்கிரன் பலமாக உள்ள நிலை; எடுத்த கருமம் தாமதமாகும். நல்ல கருமங்கள் நடைபெறும். கல்வி, தொழில் முன்னேற்றமும் பண வருவாயுமுண்டு.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 29, 2.

**இடபம்:**
குருவின் 11ம் இடமும் சனியின் நட்பும் மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெற முடியும். குடும்பத்தில் உறவினர்கள் உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவி உறவு மகிழ்ச்சி தரும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள்; புதன்.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு, எண : 3
அதிஷ்ட திகதிகள் : 1, 3.

**மிதுனம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சி; 10ம் இடத்து குருவின் நிலையால் சிற்சில நோய்துன்பங்கள், அலைச்சல், கரைச்சல்கள் ஏற்படலாம். வியாபாரம், தொழில் நல்ல நிலையில் தொடரும். எடுத்த கருமங்கள் கால தாமதமடையும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண் : 1.
அதிஷ்ட திகதிகள் : 30, 01.

**கடகம்:**
கிரக நிலைகள் சிறப்புற்றிருப்பதால் எடுத்த கருமங்களில் வெற்றி. செய்தொழில்கள் நன்மையைத் தரும். உறவினர்களின் நற்சேர்க்கை யும் சுபகருமங்களும் புதிய முயற்சியும் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : றோஸ் நிறம், எண்: 6
அதிஷ்ட திகதிகள் : 30, 01.

**சிம்மம்:**
எடுத்த கருமங்கள் நன்மையைக் கொடுக்கும். மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெறும், புதிய திருமண உறவுகள், தொழில் சிறப்பு, உறவினர் நண்பர்கள் மூலம் நன்மைகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை: எண் : 5
அதிஷ்ட திகதிகள் : 1, 2.

**கன்னி:**
சனி 8ம் இடத்தில் உள்ளதும் கிரகபலம் குறைவான நிலையில் காணப்படுவதும் எடுத்த கருமங்கள் தடைப்படுதல், உறவினர்களது வழியில் பிரச்சனைகள் ஏற்படுதல். நிதானமாக நடந்து கொள்ளவும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : மண்ணிறம், எண் : 9
அதிஷ்ட திகதிகள் : 29, 3.

**துலாம்:**
மனதிற்கு இனிய செய்திகள், சம்பவங்கள் நடைபெறும். குடும்பத்தில் நற்சம்பவங்கள் நடைபெறக்கூடும். உடல் நிலை தளர்வாகக் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மருணர்வர்ணம்: எண் : 1
அதிஷ்ட திகதிகள் : 31, 2.

**விருட்சிகம்:**
எடுத்த கருமங்கள் தடை தாமதங்களும் தொழில் பிரச்சனைகளும் வழக்கு விடயங்கள் என்றும் பண விரயமாகக் கூடிய நிலையில் காணப்படும்; கவனம் எடுத்து செயற்படவும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: இள நீலம். எண் : 7
அதிஷ்ட திகதிகள் : 28, 3.

**தனுசு:**
தொழில் விருத்தியும் புதிய தொழில், கல்வி வாய்ப்புக்கள் தேடி வரும். மனதிற்கு மகிழ்ச்சி தரும் வாரம், காதல் உறவு கைகூடும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், புதன்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை, எண் : 4
அதிஷ்ட திகதிகள் : 31, 28.

**மகரம்:**
எடுத்த கருமங்களில் தடை- தாமதம். கவனமாக நடந்து கொள்ளவும். உடலில் நோய்துன்பங்கள் ஏற்படும். வெளிநாட்டுப் பிரயாணம் தாமதித்தாலும் நன்மைகளைக் கொடுக்கும். வார நடுப்பகுதியில் ஒரு சில நன்மைகளை ஏற்படுத்தும்.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா: எண் : 2
அதிஷ்ட திகதிகள் : 2, 29.

**கும்பம்:**
சனி, குரு முறையே 3ம் 2ம் வீடுகளில் காணப்படுவதால் நல்ல முன்னேற்றம்; காரிய சித்திகள் காணபபடும். நல்ல செய்திகள் கிடைக்கும். பிள்ளைகள், கணவன் வழியில் பிரச்சனைகள் ஏற்பட்டுவிலகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம்: கறுப்பு; எண் : 6
அதிஷ்ட திகதிகள்: 30, 3.

**மீனம்:**
சனி தன் வீட்டிலும் குரு ஜன்ம வீட்டிலும் காணப்படுவதால் செய்தொழிலில் பிரச்சனைகள், திடீர் பிரயாணம், நண்பர்களின் உதவி, உறவினர்களின் வருகையும் புதிய திட்டங்கள் செயல் படுத்தலும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை: எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 3, 28.

# யார் இவர்?



→ தன் தங்கையை அரவணைத்தபடி காட்சி தரும் இந்தச் சிறுமியை தெரிகிறதா? இன்று தமிழ்த்திரையுலகில் கலக்கல் நடத்தும் நான்கெழுத்து நடிகையின் அந்தக்காலத் தோற்றம் இது. கண்டுபிடிக்க முடியாதவர்கள் 18ம் பக்கம் நகரவும்.



பெயர்: வி. சுதா,
வயது: 21
முகவரி: 481, அக்கராயன், கிளிநொச்சி.
பொழுது போக்கு: வானொலி, பேனாநட்பு.



பெயர்: கே. சதீஸ்,
வயது: 18
முகவரி: 7ம் குறுக்கு, கல்லடி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: கே. சுகந்தி,
வயது: 18
முகவரி: 444, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு: முத்திரை சேகரித்தல், ரீ.வி.

# நில்-கவனி-முன்னேறு

பிரமாதமாக அமைந்துவிட்டது என்று ஒரு காரியத்தில் திருப்தி ஏற்பட்டுவிடாதா? அதை மேலும் சிறப்பாக்க என்ன செய்யலாம் என்று முயற்சி செய்யுங்கள்.

♦♦♦

பொறுமை மிக மிக முக்கியம். எல்லாரிடமும் பொறுமையுடன் பழகுவது அவசியம். ஆனால் முதல் பொறுமையை உங்களிடம் தான் காட்டிக்கொள்ள வேண்டும்.


♦♦♦

பேரிச்சம்பழம் இனிப்பானது. அதை அடைவதென்றால் முள் குத்தத்தான் செய்யும். கஷ்டமும் சிரமமும் படாமல் வெற்றிக் கனியை அடைந்துவிட முடியாது. செடி வளரத் தண்ணீர். வெற்றி வளர வியர்வை.

♦♦♦

தடைகள் என்பவை தோல்வி மனப்பான்மையைத் தருவதற்கு ஏற்பட்டவை அல்ல. நம்மால் தாண்டுவதற்கு என அமைக்கப்பட்டவை. ஒரு தடையைத் தாண்டியதும் வேகமெடுத்து அடுத்த தடையை அடைந்து அதைத் தாண்டுபவனே வெற்றி அடைய முடியும். தாண்ட அமைந்தவற்றைத் தூண்ட அமைந்தவைகளாகக் கொள்வதே புத்திசாலித்தனம்.

♦♦♦



உச்சிக்கு ஏறுவது பெரிய விஷயம். அதைவிடப் பெரிய விஷயம், அங்கிருந்து வழுக்கிக் கீழே விழாமல் இருப்பது. உச்சி என்பது சறுக்கக்கூடிய தன்மை கொண்டதாதலால், அதிக ஜாக்கிரதை அவசியம்.

உங்கள் சக்திக்கு மீறி உழைக்கிற வேலையில் வந்து மாட்டிக் கொண்டு விட்டோமே என்று நினைக்க வேண்டாம். முரட்டுக்கல் தான் கத்தியைக் கூராக்க முடியும். வெல்வெட் துணியில் தேய்த்தால் கத்தி கூர்மை அடையாது.

♦♦♦

அதிருஷ்டம் வந்து வீட்டுக் கதவைத் தட்டினாலும், வீட்டுக்குள் உட்கார்ந்திருக்கிறவன் எழுந்திருக்க வேண்டும். கதவுவரை நடக்க வேண்டும். தாழ்ப்பாளில் கை வைக்க வேண்டும். அதைத் தள்ளிக் கதவைத் திறக்க வேண்டும். சோம்பேறிகளின் முன்னால் வைரங்களைக் கொட்டினாலும் கடைக்கு எடுத்துப் போய் விற்க வேண்டுமே என்று அழுவான், அல்லது அருகிலுள்ள சாக்கடையில் கொட்டி விடுவான்.

# ஹலோ டாக்டர்

கே: பிறந்த குழந்தைக்கு கோளாறு இருக்கிறதா என்பதை அறிய பிறந்தவுடன் குழந்தைக்கு இரத்தப் பரிசோதனை செய்வது நல்லதா டாக்டர்?
ப: குழந்தை பிறந்த 10,12 நாளில் இரத்தப் பரிசோதனை செய்யப்படும். உள்ளங்காலில் இருந்து இரத்தம் எடுத்து பரிசோதனை செய்யப்படும். இதன் மூலம் சில வகைக் கோளாறுகளை கண்டறிந்து விடலாம்.

**

கே: கருத்தரித்த பின் மருந்து சாப்பிடுவதை தவிர்க்க வேண்டுமா?
ப: ஆமாம். கருவில் படிப்படியாக குழந்தை எந்தக் கோளாறும் இல்லாமல் பிறப்பது முக்கியம். அதனால் டாக்டரின் ஆலோசனைப் படி செயல்படுவது நல்லது.

**

கே: கர்ப்பிணியாக இருக்கும்போது எதையாவது கண்டு அதிர்ச்சி அடைந்தால் குழந்தை



கோளாறுடன் பிறக்கும் என்கிறார்களே உண்மையா?
ப: இதெல்லாம் கட்டுக் கதை. அதே சமயம் கர்ப்பிணிப் பெண்கள் எப்போதும் உஷாராக இருப்பது நல்லது. தேவையற்ற கற்பனைக்கு இடம் தரக்கூடாது.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## 3 முதல் 30 வரை



பெண்களின் சருமத்தின் நிலை, பருவத்துக்குத் தக்கபடி வித்தியாசப்படுகிறது. அதனால் வயதுக்குத் தக்கபடி சரும அழகைப் பராமரித்துப் பேண வேண்டும்.

**ரீன்-ஏஜ்**

ரீன்-ஏஜ் எனப்படும் பதின்மூன்று வயதில் இருந்து பத்தொன்பது வயதில் ஹோர்மோன்களின் செயற்பாடுகளினால் சருமத்தில் கூடுலான எண்ணெய்த்தன்மை படியும். முகப்பருக்களின் தொல்லையும் அதிகரிக்கும். இவைகளில் இருந்து விடுபட முகத்தையும் சருமத்தையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

முகத்தைப் பல தடவைகள் கழுவலாம். அதற்கு வீரியம் குறைந்த சவர்க்காரத்தைப் பயன்படுத்தலாம். சவர்க்காரத்தை விரும்பாதவர்கள் கடலை மாவு, பயத்தம் மாவு ஆகியவைகளைப் பயன்படுத்துவது நல்லது.

தினமும் 15 நிமிடங்களாவது முகப்பராமரிப்புக்கு ஒதுக்குங்கள். அதே நேரம் சூரிய ஒளி முகத்தில் அதிகம் படாமலும் பார்த்துக் கொள்ளுங்கள். தூங்கச் செல்வதற்கு முன்னால் முகத்தில் இருக்கும் மேக்-அப்பை முழுமையாக நீக்கிவிட வேண்டும்.

சருமம் வறண்டிருப்பது தெரிந்தால் முகத்தைக் கழுவித் துடைத்த பின்பு ஏதாவது ஒரு 'பேபி ஒயிலை'ப் பயன்படுத்தலாம்.

**20வயது-30வயது**

இந்த வயதில் சருமத்தின் வறட்சியை முன்னெச்சரிக்கையோடு தடுத்துவிட வேண்டும். அதற்காக 'மோயிஸ்சரைசர்' உபயோகிக்கவும்.

உறக்கமில்லாமல் விழித்திருந்து படிப்பது, வேலை பார்ப்பது போன்ற கட்டாயம் உள்ளவர்கள் கண்களுக்குக் கீழ்ப் பகுதியில் 'தண்டர்-ஐ' கிறீம் அல்லது 'ஜெல்' உபயோகிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் கண்களுக்குக் கீழ் கறுப்பு ஏற்படுவதைத் தடுக்கலாம்.

மாதம் ஒரு முறை ஃபேஷியல் செய்யலாம். வெயில் முகத்தில் படுவதைத் தடுக்க 'சன்ஸ் கிறீன்' முறைப்பாதுகாப்பு வழங்குவது நல்லது. இவ்வாறு செய்தால் முக அழகிற்குக் கெடுதல் செய்யும் பிரச்சனைகளை அண்டவிடாமல் தடுத்து விடலாம்.

**30ற்குப் பிறகு**

இந்த வயதில் அதிக எண்ணெய்த் தன்மையுள்ள 'மோயிஸ்சரைசர்' தேவை. ஏனென்றால் இப்பருவத்தில் சருமம் அதிகமாக வறண்டு போகும். 'கிளிசரின்' சேர்த்த சவர்க்காரங்களைப் பயன்படுத்தி முகத்தைச் சுத்தப்படுத்த வேண்டும்.

வாரத்தில் இரண்டு அல்லது முன்று தடவைகள் இரவில் ஏதாவது முகத்திற்குத் தடவும் கிறீம் ஒன்றைப் உபயோகிக்கவும்.

## பெற்றோரும் பொறுமையும்

ஒவ்வொரு கணவனும் மனைவியும் பெற்றோர்களாகும்போது, அவர்களுக்கு மிகவும் தேவையான குணம், பொறுமை. பொறுமையுடன் இருந்தால் குழந்தையின் அழுகையைக் கூட ஓர் இனிய சிரிப்பாக மாற்றி விடலாம்.



குழந்தைகள் சரியாகச் சாப்பிடுவதில்லை என்று, கடையில் கண்ட டொனிக்குகளையும் மருத்துவரிடம் கேட்காமல் வாங்கிக் கொடுப்பது நல்லதல்ல. நல்ல சாப்பாட்டிலேயே டொனிக்குகளில் கிடைக்கக்கூடிய விட்டமின்களும் தாதுப்பொருட்களும் குழந்தைகளுக்குக் கிடைத்துவிடும்.

உடல் வளர்ச்சியுடன் அறிவும் வளர்ந்து குழந்தை சுறுசுறுப்புடன் இருக்கும் வரை, குழந்தை சாப்பிடாதது ஒரு பிரச்சனையே அல்ல. பலவந்தமாகக் குழந்தையைச் சாப்பிட வைக்க முயலக் கூடாது. பின்னர் சாப்பாட்டின் மீதே வெறுப்பு ஏற்பட்டு விடலாம்.

மிகத் தேவையானால் வேறுவித சுவைகளை உணவில் அறிமுகப்படுத்தி, குழந்தைக்குப் பிடித்த வகையில் கொடுக்கலாம்.

ஆறு வயது வரை குழந்தைகள் பிற்பகலில் தூங்கினால் நல்லது. ஆனால் 'தூங்க மாட்டேன்' என்று அடம் பிடிக்கும் குழந்தைகளைப் பலவந்தப்படுத்த வேண்டாம். ஓடி ஆடிக் களைத்த பின் அவை தானே தூங்கிவிடும்.

## ஆறுமாதம் போதும்

பருவமங்கையரே! உடல் எடை அதிகமாக இருக்கும் காரணத்தினால் உங்கள் திருமணம் தடைப்படுகிறதா? கவலை வேண்டாம். இன்று முதல் பட்டினி இருக்காமல் வயிறு நிறைய நீங்கள் விரும்பும் போதெல்லாம் உயிருள்ள இயற்கை உணவுகளைச் சாப்பிடுங்கள்.

சமைத்த உணவுகளை நிறுத்தினால் போதும். மாதாமாதம் ஏழு கிலோ வரை உடல் எடை குறைந்து கொண்டே வந்து தேவையான அளவில் வந்து நிற்கும்.

ஆறே மாதத்தில் ஆறு வயதைக் குறைத்து விடலாம். பிறகு எப்போதும் உங்களுக்குப் 16 வயதுதான். மார்க்கண்டேயன் மாதிரி.

40 வயதுப் பெண்கள்கூட 25 வயதுப் பெண்ணாக மாறி, சுறுசுறுப்பாக வேலை செய்யும் திறமை பெற்று நோயின்றி வாழ இதை விடச் சிறந்த வழி இவ்வுலகில் இல்லை.

பெண்கள் அழகாக இருக்க வேண்டும் என்பதற்காக சரியாகச் சாப்பிடாமல் இயற்கை மருத்துவத்தைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லி பல பெண்கள் இரத்த அழுத்தம் குறைந்த அனிமீயா நோயாளிகளாக மாறியுள்ளார்கள்.

ஆகவே பட்டினி இல்லாமல் பழங்கள் சாப்பிடுவதால் உடல் எடை கூடாது என்பதை மறக்க வேண்டாம்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** FL

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 03-04-1999**

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

80

புவனா

அல்ஃபாயிட் குடும்பத்துடன் டயானா நெருங்கிப் பழக ஆரம்பித்ததும் பிரிட்டிஷ் உளவுத்துறை கண்களை கசக்கிக் கொண்டு ஊன்றிக் கவனித்தது.

இலண்டனில் ஹரோட்ஸ் ஹொட்டலை வாங்குவதற்கு அல்ஃபாயிட்டுக்கு எப்படி வசதி வந்தது? என்று உளவுத்துறைக்கு நீண்ட காலமாக சந்தேகம் இருந்தது.

உளவுத்துறையின் சந்தேகத்தை மேலும் அதிகப்படுத்துவதுபோல அல்ஃபாயிட் பல மாளிகைகளை தன் பணபலத்தால் சுருட்டிக் கொண்டார்.

'பஞ்ச்' ('PUNCH') என்னும் சஞ்சிகையையும் அல்ஃபாயிட் ஆரம்பித்தார்.

இலண்டனில் முஸ்லிம்களது ஆதிக்கத்தை நிலைநாட்ட அல்ஃபாயிட் மூலமாக புரூனே சுல்தான் முயற்சி செய்கிறார் என்று உளவுத்துறை சந்தேகப்பட்டது.

இச் சந்தேகம் வெளியே கசிந்து பத்திரிகைகளிலும் வெளியானது.

உடனடியாக அதற்கு மறுப்புத் தெரிவித்தார் புரூனே சுல்தான். அல்ஃபாயிட்டும் அதனை மறுத்திருந்தார்.

அப்படியிருந்தும் அவர்களது சந்தேகம் போகவில்லை. அதனால்தான் அல்ஃபாயிட்டுக்கும் அவரது சகோதரர்களுக்கும் பிரிட்டன் குடியுரிமை மறுக்கப்பட்டது. கடவுச் சீட்டுக்கூட வழங்க மறுத்தனர்.

அல்ஃபாயிட்டுக்கு மட்டுமல்ல, அவரது மகனான டோடி ஃபயட்டுக்கும் குடியுரிமை வழங்கப்படவில்லை.

## உளவுத் துறை சந்தேகம்



அல்ஃபாயிட்டின் இரண்டாவது மனைவி மூலம் பிறந்த நான்கு பிள்ளைகளுக்கு மட்டும் பிரிட்டிஷ் குடியுரிமையும், கடவுச் சீட்டும் வழங்கப்பட்டது.

பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போன்ற பலருக்கு அல்ஃபாயிட் பண உதவி செய்திருக்கிறார்.

அல்ஃபாயிட்டின் சொகுசான ஹோட்டல்களில் அவர்கள் தங்கிச் செல்லவும் மதுவில் மிதந்து கேளிக்கைகளில் புரளவும் அல்ஃபாயிட் கட்டணம் எதுவும் அறவிடுவதில்லை.

அப்படியிருந்தும் அவர்களால் குடியுரிமை விடயத்தில் ஃபாயிட்டுக்கு உதவ முடியவில்லை.

ஹரோட்ஸ் ஹொட்டலை வாங்குவதற்கு அல்ஃபாயிட்டுடன் போட்டி போட்ட நிறுவனங்களும் பல கதைகளை கட்டிவிட்டன.

பிரிட்டனின் வர்த்தக மற்றும் கைத்தொழில் இலாகா ஃபாயிட் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டது.

1990இல் தனது ஆய்வுகளை அறிக்கையாக வெளியிட்டிருந்தது.

### பொய்யான தகவல்

அந்த அறிக்கையில் அல்ஃபாயிட் குடும்பம் பற்றி காட்டமான தகவல்கள் வெளியாகின.

நூறு வருடங்களுக்கு மேலாக எகிப்தில் ஏராளமான காணிகளை வைத்திருக்கும் நிலச் சுவாந்தர் குடும்பத்தினர் தாம் என்றும், கப்பல் கட்டும் தொழிலில் தம் மூதாதையர் முதலீடு செய்ததாகவும் ஃபாயிட்டின் சகோதரர்கள் கூறி வந்தனர்.

ஆனால் அத் தகவல்கள் பொய்யானவை என்று விசாரணையாளர்கள் கூறினர். தமது மூதாதையரின் செல்வத்தில் இருந்து ஹரோட்ஸ்ஹொட்டலை ஃபாயிட் வாங்கினார் என்பது கடைந்தெடுத்த பொய் என்றும் அந்த அறிக்கை கூறியது.

இந்த அறிக்கை அல்ஃபாயிட் குடும்பத்தினரை தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது.

ஆனால் அல்ஃபாயிட் சிறிதும் தளராது பதில் கொடுத்திருந்தார்.

"ஒரு எகிப்து நாட்டவன் இத்தனை செல்வந்தனாக விளங்குவதையும், பிரசித்தி பெற்ற ஹரோட்சின் உரிமையாளராக இருப்பதையும் இவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனாலேயே என்மீது சேற்றை வாரியிறைக்கிறார்கள்." என்று ஃபாயிட் கூறினார்.

இதனை அடுத்து ஃபாயிட்டின் வரலாற்றை துருவி ஆராய்வதில் இலண்டன் பத்திரிகைகள் ஈடு பட்டன.



ஸ்கொட்லாந்தில் உள்ள சொந்த மாளிகை முன் ஃபாயிட்

அல்ஃபாயிட்டின் தந்தையார் சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். சாதாரண ஆசிரியராக இருந்தவர்.

அல்ஃபாயிட் சிங்கர் தையல் இயந்திர விற்பனையாளராகத்தான் தன் தொழிலை ஆரம்பித்தார். பின்னர் 'கொக்கா கோலோ' பான வியாபாரமும் செய்தார்.

1950களில் அல்ஃபாயிட்டின் வாழ்க்கையில் மகத்தான திருப்பம் ஒன்று நிகழ்ந்தது.

எகிப்தில் இருந்து வீட்டுத் தளபாடங்களை ஏற்றுமதி செய்துவந்த கசோகியின் அறிமுகம் கிடைத்தது. இருவரும் நண்பர்களானார்கள்.

தனது வியாபாரத்தில் ஃபாயிட்டை பங்காளியாக சேர்த்துக் கொண்ட கசோகி, தன் குடும்பத்திலும் அவரை பங்காளியாக்கினார்.

1953இல் தனது சகோதரி சமீராவை ஃபாயிட்டுக்கு மணம் முடித்து வைத்தார். சமீராவுக்கும் ஃபாயிட்டுக்கும் 1955இல் டோடி பிறந்தார்.

வீட்டுத் தளபாடங்களை ஏற்றுமதி செய்த கசோகி, பின்னர் ஆயுத தளபாடங்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கினார்.

ஆயுத தளபாடங்களை ஏற்றுமதி செய்ய, பணம் இறக்கு மதியானது. உலகில் மிகப்பெரும் பணக்காரராக மாறினார் கசோகி.

சமீராவுக்கும் ஃபாயிட்டுக்கும் அவர்களது மண உறவு கசந்து விவாகரத்தில் முடிந்தது.

அத்தோடு கசோகியுடனும் ஃபாயிட்டின் உறவு முறிந்ததாக கூறுகிறார்கள்.

தன் தங்கையை இன்பமாக வாழவைக்க முடியாத ஃபாயிட்டை கசோகி வெறுத்தார். அதனால் ஃபாயிட்டுக்கு சேரவேண்டிய பெரும் தொகையான பணத்தை கொடுத்து விட்டு, உறவை சுத்தமாக முறித்துக் கொண்டார் என்றும் கூறுகிறார்கள்.

அந்தப் பணம்தான் அல்ஃபாயிட் மற்றொரு பெரும் பணக்காரராக மாறுவதற்கு காரணம் என்றும் தெரியவந்தது.

### மகாராணியுடன்

சந்தேகங்கள் ஒருபுறம் இருந்தாலும் பெரும் செல்வந்தர் என்பதால் அல்ஃபாயிட்டுக்கு சிறப்பான மரியாதையே எங்கும் கிடைத்தது.

ரோயல் வின்சர் குதிரைப் பந்தயம் பிரிட்டனில் அரச குடும்பம் கண்டுகளிக்கும் மிகப் பெரும் நிகழ்ச்சி. அந்த பந்தயத்தைக் காண வரும் அரச குடும்பத்தினருக்கு தனிப்பிரிவு ஒதுக்கப்படும்.

அதே பிரிவிலேயே அல்ஃபாயிட் குடும்பத்தினருக்கும் இடம் ஒதுக்கப்படுவது வழக்கம். அரச குடும்பம் தவிர மிக மிக முக்கியமான ஒரு சில குடும்பங்களே அப் பகுதியில் அமர முடியும்.

### சந்தேகம்

அல்ஃபாயிட் டயானாவை தனது மூன்றாவது மனைவியாக்கி கொள்ளப் போகிறாரோ என்று தான் பிரிட்டிஷ் உளவுத்துறை சந்தேகித்தது.

அந்த சந்தேகம் பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டது.



எலிசபெத் மகாராணியுடன் ஃபாயிட்

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின் வயதான வர்த்தகர் ஒருவரையே மறுமணம் செய்திருந்தார்.

டயானாவும் ஜாக்குலினை பின்பற்றப் போகிறார் என்றுதான் உளவுத்துறை திடமாக நம்பியது.

உளவுத்துறை அவ்வாறு தலை கீழாக நினைத்துக் கொண்டிருக்க, இலண்டனில் அல்ஃபாயிட்டின் மாளிகையில் டயானாவும், டோடியும் தனியாக இருந்து மனம்விட்டுப்பேசிக் கொண்டிருந்தார்கள்.

டோடிக்கு டயானாவிடம் தன் மனதில் உள்ள அனைத்தையும் கொட்டி விட வேண்டும் போலிருந்தது.

தான் இதுவரை தேடிய பெண் தனக்கு கிடைத்துவிட்டாள், இதோ தன் முன்னால் அமர்ந்திருக்கிறாள் என்ற நினைப்பே டோடிக்கு பரவசமாக இருந்தது.

அந்த பரவசத்தில் டயானாவின் கைகளை பிடித்துக் கொண்டார் டோடி. டயானாவுக்குள் ஒரு பூ மலர்ந்தது. அது உதட்டில் புன்னகையானது.

**(அடுத்த வாரமும் வரும்)**


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## கல்லாறு வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | அ. வாசுகி, 361, துறைநீலாவணை-07, கல்லாறு. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அம்மன் ஜுவல்ஸ்-முரசு இணைந்து வழங்கும்
## வைர மோதிரப் போட்டி

- முதலாவது அதிஷ்டசாலியின் அழகிய விரல்களுக்கு வைர மோதிரம் பரிசாக காத்திருக்கிறது.
- 25 அதிஷ்ரசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
- 16 வாரங்கள் மட்டும் பரிசுக் கூப்பன்களை சேகரித்தால் போதும்.
- பெண்கள் மட்டுமல்ல ஆண்களும் இதில் பங்கு கொள்ளலாம்.
- இங்கு வெளியாகும். பரிசுக் கூப்பன்களை தொடர்ந்து சேகரியுங்கள். நாம் அனுப்புமாறு அறிவித்த பின்னர் அனுப்பலாம்.


அம்மன்-முரசு ஆ வைர மோதிரப் போட்டி





படிப்பகம்





சாதிச் சண்டை போச்சோ?–உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய்!–கண்முன்
நிற்கொணாதுபோடா!

–சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# சிறுவன் சொன்ன மருந்து



கண்ணன் என்ற ஒரு சிறுவன் தனது நண்பனைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டான். அவன் போகும் வழியில் நாய் ஒன்று படுத்திருந்தது. அதை அவன் தெரியாமல் மிதித்து விடவே அது அவனைக் கடித்துவிட்டது.

உடனே கண்ணன் மருந்துவரிடம் ஓடினான். அவன் எதிரில் சிறுவன் ஒருவன் வந்தான். அவன் கண்ணனிடம்,

"ஏன் இப்படித் தலைதெறிக்க ஓடுகிறீர்? என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"நாய் ஒன்று கடித்து விட்டது. மருத்துவரிடம் போகிறேன்!" என்றான் கண்ணன்.

"மருத்துவரிடம் போய் காசை வீணாக்க வேண்டாம். நான் சொல்கிறபடி செய்யும். பாண் துண்டை எடுத்து, நாய் கடித்த இடத்தில் இருந்து வரும் இரத்தத்தைத் துடைத்து, அதை உமக்குக் கடித்த நாய்க்குப் போட்டால் சரியாகி விடும்!" என்று சொன்னான் அந்தச் சிறுவன்.

"சரி இப்போதே கடைக்குச் சென்று பாண் வாங்கி வருகிறேன்!" என்று சொல்லி விட்டுக் கடைக்குச் சென்றான் கண்ணன்.

கண்ணன் கடைக்குச் சென்று திரும்புவதற்குள் அந்தச் சிறுவன் அவ்விடத்தை விட்டுப் போய்விட்டான்.

கண்ணன் வீதியோரமாக உட்கார்ந்து, நாய் கடித்த இடத்தில் உள்ள இரத்தத்தைப் பாண் துண்டால் துடைத்தான். இதை அந்த வழியால் வந்த ஒருவர் கண்டார். நேராகக் கண்ணனிடம் வந்து,

"என்ன தம்பி செய்கிறீர்?" என்று கேட்டார்.

"நாய் கடித்த காயத்திலுள்ள இரத்தத்தைப் பாண் துண்டால் துடைத்து நாய்க்குப் போட்டால், என்னுடைய காயம் ஆறிவிடும் என்று இந்த வீதியால் வந்த சிறுவன் ஒருவன் சொன்னான். அதுதான் பாண் துண்டால் துடைக்கிறேன்!" என்றான்.

அதற்கு அவர்,

"தம்பி! வீதியால் வந்த சிறுவன் என்ன மருத்துவனா? இந்தப் பாண் துண்டை நாய்க்குப் போட்டால் அது உன்னைக் கடித்துக் குதறி விடும்!" என்றார்.


"நீங்கள் மருத்துவரா?" என்று கேட்டான் கண்ணன்.

"இல்லை. ஆனால் எனக்கு நாய்களைப் பற்றித் தெரியும். நாய் கடித்தால் என்ன செய்ய வேண்டும் என்று மருத்துவரைத்தான் கேட்க வேண்டும். அதுதான் நல்லது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மருந்தைச் சொல்ல அதனால் உமக்குத்தான் பாதிப்பு ஏற்படும்!" என்றார்.


"நான் உடனே மருத்துவரிடம் போகிறேன்!" என்று சொல்லிவிட்டு மருத்துவமனையை நோக்கிச் சென்றான் கண்ணன்.

**எதைச் சொல்வதற்கும் ஒரு தகுதி வேண்டும். அதே சமயம் யார் எதைச் சொன்னாலும் உடனே நம்பி விடாமல் யோசித்துப் பார்த்துச் செய்ய வேண்டும்.**


# அதிசயம் – ஆனால் உண்மை!



⬅ ஜெர்மனியில் உள்ள அஹரின் பாக் என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில் உள்ள சிலுவை இரண்டு பக்கமும் கிளைகள் கொண்ட மரத்தினால் ஆனது. இதன் மீதுதான் இயேசு நாதரின் சிலுவையில் அறையப்பட்டிருப்பது போன்ற உருவம் வைக்கப்பட்டுள்ளது. 290 ஆண்டுகளுக்கும் மேலாக இச்சிலுவை மரம் பச்சை இலைகளுடன் அப்படியே இருக்கிறது.



➡ இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள போர்யான் தீவிலுள்ள ஒரு பாக்கு மரம் பார்ப்பதற்கு மெழுகுவர்த்தி ஸ்டாண்ட் போன்று மூன்று கிளைகளுடன் காணப்படுகிறது.




⬆ சான் மரினோ குடியரசை நிறுவிய மாரினஸ், தனது கோவேறு கழுதையைக் கொன்ற கரடியைப் பிடித்து, அதை அக்கழுதைக்குப் பதிலாக ஏரில் பூட்டி வயலை உழச் செய்தார்.

## அப்படியே ஆகட்டும்

கிறிஸ்தவர்கள் தமது வழிபாட்டின் போது 'ஆமேன்' என்று சொல்லி முடிப்பார்கள். 'ஆமேன்' என்பது இஸ்ரேல் நாட்டவரின் மொழியான ஹீப்ருவிலிருந்து வந்த சொல் ஆகும். 'ஆமேன்' என்றால் 'அப்படியே ஆகட்டும்' என்று பொருள்.

# தொங்கும் பாலம்

அமெரிக்காவில் உள்ள சான்பிரான்ஸிஸ்கோ மாநிலத்தில், 'கோல்டன் கேட் பிரிட்ஜ்' என்று ஒரு பாலம் உள்ளது. இதில் என்ன சிறப்பு என்று தெரியுமா?




இது ஒரு தொங்கும் பாலம். ஆற்றின் இரு கரைகளிலும் இரும்புத் தூண்கள் அமைக்கப்பட்டு, உருக்குக் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளன. நடுவில் எந்தப் பிடிமானமும் இல்லாமல் பாலம் முழுவதையும் இந்த உருக்குக் கம்பிகள்தான் தாங்கிக் கொண்டுள்ளன.

ஆற்றின் தண்ணீர் மட்டத்திலிருந்து 227.45 மீட்டர் உயரத்தில் பாலம் அமைந்துள்ளது. இதன் கீழாக ஆற்றில் படகு மற்றும் சிறு கப்பல் போக்குவரத்தும் தடையில்லாமல் நடைபெற்று வருகின்றன.

பாலத்தின்மீது கனரக வாகனங்கள், பஸ், மோட்டார் சைக்கிள் என்று அனைத்து வகையான வாகனங்களும் செல்லலாம். மக்களும் நடந்து செல்ல பாலத்தின் ஓரமாக நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாலம் 1937ம் ஆண்டு கட்டப்பட்டது. இதன் நீளம் 1220 மீட்டர். இந்தப் பாலத்தின் மீது நடந்தவாறு, ஆற்றின் அழகைப் பல சுற்றுலாப் பயணிகள் இரசிக்கிறார்கள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.04.1999.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 290
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 288

பரிசுக்குரியவர்:
ஏ. சர்மிலா,
கமு/ மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ். பாத்திமா நிரோஷா, பு/ பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி, புத்தளம். | பி. பிரசாட், புளியாவத்தை த.ம.வி, டிக்கோயா. |
| த. பாபுஜி, தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | யோ. ஜயந்தா, உதயபுரம் தமிழ் வித்தியாலயம், பெரியகல்லாறு-3 |
| கி. ஷர்மினா, சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை-6. | வேலுமணி ஸ்டாலின், அமிரி தமிழ் வித்தியாலயம், இறம்பொடை. |
| நுஸ்லா ரஸூர், மதீனா தேசிய பாடசாலை, மடவளை பஸார். | எம்.எ•ப்.எ•ப். சுமையா, பாதிபியா மு.வித்தியாலயம், மடுள்போவ, ஹெம்மாதகம. |
| சன்ரா விஜேக்குமார், மெதடிஸ்த கல்லூரி, கொழும்பு-3. | சரண்யன் தவராஜன், இராமகிருஷ்ண ஆண்கள் பாடசாலை, காரைதீவு. |

## வெள்ளிக்காசுகள்

இயேசு கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பும் பின்பும் கிரேக்கம், ரோம், எகிப்து, ஜெருசலேம் போன்ற இடங்களில் வெள்ளிக்காசுகள் புழக்கத்தில் இருந்தன.

ஃபினீஷியர்களுடைய 'டைர்' என்ற இராச்சியத்தில் இருந்து வந்த இந்த நாணயத்திற்கு 'வெள்ளி சேக்கல்' என்று பெயர். இந்நாணயத்தின் ஒரு புறம் ஃபினீஷியக் கடவுளான மெல்க் வார்ட்டினும் மறுபுறம் ஒரு கழுகின் உருவமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

இந்த வெள்ளிக்காசுகளில் 30ஐ வாங்கிக் கொண்டுதான், இயேசுவின் சீடர்களில் ஒருவரான யூதாஸ், இயேசுவைக் காட்டிக்கொடுத்தான்.

## கண்டு பிடித்தவர்

ஹோமியோபதி மருத்துவத்தைக் கண்டு பிடித்தவர் சாமுவேல் கிறிஸ்டியன் பிரடெரிக் ஹனிமன் என்ற ஜெர்மனியர். இவரது மருத்துவ முறைதான் இன்று எல்லா நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## ஆயுத விற்பனை

உலகில் அதிக அளவு போர் ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடு அமெரிக்கா. இது உலக நாடுகளுக்கு 56 சதவீதமான ஆயுதங்களை விற்பனை செய்து வருகிறது.

## பல்கலைக்கழகச் செய்திகள்

* கல்வியைப் போதிக்க மத்திய காலத்தில் ஐரோப்பா முழுவதும் மிகச் சிறந்த கல்வி நிலையங்கள் பரவலாகத் தொடங்கப்பட்டன. பல்கலைக் கழகங்களின் தொடக்கமும் அதுதான்.

* 1300ம் ஆண்டுக்குப் பின்னரே மக்கள் கல்வியின் அவசியத்தை வெகுவாக உணர ஆரம்பித்தனர். பல நூற்றாண்டுகளாக கல்வி கற்பிக்கும் பணி தேவாலயங்களில்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

* ஆரம்ப காலத்தில் பல்கலைக் கழகங்களில் சட்டம், சமயம், மருத்துவம் ஆகிய மூன்று பாடங்களே கற்பிக்கப்பட்டன.

* 9ம் நூற்றாண்டில் இத்தாலியின் சாரல்னோ பல்கலைக் கழகத்தில்தான் முதன் முதலாக மருத்துவப் படிப்புத் தொடங்கப்பட்டது.

* ஒக்ஸ்ஃபோட், கேம்ப்ரிட்ஜ், பாரிஸ், போலோக்னா, பிரேக் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்கள்தான் உலகில் தலைசிறந்தவை.

# அபூர்வ லெமூர்



ஆபிரிக்கக் கண்டத்தின் தென் கோடியில் இருந்து 250 கிலோமீட்டர் தூரத்தில் கடலில் உள்ளது மடகாஸ்கர் தீவு. இந்தத் தீவில் உலகில் மற்ற எந்தப் பகுதிகளிலும் காணப்படாத சில அபூர்வ வகைத் தாவரங்களும், சில விலங்கினங்களும் காணப்படுகின்றன.

இங்கு சுற்றுச் சூழல் மாசடையாது. இயற்கை வளம் செறிந்த வளமான பூமியாக இருக்கிறது. இங்குள்ள பழங்குடியின மக்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

சுற்றுலாப் பயணிகளும், தாவர, விலங்கியல் ஆராய்ச்சியாளர்களும் இத்தீவுக்கு அடிக்கடி செல்கின்றார்கள். இங்கு காணப்படும் முக்கிய விலங்குகளில் ஒன்று 'லெமூர்'.

உலகின் எப்பாகத்திலும் இந்த 'லெமூர்' எனப்படும் குரங்கு இனத்தைக் காணவே முடியாது. இந்த 'லெமூர்', ஆறாயிரம் கோடி வருடங்களுக்கு முன்னர்- அழிந்து போன டைனோசர் விலங்குகள் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இது இந்தத் தீவில் வசிப்பது ஓர் அதிசயம் அல்லவா?

# ஐனு



*** ஐனு என்பவர்கள் யார்?**

ஜப்பான் நாட்டின் பூர்வீகப் பழங்குடிகள்.

*** இவர்கள் ஜப்பானியர்களைப் போன்ற தோற்றமுடையவர்களா?**

ஜப்பானியர்கள் மஞ்சள் நிறமாகவும், இடுங்கிய கண்களும், தூக்கிய கன்னமும் உடையவர்களாக இருப்பார்கள். ஆனால் இந்த ஐனு இனத்தவர் வெள்ளை நிறமாகவும், உருண்ட கண்களும், நீண்ட தாடியுடனும் இருப்பார்கள்.

*** இவர்கள் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களா?**

ஒரு காலத்தில் அப்படித்தான் பலர் கருதினார்கள். ஆனால் தற்போதைய ஆராய்ச்சிகள் அக் கருத்துத் தவறு என்று கூறுகின்றன.

*** ஏன் இவர்கள் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களல்ல என்று சொல்லப்படுகிறது?**

ஐரோப்பியரிடத்தில் காணப்படும் மரபணுக்களில் சில இவர்களிடம் காணப்படாததால் இவர்கள் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்களாக இருக்க முடியாது என்று விஞ்ஞானிகள் சொல்கின்றனர்.

*** இவர்கள் எங்கே வசிக்கின்றனர்?**

ஜப்பானின் வடபகுதியில் உள்ள நான்கு முக்கிய தீவுகளில் ஒன்றான 'ஹொக்கைடோ' என்ற தீவில் வசிக்கின்றனர். தற்போது ஆக 20 ஆயிரம் பேர்வரை உள்ளனர். இவர்களில் பலர் ஜப்பானியர்களைத் திருமணம் செய்து அவர்களைப் போலவே வாழ்க்கை நடத்துகின்றனர்.


படிப்பகம்

**மர்மம், காதல் குடும்ப நயம் கலந்த விறு விறு தொடர்**

**முன்கதை சுருக்கம்**

பிரபல தொழிலதிபர்
ருத்ரமூர்த்தியின் ஒரே மகன் நித்தியன்.
பம்பாயில் சிறையிலிருந்து
விடுதலையாகி வருபவனை
வெளிநாட்டில் இருந்து வருபவனாகக் கூறி
விசாலிக்கு மணம்முடிக்க திட்டமிடுகிறார்.
நித்தியனோ சாந்தாவைக் காதலிக்கிறான்.
நித்தியன் சிறையில் இருந்து வந்தவன்
என்ற விடயம் விசாலி வீட்டுக்கு எப்படியோ
தெரிந்துவிட்டது.
அவ்வாறு இருந்தும் கல்யாணம் செய்ய
சம்மதம் என்கின்றனர்.
நித்தியனோ சாந்தாவை
கல்யாணம் செய்ய விரும்புகிறான்.
சாந்தாவை கல்யாணம் செய்தால்.
தான் தற்கொலை செய்வேன் என்று
தந்தை ருத்ரமூர்த்தி மிரட்டுகிறார்.
நித்தியன் பணிவதாக நடிக்கிறான்.
இந்நிலையில் சாந்தா காணாமல் போகிறாள்.

இனி.....

# டிசம்பர் பௌர்ணமி

## 22

**க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

இன்ஸ்பெக்டர் குமரன் யோசனையாய் நெற்றியை கீறியபடி ருத்ரமூர்த்தியை ஏறிட்டார்.

"விசாலியோட அப்பா விஜயராகவன் மேல உங்களுக்கு சந்தேகமா?"

"ஆமா...."

"அவருக்கு சாந்தா மேல என்ன கோபம்?"

"நித்தியன் சாந்தா காதல் விவகாரம் அவருக்கும் தெரியும். சாந்தா நித்தியனை விட்டு விலகிப் போகாத பட்சத்தில் நான் என்ன பண்ணணுமோ அதை பண்ணிக்கிறேன்னு என்கிட்ட சொல்லியிருந்தார். நான் கூட சாந்தா விசயத்தில் ஃபோர்ஸா போயிட வேண்டாம்னு அட்வைஸ் பண்ணியிருக்கேன்"

"இந்த விஷயத்தை நீங்க ஏன் முன்னாடியே சொல்லலே?"

"விஜயராகவன் அப்படியெல்லாம் பண்ணியிருக்க மாட்டார்னு நினைச்சேன். இப்ப நீங்க என் மேல சந்தேகப்படறதனால எந்தக் குற்றமும் செய்யாத நான் அவரை கைகாட்ட வேண்டியிருக்கு. பட் நான்தான் இதைச் சொன்னேன்னு தயவு பண்ணி சொல்லிடாதீங்க."

இன்ஸ்பெக்டர் குமரன் எழுந்து கொண்டார்.

"நித்தியன்"

"ஸார்"

"நான் விஜயராகவன் வீட்டுக்குப் போய் அவரை என்கொயர் பண்ணிப் பார்க் கிறேன்."

"நானும் உங்க கூட வரட்டுமா ஸார்?"

"வேண்டாம் நான் தனிப்பட்ட முறையில் போய் விசாரணை பண்ணினால்தான் உண்மை வெளியே வரும்.

ஏதாவது இம்பார்ட்டண்ட் மெஸேஜ் இருந்தா ஐ வில் டெலிஃபோன் யூ.... பி....... ரிலாக்ஸ் சாந்தா உயிரோடு இருந்தா எப்படியும் கண்டு பிடிச்சிடலாம். டோண்ட் வொரி........"

நித்தியன் கண்களில் நீர் கோர்த்தான். "ஸார் நாளைக் கழிச்சு மறுநாள் பௌர்ணமி தினம். அந்த பௌர்ணமி தினத்துல தான் நானும் சாந்தாவும் கோவிலுக்குப் போய் கல்யாணம் பண்ணிக்க முடிவு செஞ்சிருந்தோம். சாந்தா இப்போ காணாம போயிட்டா. காணாம போனது அவ மட்டுமா? இல்லை. என்னோட வாழ்க்கையும் சேர்த்துதான். சாந்தா கிடைக்கவில்லைன்னா எனக்கு வாழ்க்கையில்லை. இந்த பௌர்ணமிக்குள்ளே எனக்கு சாந்தா கிடைக்கணும். இல்லேன்னா நான் தற்கொலை பண்ணிக்குவேன். எஸ்..... சாந்தா கிடைக்கலைன்னா இந்த டிசம்பர் பௌர்ணமிதான் என்னோட கடைசி பௌர்ணமி."

"டோண்ட் டாக் லைக் தட்! நித்தியன்..... வாழ்க்கையோடு போராடினாத்தான் சில வெற்றிகளை சம்பாதிக்க முடியும். சாந்தாவை இந்த பௌர்ணமிக்குள்ளே கண்டு பிடிச்சு கொடுக்க வேண்டியது என்னோட பொறுப்பு......"

இன்ஸ்பெக்டர் குமரன் நித்தியன் தோளை மெல்ல தட்டிக் கொடுத்து விட்டு போர்ட்டிகோவில் நின்றிருந்த ஜீப்பை நோக்கிப் போனார்.

ஜீப்பில் இருபது நிமிஷ பயணம்.

விஜயராகவனின் வீடு வந்தது. அழைப்பு மணிக்கு வேலை கொடுக்க விசாலி வந்து கதவைத் திறந்தாள். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் திகைத்து பின் கேட்டாள்.

"என்ன இன்ஸ்பெக்டர். இந்த நேரத்துல?"

"தெரியும் இது வரக்கூடாத நேரம் தான். ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்.."

"என்ன விஷயம்....... சாந்தாவைப்பத்தி ஏதாவது தகவல் கிடைச்சதா ஸார்?"

"இல்லை அது விஷயமாத்தான் உங்க ஃபாதரை விசாரிக்க வந்தேன்."

விசாலி நெற்றியைச் சுருக்கினாள்.

"சாந்தா விஷயமா அப்பாவை பார்க்க வேண்டிய அவசியம் என்ன ஸார்?"

"அவசியம் வந்திருக்கு மிஸ் விசாலி. உங்க ஃபாதரை கொஞ்சம் கூப்பிட்டு விட றீங்களா?"

"அப்பா வீட்ல இல்லை."

"எங்கே போயிருக்கார்?"

"படப்பையில் இருக்கிற எங்க பண்ணை வீட்டுக்கு."

"எப்போ போனார்?"

"ஒரு மணி நேரத்துக்கு முந்தித்தான் கிளம்பிப் போனாரு."

"இந்த ராத்திரி நேரத்துல எதுக்காக பண்ணை வீட்டுக்குப்போயிருக்கார்?"

"இன்கம்டெக்ஸ் பிரச்சனை சம்பந்தமாய் கம்பெனி ஆடிட்டர்கிட்டே தனியா பேசணும்ங் கிறதுக்காக போயிருக்கார்."

"படப்பை பண்ணை வீட்ல டெலிஃபோன் இருக்கா?"

"இருக்கு."

"நெம்பர் போட்டு குடுங்க. நான் பேசணும்."

விசாலி ஹாலின் குறுக்கே மெல்ல நடைபோட்டு, டெலிஃபோனைத் தொட்டு, ரிஸீவரை எடுத்துக்கொண்டு டயலில் எண்களைத் தட்டினாள்.

ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது. விஜயராகவன் குரல் கொடுத்தார்.

"அப்பா ....நான் விசாலி பேசறேன். உங்களைப் பார்த்து பேசறதுக்காக இன்ஸ்பெக்டர் நம்ம வீட்டுக்கு வந்திருக்கார்.

காணாமே போன சாந்தா விஷயமா உங்ககிட்ட ஏதோ என்கொயர் பண்ணணுமாம். ரிஸீவரை அவர் கிட்ட தரட்டுமா?"

"கொ... கொடம்மா."

விசாலி குமரனிடம் ரிஸீவரை நீட்ட அவர் வாங்கி காதுக்குப் பொருத்தி, "ஸாரி ஃபார் த டிஸ்டர்பன்ஸ்....ஸார்." என்றார்.

"என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்?"

"காணாமே போயிருக்கிற சாந்தாவைப் பத்தி உங்ககிட்ட விசாரிக்கணும்."

"என்ன விசாரிக்கணும்?"

"சாந்தாவை நீங்கள் பார்த்திருக்கீங்களா?"

"இல்லை."

"நித்தியன்-சாந்தா காதல் விவகாரம் உங்களுக்கு எப்போ தெரியும்?"

"இன்னிக்குத்தான் தெரியும்."

"பொய் சொல்லாதீங்க விஜயராகவன்."

"பொய்யா?"

"எஸ்.... பொய்தான் .... நித்தியன்-சாந்தா காதல் விவகாரம் உங்களுக்கு முன்னாடியே தெரியும். இதைப்பத்தி நீங்களும் ருத்ரமூர்த்தியும் பேசியிருக்கீங்க........"

"அப்படீன்னு யார் சொன்னது?"

"ருத்ரமூர்த்தியே சொன்னார்."

மறுமுனையில் மௌனம் நிலவ...... குமரன் தொடர்ந்தார். "மிஸ்டர் விஜயராகவன்! நீங்கள் யார்கிட்ட வேணும்னாலும் பொய் சொல்லி தப்பிச்சுக்கலாம். ஆனா போலீஸ்கிட்ட பொய் சொல்லி தப்பிக்க முடியாது. சாந்தா நித்தியனை விட்டு விலகி போகாத பட்சத்தில் நான் என்ன பண்ணணுமோ அதைப்பண்ணிக்கிறேன்னு நீங்க ருத்ரமூர்த்திகிட்ட சொல்லியிருக்கீங்க. உண்டா இல்லையா?"

"இன்ஸ்பெக்டர்.... அதுவந்து........"

"லுக் மிஸ்டர் விஜயராகவன். சாந்தா விஷயத்துல நீங்க உண்மையைச் சொல்லிடறது பெட்டர். இல்லேன்னா உங்களை ஸ்டேஷனுக்கு கூட்டிப் போய்ட்டு மோசமான முறையில் விசாரணை நடத்தவேண்டியிருக்கும். நான் இப்போ புறப்பட்டு படப்பைக்கு வரட்டுமா.... இல்லை நீங்க இங்கே வர்றீங்களா?"

மறுமுனையில் மௌனம்.

"என்ன பதிலையே காணோம்."

"நானே வர்றேன் இன்ஸ்பெக்டர். பட் ஒரு விஷயம். சாந்தாவுக்கு என்னால எந்த ஆபத்தும் ஏற்பட்டு விடலை."

"ஃபோன்ல எதுவும் வேண்டாம். நேர்ல பேசிக்கலாம் வாங்க."

குமரன் ரிஸீவரை வைத்துவிட்டு பக்கத்தில் நின்ற விசாலியை ஏறிட்டார்.

"உங்க மதர் எங்கே ?"

"அவங்க தூங்கிட்டிருக்காங்க. ஸ்லீப்பிங் டேப்லட்டை சாப்பிட்டு படுத்துடறதனால யார் வந்து பேசிக்கிட்டிருந்தாலும் அம்மா எழுந்திருக்க மாட்டாங்க. பை த பை.... அப்பா என்ன சொன்னார்?"

"பாதி உண்மையை ஒத்துக்கிட்டார்."

"பாதி உண்மையா?...."

"ஆமா..... சாந்தா நித்தியன் காதல் விவகாரம் தனக்கு முன்னாடியே தெரியும்ங்கிற உண்மையை ஒத்துக்கிட்டார். இனி சாந்தவை என்ன பண்ணினார்ங்கிற உண்மையை இங்கே வந்து சொல்லுவார்னு நினைக்கிறேன்."

"நோ.... இன்ஸ்பெக்டர்.....என்னோட அப்பாவைப்பத்தி எனக்குத் தெரியும் ஹி ஈஸ் நாட் ஏ கிரிமினல். ஒரு பெண்ணைக் கொலை செய்யக்கூடிய அளவுக்கு அவர் தரம் தாழ்ந்து போகமாட்டார்."

குமரன் ஒரு போலீஸ் புன்னகை பூத்தார். "இந்தக் காலத்துல யாரையும் நம்ப முடியலை மிஸ் விசாலி.

நம்ம நாட்டு சட்டத்துறை மந்திரியே ஒரு கொலைக்குற்றம் தொடர்பாக கைது செய்யப்பட்டு இப்போ ஜாமீனில் வெளியே வந்திருக்கார்? இன்னிக்கு சொஸைட்டியில் இருக்கிற பணக்காரர்களில் பாதி பேர் ஏதாவது ஒரு வகையில் கிரிமினல்ஸ்தான். உங்களுக்கும் நித்தியனுக்கும் கல்யாணம் நடக்கணும்ங்கிறதுக்காக விஜயராகவன் சாந்தா விஷயத்துல ஏதாவது ஒரு வகையில் ஃபோர்ஸா இறங்கியிருக்கலாம்."

வேதனையோடு விசாலி புன்னகைத்தாள்.

"இன்ஸ்பெக்டர் இந்தக் கேஸ்ல நீங்க தப்பான திசையை நோக்கி போயிருக்கீங்கன்னு நினைக்கிறேன். கொஞ்சம் ப்ராக்டிக்கலா திங்க் பண்ணிப்பாருங்க ஸார் சாந்தா காணாம போனது முகுந்தன் வீட்டுலயிருந்துதான் அங்கே ஏதோ ஒருதப்பு நடந்திருக்கு அந்த தப்பு என்னான்னு நீங்க ஸ்மெல் பண்ணி........."

விசாலி சொல்லச் சொல்ல.....

டெலிஃபோன் எலக்ட்ரானிக் முனகலோடு கூப்பிட்டது. விசாலி போய் ரிஸீவரை எடுத்து செவிமடுத்துவிட்டு குமரனிடம் நீட்டினாள்.

"கால் உங்களுக்குத்தான் ஸார். ஸ்டேஷனிலிருந்து சப் இன்ஸ்பெக்டர் கூப்பிடறார்."

குமரன் ரிஸீவரை வாங்கி "சொல்லுங்க ஜோசப்" என்றார்.

"ஸார்..... சாந்தா காணாமே போயிருக்கிற விஷயத்துல ஒரு முக்கியமான க்ளூ கிடைச்சிருக்கு."

"என்ன க்ளூ?"

"சாந்தா காணாம போன இடமான மிஸ்டர் முகுந்தன் வீட்டு ஹால்ல ரெண்டு விதமான ரத்தக்கறைகள் கிடைச்சுது.

ஒரு ரத்தக்கறை பி. பாஸிட்டிவ். இன்னொரு ரத்தக்கறை ஓ. பாஸிட்டிவ். இதுல சாந்தாவோட க்ரூப் பி. பாஸிட்டிவ் ஓ. பாஸிட்டிவ் க்ரூப் சாந்தாவோட சம்பந்தபட்டவங்கள்ல யாருக்கு இருக்கும்னு இரகசியமா ஒரு சர்வே எடுத்து பார்த்தப்ப அது நித்தியனோட ப்ளட் க்ரூப் ஸார்......."

ஜோசப் சொல்ல குமரன் திக்கிட்டார். "நித்தியனிடம் சாயந்தரம் கேட்டப்போ தன்னோட ப்ளட் க்ரூப் ஏபி. நெகடிவ்னு சொன்னாரே?"

"பொய் சொல்யிலிருக்கார் ஸார்."

(பௌர்ணமி தொடரும்)



# சதாம் உசேன்

**அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை**

## 34

**ராஜையா**

குவைத்திலிருந்து ஈராக் இராணுவத்தை வாபஸ் பெற்றதோடு ஐ.நா. சபையின் தீர்மானங்களை ஏற்பதாகவும் சதாம் உசேன் அறிவித்த பிறகு, அவரைப் பற்றி ஜோர்தான் மக்கள் என்ன நினைக்கிறார்கள்? சதாம் தோற்றுப் போனார் என்று அமெரிக்கா உரத்த குரலில் பிரசாரம் செய்கிறதே... இது உண்மையா? அரபு மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

விடை தேடிப் புறப்பட்டார் சேகர் குப்தா. பேட்டி எடுக்க ஆரம்பித்தார்...

"உங்க பேரு...?"

"ஜலால் அயூப்."

"என்ன தொழில் செய்யிறீங்க...?"

"பெட்டிக்கடை வச்சிருக்கேன்....!"

"சதாம் உசேன் தோத்துட்டார்னு நினைக்கிறீங்களா?"

"சார்... எனக்கு சதாம் உசேன்தான் தலைவர். அவர் ஜெயிச்சாரா? தோத்தாரா? எங்கறது எனக்கு பிரச்சனையே இல்லை. அவர் செத்தாலும் கவலையில்ல. அவர் ஒரு ட்ரெண்டை ஆரம்பிச்சு வச்சுட்டார்.



இப்ப ஒவ்வொரு அரேபியனும் சதாமா மாறிக்கிட்டிருக்கான்...!"

அடுத்து ஒமர் அப்பாஸ், வங்கி மானேஜர். அவர் சொன்னார்...

"முப்பத்தி மூன்று நாடுகளின் முப்படைகளை எதிர்த்து 43 நாட்கள் தன்னந்தனித் தலைவனா தாக்குப்பிடிச்சுக் காட்டினார் சதாம். அது வீரமில்லையா? உலகத்திலேயே பெரிய பலசாலிகளுக்கு எதிரா அரேபியர்களின் போராட்டத்தை தலைமையேற்று நடத்தினார்- உங்களுக்கு காந்தி செய்தது போல!"

"பாலஸ்தீனத்தை பிடிச்சு வச்சுக்கிட்டதுமில்லாம, பக்கத்து அரபு நாடுகளிலிருந்து ஒரு தூசி பறந்து வந்தாக்கூட துள்ளிக்குதிச்சு சண்டைக்கு வர்ற இஸ்ரேலை தினம் தினம் 'ஸ்கட்' ஏவுகணை வச்சு அடிச்சு அடக்கினாரே... அதை எப்படி எங்களால் மறக்க முடியும்? தலைமுறை தலைமுறையா அவரை மறக்க மாட்டோம்!" என்றார் ஒரு பாலஸ்தீனியர்.

"அமெரிக்காவையும் மேலை நாடுகளையும் துணிச்சலுடன் எதிர்த்து நின்ற மூன்றாம் உலகத் தலைவர்" என்றார் ஒரு தீவிர இடதுசாரி. இப்படி சேகர் குப்தா சந்தித்த எல்லோருமே சதாமுக்கு ஆதரவாக ஏகோபித்த குரல் கொடுத்தார்கள்.

சேகர் குப்தா ஓட்டலுக்குத் திரும்பினார். தன் ரூமுக்குள் நுழைந்தார். மேஜை முன் அமர்ந்தார். பேனாவைத் திறந்தார். ரிப்போர்ட் எழுத ஆரம்பித்தார்....

"சதாமைப் பற்றி அவருடைய எதிரிகள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். இதுவரை-குறைந்தபட்சம் 20ம் நூற்றாண்டில் இத்தனை கவர்ச்சியும் புகழும் கொண்ட ஒரு தலைவரை அரேபியர்கள் கண்டதில்லை.

"சுற்றியுள்ள பத்து நாடுகளில் உள்ள மக்களையெல்லாம் கவர்ந்திழுத்தது மட்டுமல்ல; மற்ற நாடுகளிலுள்ள இஸ்லாமியர்களின் கனவுகளைத் தூண்டவும் செய்த கவர்ச்சி அது.

"கூட்டணிப் படைகள் முன் பணிந்து போக வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்ட போதிலும், அவர் விட்டுச் செல்லும் கருத்துக்கள் பல்லாண்டுகள் நின்று வாழும் என்னும் அளவுக்கு இஸ்லாமிய நாடுகளில் அவருடைய செல்வாக்கு பரவி இருக்கிறது.

"அது மேலை நாடுகள் மீதான வெறுப்பு, பரவலான தீவிரவாதம், மத அடிப்படைவாதப் போக்கு ஆகியவற்றுடன் ஒருங்கிணைவது என்று உருவெடுக்கலாம்..."

இவ்விதம் தொடங்கி, தனக்கு ஜோர்டானிய மக்கள் அளித்த பேட்டி விவரங்களையெல்லாம் தொகுப்பாய் எழுதிய சேகர் குப்தா, கடைசியாக ரிப்போர்ட்டை இப்படி முடித்தார்:

"தோல்வியிலும் வெற்றி வீரராக நிலைக்குமளவுக்கு மேற்காசியா மற்றும் ஆபிரிக்க அரபு நாடுகளிலுள்ள இலட்சோப லட்சம் அரேபியர்கள் நெஞ்சில் சதாம் நிறைந்திருக்கிறார்.....!"

(முற்றும்)

அடுத்த வாரம் முதல்
தன் கதையோடு
உங்களை சந்திக்க
வருகிறார்
ஒரு நடிகை!
சந்திக்க
தயாராகுங்கள்!

# உதட்டில் ஒரு மிச்சம்

## 23

### சுபா

ஹெலிகாப்டர் பறந்தது. மோகனன் காலடியில் கிடந்தவனைப் பார்த்தார்.

பாவம் அரவிந்த்! அவனுக்குத் துன்பத்திற்கு மேல் துன்பம். முதலில் விக்ரம் என்பவன் முகத்தில் அமிலம் ஊற்றி முகத்தைச் சிதைத்தான். இப்போது ஹேம்நாத் சுட்டுக்காயப்படுத்தி விட்டார்.

பாதுகாப்பு அமைச்சருக்கு நெருக்கமானவர்களே, இப்படித் தீவிரவாதிகள் போல் நடந்து கொண்டால், நாட்டில் எந்த மனிதருக்குப் பாதுகாப்புத் தர முடியும்? அமைச்சர் பிரகாஷ் குப்தா நிறைய வியர்த்திருந்தார். அவர் கையில் இருந்த டைப் அடித்த பேச்சில் கவனம் செலுத்த முடியாமல் பார்வை அவ்வப்போது தடுமாறியது. விரல்கள் மெலிதாக நடுங்கிக் கொண்டிருந்தன.

அவருடைய மனைவி பயத்தில் மூர்ச்சையாகி இருக்கையில் வெகுவாக தளர்ந்து உட்கார்ந்திருந்தாள்.

ஹேம்நாத்தும் அவருடைய கூலிக்காரனும் ஒரு புறம் பாதுகாப்புக் காவலர்களால் அழுத்திப் பிடிக்கப்பட்டிருந்தனர்.

அமைச்சரின் நம்பிக்கைக்குரிய செயலரே இப்படி எதிர்பாராமல் செயல்படும் போது ஓடக்கரை கிராமத்தில் எந்தத் தைரியத்தில் அமைச்சரை இறக்குவது?

"சார்" என்றார் மோகனன் கழுத்தைத் திருப்பி.

"ம்?" என்றார் உடனே பதறி.

"நீங்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாமல் தவிர்க்க முடியுமா சார்?" மோகனன் மெல்லிய குரலில் கேட்டார்.

"வாட் டு யூ மீன்?"

"நாம் மதுரைக்கே திரும்பி விடலாம் என்று தோன்றுகிறது சார்"

"நோ" என்றார் பிரகாஷ் குப்தா ஆணித்தரமாக. "இவ்வளவு தூரம் வந்து விட்டு திடீரென்று பயந்து கொண்டு திரும்பினால், எவ்வளவு அசிங்கம்?'

"உங்கள் உயிருக்குப் பாதுகாப்புதான் சார் இப்போது முக்கியம்"

"பாதுகாப்பு அமைச்சருக்கே பாதுகாப்பு மோசமாக இருப்பதாக பேப்பர்கள் கூக்குரல் போடும் மோகனன்... அது எவ்வளவு கேவலம். கட்சிப்பணிக்காக மட்டும் நான் போகவில்லை மோகனன்... என் கார் தொழிற்சாலையின் துவக்க விழாவுக்காகவும் போகிறேன். வெளிநாட்டு கம்பெனியுடன் கூட்டாகத் துவங்கும் தொழில்! அவர்களுடைய பிரதிநிதி ஒருவரும் துவக்க விழாவிற்கு வருகிறார். அவர் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்? இங்கே தொழில் துவங்க அவர்களுக்கு அப்புறம் தைரியம் எப்படி வரும்?"

"அதற்காக உங்கள் உயிரைப் பணயம் வைக்க..."

"என் உயிரைப் பற்றி, அதன் பாதுகாப்புப் பற்றிக் கவலைப்பட வேண்டியவர்கள் நீங்கள் மோகனன். நானில்லை. நான் இப்போது திரும்பினால் என்னைத் தாக்கியவர்கள் வெற்றி பெற்றதாக ஆகிவிடும். வேண்டாம்... ஓடக்கரையில் ஹெலிகாப்டர் இறங்கட்டும்... மீட்டிங்கில் நான் கலந்து கொள்ளத்தான் போகிறேன்."

"ஹேம்நாத்?"

"ஹேம்நாத்தை சி.பி.ஐ.யிடம் ஒப்படையுங்கள்... ஆனால் இந்த மேட்டருக்கு நிறைய பப்ளிசிட்டி கொடுக்க வேண்டாம்.. ஹேம்நாத் திடீரென்று இப்படி மாறுவதற்கு என்ன காரணம், பின்னணியில் சதி செய்தவர்கள் யார் என்பதைக் கண்டுபிடிப்போம். உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் தான்."

"யெஸ் சார்"

"ஓடக்கரையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் எல்லாம் எப்படி மோகனன்?"

"குண்டு துளைக்காத மேடையில்தான் உங்களுக்கு இருக்கை போடப்பட்டிருக்கிறது. மிக முக்கியமானவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள் என்று கருதப்படும் கட்சிப் பிரமுகர்களைக்கூட சோதனை செய்து விட்டுத் தான் மேடைக்குள் அனுமதிக்கப்போகிறோம்."

"அப்புறம் என்ன? ஓடக்கரையில் தொழிற்சாலை துவங்குவதற்கும் இளைஞர் முகாம் அமைப்பதற்கும் எத்தனை நாள் விளம்பரம் செய்திருக்கிறோம்... இப்போது பின்வாங்குவது என்பது எப்பேர்ப்பட்ட அவமானம்? நல்ல வேளை உங்களுக்கு ஹெலிகாப்டர் இயக்கத் தெரிந்ததால் பிழைத்தோம். ஓடக்கரையில் இறக்குங்கள்."

மோகனன் தன் கவனம் முழுவதும் செலுத்தி ஹெலிகாப்டரை இதற்கென்று அமைக்கப்பட்ட இடத்திற்கு நேர்மேலே கொண்டு வந்தார் இறக்கினார்.

ஹெலிகாப்டர் சின்னக் குலுக்கல்களுடன் பூமியில் கால் பதித்தது.

***

தேவேந்திரன் டெலஸ்கோப் வழியே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஹெலிகாப்டர் நேர்த்தியாக இறக்கப்படாமல் குலுக்கல்களுடன் இறங்கியதைக் கவனித்தான்.

'அங்கே என்ன நடக்கிறது?'

பிரகாஷ் குப்தாவை மூன்று காவலர்கள் சூழ்ந்து மறைத்திருந்தனர். இன்னொரு காவலன் ஸ்ட்ரெச்சரில் ஏற்றப்பட்டான். அவன் தலை கவிழ்ந்து தெரிந்தது.

'இரண்டாவது ஸ்ட்ரெச்சரில் ஹெலிகாப்டரின் பைலட் உட்காரும் பகுதியிலிருந்து இறக்கப்படுவது யார்?'

'ஐயோ ஷிவாதானே அது?' அவன் தோள்களில் ரத்தம் வழிந்து சட்டையெல்லாம் சிகப்பாக நனைந்திருக்கிறது.'

தேவேந்திரனின் இதயம் துடிப்பதைத் தவறவிட்டது. ஷிவாவை சுட்டிருக்கிறார்கள். அமிலத்தால் சிதைக்கப்பட்டு சர்ஜெரி செய்யப்பட்ட அவன் முகம் ஸ்ட்ரெச்சரில் புரண்டது. கண் இமைகள் மூடியே இருந்தன. ஆனாலும் அவன் முகத்தில் ஆக்ஸிஜன் உறை பொருத்தப்பட்டதும் தேவேந்திரனுக்கு ஒரு ஆறுதல் கிடைத்தது. ஷிவா இன்னும் இறக்கவில்லை. உயிருக்குப் போராடினாலும் மரணம் இன்னும் அவனைத் தொடவில்லை.

'இந்த மண்ணுக்காகத் தன் முகத்தையே சிதைத்துக் கொண்டு எப்போர்ப்பட்ட சித்ரவதைகளை அனுபவித்தான். அவன் இறக்கக் கூடாது. எங்கோ தவறு நடந்து ஷிவாவின் முயற்சி தடைப்பட்டிருக்கலாம். ஆனால், பிரகாஷ் குப்தாவை அவன் தப்பிக்க விடப் போவதில்லை.'

ச்சே, ஷிவாவைப் பார்க்கும் பதட்டத்தில் அவன் கவனம் சிதறியிருந்த சில நொடிகளில் பிரகாஷ் குப்தா மேடையை நெருங்கி விட்டார்.

டெலஸ்கோப்பைத் திருப்பி, அவர் பிம்பத்தை அவன் தீட்டிக் கொள்ளும் முன், காவலர்கள் புடைசூழ அவர் குண்டு துளைக்காத மேடைக்குள் பிரவேசித்துவிட்டார்.

கூலிக்கு அழைத்து வரப்பட்ட கட்சி இளைஞர்கள் ஆரவாரம் செய்து அவரை வரவேற்றனர். தேவேந்திரன் தன்னைச் சபித்துக் கொண்டான். ரைஃபிளின் விசையிலிருந்து விரலை மெல்ல விலக்கிக் கொண்டான்.

இனி பிரகாஷ் குப்தா மேடையிலிருந்து வெளிப்படும் வரை காத்திருக்க வேண்டியது தான்.

ஹெலிகாப்டரிலிருந்து இறக்கப்பட்டவர்களைச் சுமந்து ஆம்புலன்ஸ் கூக்குரலிட்டு விரைந்தது.

தேவேந்திரன் கவனத்தை மேடையின் பக்கம் திருப்பினான். 'ஷிவாவிடமிருந்து தப்பினாலும் என்னிடமிருந்து நீ தப்பிக்க முடியாது பிரகாஷ் குப்தா.'

***

கூட்டத்தின் கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்தாள் நர்மதா.

மறுபடி மறுபடி அரித்துக் கேட்டதில் அவளுடைய ஷிவா, அவளிடம் ஓரளவு உண்மையைக் கூறி விட்டான். ஹெலிகாப்டரை ஓட்டப்போவது அவன்தான் என்று அவளுக்குத் தெரியும்.

பிரகாஷ் குப்தா கலந்து கொள்ளும் மீட்டிங் பெரும்பாலும் நடைபெறாது என்று ஷிவா சொல்லியிருந்தான். எந்த மண்ணைக் கைப்பற்றி பிரகாஷ் குப்தா, அவன் ஊர்மக்களைத் துரத்தினாரோ அந்த மண்ணிலேயே அவர் சாம்பல் கலக்கும் என்று சூளுரைத்திருந்தான்.

அதனால் ஒரு வித ஆர்வத்தோடு, ஆனால் அதை வெளிக்காட்டாத சாமர்த்தியத்தோடு அவள் பார்த்திருந்தாள்.

ஹெலிகாப்டர் வந்து இறங்கியதும், ஆம்புலன்ஸில் பைலட் ஏற்றப்பட்டதையும் பார்த்து அதிர்ந்தாள்.

'ஐயோ, ஷிவா உங்களை என்ன செய்து விட்டார்கள்? ஆஸ்பத்திரியில் நான் முத்தமிட்ட முகம் ஏன் இப்போது தொய்ந்திருக்கிறது? ஏன் இவ்வளவு ரத்தம்?'

"ஷிவா கண்ணில் தென்படுகிறானா?" என்று குரலைக் குறைத்துக் கேட்டாள், பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவனுடைய அம்மா.

"இல்லைம்மா" என்றாள் அவள், கையை ஆதரவாக அழுத்திக்கொடுத்து. வெளியில் இயல்பாகப் பேசினாலும், உள்ளுக்குள் நொறுங்கி உதிர்ந்திருந்தாள் நர்மதா.

***

அமைச்சரின் பேச்சு மேடையில் துவங்கியதும் தமிழ்நாடு பொலிஸுக்கு சில சிறப்பு உத்தரவுகளைக் கொடுத்துவிட்டு, பாதுகாப்புப் பொறுப்புகளை உரிய அதிகாரிகளிடம் ஒப்படைத்து விட்டு, தேவேந்திரனைத் தேடிப் புறப்பட்டார் மோகனன்.

***

"வெளியிலிருந்து தாக்குபவர்களை நாம் தைரியமாகச் சந்திக்கலாம். சமாளிக்கலாம், சண்டையிட்டு ஜெயிக்கலாம். ஆனால், வீட்டுக்குள்ளேயிருந்தே, வாள் வீசுபவர்களை என்ன செய்ய முடியும்?"

அமைசசர் பிரகாஷ் குப்தாவின் குரல் எல்லா ஸ்பீக்கர்களிலும் ஆவேசமாக ஒலித்தது.

"இந்தியாவின் தொழில் துறை முன்னேற வேண்டும். உன் ரத்தம் தா என்று என்னிடம் கேளுங்கள். என் கடைசி சொட்டு ரத்தம் வரை நீங்கள் உறிஞ்சிக்கொள்ள சந்தோஷமாய் அனுமதிக்கிறேன். இந்தியாவில் வறுமை ஒழிய உன் இதயம் வேண்டும் என்று ஆணையிடுங்கள். இங்கேயே வெட்டி உங்கள் காலடியில் போடுகிறேன். இந்தியாவில் ஜாதிச் சண்டை ஒழிந்து எல்லோரும் ஒற்றுமையாய் இருக்க உன் சாம்பல் தா என்று உத்தரவிடுங்கள்... என் மக்களின் மத்தியில் தீப்பற்றியெரிய நான் மனப்பூர்வமாக மண்டியிடுகிறேன். ஆனால் பதவி ஆசைக்காகவும் பகைவனுக்கு உதவி செய்வதற்காகவும் என்னைச் சாய்த்துக் கீழே தள்ள எத்தனை துரோகிகள்! சென்னை கடற்கரையில் ஒருத்தன் கத்தி எடுக்கிறான். என் மனைவிக்கு அடுத்தபடியாக நான் நம்பியிருந்த என் பர்ஸனல் செக்ரட்டரி இன்று ஹெலிகாப்டரில் துப்பாக்கி எடுக்கிறான்."

மக்கள் ஹோவென்று அதிர்ச்சியில் இரைந்தார்கள்.

"என் மரணத்தில்தான் உங்கள் சந்தோஷம் என்று சொல்லுங்கள்... இங்கேயே உங்கள் கையால் சாகத் தயாராயிருக்கிறேன்."

"இல்லை... இல்லை..." என்று கத்தினார்கள். உணர்ச்சிவசப்பட்ட இளைஞர்கள், காசுக்கு வந்திருந்த லாரி மக்கள்.

மோகனன் அவர்கள் ஆவேசங்களுக்கிடையே, ஆரவாரத்திற்கு நடுவில், ஒவ்வொரு முலையாகத் தேடலானார். முகாம்களாகக் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு நடுவில் இருந்த நிழல்களில் கட்டடக் கூரைகளில்..

ஏதேச்சையாக அவர் கவனம் கோயில் பக்கம் திரும்பியது. பளபளவென்று அங்கே ஏதோ மின்னவில்லை? என்ன அது?

கோவில் கோபுரத்தில் கூட எதிரி ஒளிந்திருக்க வாய்ப்பு இருக்கிறது. கோயிலை நோக்கி நகர்ந்தார் மோகனன்.

(○—வரும்—○)



### இதுவரை

அரவிந்த் ஒரு பைலட். அவனது மனைவி ஜ்யோதி. அவர்களது நண்பன் விக்ரம். அவனுக்கு ஜ்யோதி மீது ஆசை. இதற்கிடையே அரவிந்த், அமைச்சர் பிரகாஷ் குப்தாவுடன் பைலட்டாக ஓடக்கரை கிராமத்திற்குச் செல்கிறான்.

அக்கிராமத்தை வளைத்துப்போட அமைச்சர் திட்டமிட அதை- எதிர்க்கிறார்கள் கிராம இளைஞர்கள்.

பொலிஸ் சுடுகிறது. சீனு இறக்கிறான். கிராம இளைஞர்கள் கொதிக்கின்றனர். அமைதி வழி சரிப்படாது என்று ஆயுதம் ஏந்த முடிவு செய்கின்றனர்.

நிலத்தை அபகரிப்பதில் அமைச்சர் தீவிரம் காட்டுகிறார். அமைச்சரைக் கொல்ல இளைஞர்கள் திட்டமிடுகின்றனர்.

இனி....

---

# அரங்கம் அந்தரங்கம்

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 04

## கவியரசு கண்ணதாசன்

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப்பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

—கண்ணதாசன்—



தலைவர் தங்கசாமி அசோக் நகரில் ஐந்து இலட்ச ரூபாவில் ஒரு பங்களா கட்டியிருக்கிறார்.

அவர் என்ன கட்டினாலும் கட்டுவார்; வருமானவரி மட்டும் கட்டமாட்டார்.

திடீர் இலட்சாதிபதிகளில் ஒருவரான தலைவர் தங்கசாமி, வந்த வேகத்திலேயே ஒரு கிண்ணத்தை விழுங்கினார்.

கிண்ணத்தைவிட அவருக்குப் பெண்களின் கன்னத்திலேதான் மயக்கம் அதிகம்.

ஒவ்வொரு பெண்ணாக அவர் விசாரிக்க ஆரம்பித்தார்.

அதைப் பார்த்ததும் வரதராஜனுக்குக் கோபம் வந்தது.

"யோவ்! நாங்கள் இரண்டு மணி நேரமாக உட்கார்ந்திருக்கிறோம். நீர் என்ன திடீரென அங்கே போய்ப் பேசுகிறீர், வாருங்கள்.....!" என்றார்.

"ஒன்றரை மணிநேரம் சும்மாவா உட்கார்ந்திருந்தீர்கள்?" என்று கேட்ட தங்கசாமி, திடீர் என என்னைப் பார்த்துவிட்டார்.

அவர் எதையுமே திடீர் திடீர் என்று தான் பார்ப்பார்.

"என்ன கவிஞர், வணக்கம்! பார்த்து ரொம்ப நாளாகி விட்டது," என்று பக்கத்தில் வந்தார்.

"உங்களுக்கென்ன அரசியலில் லாபம் கிடைக்கிறது; அர்த்த ராத்திரியில் சுகம் கிடைக்கிறது," என்றேன் நான்.

"நீங்கள் பிழைக்கத் தெரியாதவர்கள். உலகத்தில் எந்த அரசியல்வாதி சம்பாதிக்கவில்லை? சம்பாதிக்கத் தெரியாதவன் அரசியலில் இருப்பது மடத்தனம். நாக்குப் பதமாக வளைந்தால், ஜனங்களை எப்படியும் திருப்பலாம். சம்பாதிப்பது யாருக்காவது தெரியுமா? அதனால் தான் என் சம்பாத்தியத்தை டெல்லியிலேயே வைத்துக்கொண்டேன்!" என்றார் அவர்.

அவர் சொன்னது உண்மைதான். அரசியலில் 'நாணயமானவன்' என்ற பட்டம் எவனுடைய வாழ்நாளிலும் பயனுடையதாக இருந்ததில்லை. மரணத்திற்குப் பிறகு ஒரு மரியாதை வரும். ஆனால் அந்த மரியாதையைப் பெற்றுக் கொள்ள நாமிருக்க மாட்டோம்; அவ்வளவு தான்!

நான் அங்கே பேசாமல் அமைதியாக இருந்ததற்கு அடக்கம் காரணமல்ல. எனக்கு நாளையப் பொழுதைப் பற்றிக் கவலை. கவலையை மறக்கத்தான் மனிதர்கள் குடிக்கிறார்கள். ஆனால் உண்மையான கவலை ஒருவனுக்கு இருந்தால், குடி அதை அதிகப் படுத்துமே தவிர- குறைக்காது.

சரஸ்வதி என்ற பெண் என் அருகில் வந்து அமர்ந்தாள்.

தங்கசாமி உடனே எழுந்து போய் விட்டார்.

"நீங்கள் ஏன் பேசாமலேயே இருக்கிறீர்கள்? உங்கள் எழுத்துக்கள் எனக்கு மிகவும் பிடிக்கும்..." என்று அவள் ஆரம்பித்தாள்.

"உலகம் என்னைப் பார்ப்பது வேறு; நான் என்னைப் பார்ப்பது வேறு..." என்றேன் நான்.

உடனே அவன் தன் கதையை ஆரம்பித்தாள்.

"பாருங்கள்! ஏதோ கஷ்டம் என்றுதானே இப்படியெல்லாம் வருகிறோம். இத்தனை பேர் கூடிக் கொண்டு ஆளுக்கொரு பக்கம் பிடித்திழுத்தால் என்ன நாகரிகம்?" என்றாள் அவள்.

மனிதர்கள் செய்யக் கூடாத காரியங்களைச் செய்வதற்காகவே இத்தகைய சூழ்நிலைகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பது, அவளுக்கென்ன தெரியும்?

"ஏ, கழுதை இங்கே வா!" என்றொரு சத்தம் கேட்டது. கத்தியவர் நாராயணசாமி.

கடைசியாக அவர் தன் இனத்தைக் கண்டு கொண்டதில் எனக்கொரு திருப்தி.

உடனே, அந்தப் பெண் எழுந்து போய் அவர் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

அவளுக்கு அந்தப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பொலிஸ் அதிகாரி கமலநாதன், இப்பொழுது மேல் சட்டையை மட்டும் தான் கழற்றியிருந்தார்.

அதே நேரத்தில் ஆதிவாசி போல் மாடியிலிருந்து இறங்கி வந்தார் மருதாசலம்.

அவர் ஒரு பெரிய காண்ட்ராக்டர்.

தன் காண்ட்ராக்டை முடித்துக் கொண்டு தான் அவர் வந்தார்.

'மது உள்ளே போனால் மதி வெளியே போகும்' என்று தான் சொல்வார்கள்: ஆடை கூடவா?

நாகரிகத்தின் உச்ச விளிம்பில் நிற்கும் சமுதாயத்தின் தூண்கள், இரவு பன்னிரண்டு மணிக்கு இருந்த நிலையை இறைவனே நேரில் வந்து பார்த்தால், தன் சிருஷ்டியின் அலங்கோலத்திற்காக வெட்கப்படுவான்.

'காயம்' என்று உடம்பை ஏன்தான் சொன்னார்களோ?- அந்தப் பெண்களின் உடம்பெல்லாம் காயம்.

'மனதை இதமாகப் பெற்றவன் தான் மனிதன்' என்றால், அந்த இதத்தை முற்றிலும் இழந்து நின்ற நேரம் இரவு மணி பன்னிரண்டு.

பத்துப் பேர் கூடிய இடத்தில் ஒருவராவது வாந்தி எடுத்தாக வேண்டுமே?

அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர் வீட்டுக்காரர் விவேகானந்தம்.

நல்லவேளை! அது அவர் வீடுதான். அவரே கழுவிக் கொள்வார்.

"எனக்குக் காலையில் நிறைய வேலை இருக்கிறது," என்று சட்டையை ஒரு கையிலும், பாட்டிலை ஒரு கையிலும் பிடித்தபடியே வெளியேறினார் வக்கீல் வரதராஜன்.

எல்லோரும் அவரவர் காரை எடுத்த போது, ஒவ்வொரு காரும் மோதிக் கொண்ட அழகும், அவர்கள் பேசிக் கொண்ட கொச்சை மொழிகளும் சரித்திரத்தில் இடம் பெறத் தக்கவை.

பின்னிரவில் நான் வீடு வந்து சேர்ந்தேன்.

பொழுது விடிந்தது.

சைத்தான் படித்த வேதம் முடிந்து, தர்மதேவனின் பொழுது ஆரம்பமாகி விட்டது.

அந்தரங்கத்தைப் பார்த்தாகிவிட்டது: இனி அரங்கத்திற்குப் போவோம்.

(அந்தரங்கம் வரும்)



படிப்பகம்

# பங்கு!

"என்னங்க கொஞ்சங்கூட அறிவில்லாத மாதிரி நடந்து கொள்ளுறீங்கள். இப்ப எதுக்குப்போய் அவ கல்யாணத்தை திடீரென்று நிறுத்துறீங்க?" ஆத்திர ஆவேசத்துடன் கத்திய மனைவியை இயலாமையுடன் பார்த்தார் பரமசிவம்.

சத்தம் கேட்டு உள்ளேயிருந்த இரு பெண்களும் விரைந்து வந்தனர். மூத்த மகளின் கணவன் சபாவும்கூட வந்து தன் மனைவி பக்கலில் நின்றான். எல்லோரையும் ஒரு தடவை அழுத்தமாகப் பார்த்துவிட்டு டெலிஃபோனை எடுத்து நிதானமாக நம்பரை சுழற்றினார். லைனில் இளைய மகளுக்குப் பேசி முடித்திருந்த மாப்பிள்ளையே கிடைத்தார். நேரிடையாகவே பேச்சில் இறங்கினார் பரமசிவம்.

"தம்பி, என்னை மன்னிச்சுடுங்க. நான்... நான் தகுதிக்கு மீறி ஆசைப்பட்டுவிட்டேன் என்று நினைக்கிறேன். என்



**ஜெ- சூரியன்**

பெண்ணுக்கு இந்தளவுக்குச் சீர் செய்யமுடியாது போலிருக்கு... நீங்கதானே ஒப்புக் கொண்டதுன்னு சொல்றீங்களா... ம்.. ஆமா, ஆமா.. நான் ஆசையா சொன்னேன். அப்போ முடியும்போல இருந்திச்சு. இப்ப முடியலை. சொல்ல வெட்கமாகத்தானிருக்கு. என்ன செய்யுறது? பெண்களைப் பெத்தவங்க வெட்கம், மானம், ரோசம் இவைகளைப் பெரிசாக நினைக்கக்கூடாது. என்னை மன்னிச்சுடுங்க...," என மீண்டும் மன்னிப்பு வேண்டியவராக ஃபோனை வைத்தார். அரும்பியிருந்த வியர்வையை மேல் துண்டால் அழுந்தத் துடைக்கிற சாக்கில் தம்மனக் குமுறலினால் கலங்கிய விழிகளையும் சேர்த்துத் துடைத்தவராக அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்தார்.

"அக்கா இப்ப திருப்திதானே?" எனக் கேட்டாள் ராதிகா. அவளால் அதற்குமேல் பேசமுடியவில்லை. தொண்டைக்குள் அழுகை வந்து அடைத்துக்கொண்டது.

அம்மா கோபம், தாபம் இரண்டையும் வார்த்தைகளில் கொட்டி அழுகையில் கரைத்தாள்.

இவை எதையுமே சட்டை பண்ணாத சுமதி தன் கருமத்திலேயே கண்ணாயிருந்தாள். "ஏம்மா எதுக்கு இப்ப கத்துறீங்கள் ஆளாளுக்கு? நான் என்ன அப்பிடி கேட்டேன்னு வைகிறாய்?" எனக் கேட்டாள் சற்று உரத்த தொனியில்.

"கேட்கிறதையா கேட்டாய்? பாவி, இரண்டு வருஷங்களுக்கு முந்தி உனக்கு சீர் செய்து கல்யாணம் பண்ணி முடிச்சாச்சு. அதுக்கே உன்னப்பா என்ன பாடுபட்டார். அந்தக் கடன் பாதி பாக்கி. இப்ப உன் தங்கைச்சிக்கு நல்ல இடம் கிடைச்சிருக்கு, அவ படிப்புக்கும், வேலைக்கும் தகுந்தமாதிரி கிடைச்ச தாலை கொஞ்சம் அதிகமாக நகை, பணம், கேட்டாங்க, கொடுக்க நாமும் சம்மதிச்சோம். யாரு தங்கச்சிதானேன்னு நினைக்காம இப்ப வந்து எனக்கும் அத்தனை தந்தாகணும்; நானும் உங்க பொண்ணுதானேன்னு நின்றால் எப்படி? என்கிறேன்." என கோபம் கொப்பளிக்கக் கேட்டாள் அம்மா மரகதம்.

"இதிலென்ன தப்பிருக்கு? எண்ணி இரண்டாண்டுக்குள் வித்தியாசத்துக்குள்ள இவளுக்கு முப்பது பவுண் தருவதென்றால், அதோடு பணம் கூட இலட்சக்கணக்கில்- அப்ப நான் என்ன செத்தல் மாடா? எம் புருஷன் என்ன குருடா, செவிடா? இதை யார் கிட்ட யாவது சொல்லிப்பாருங்க; பிள்ளைகள்னா சமமா நடத்தணும்!"

"இதோபார் சமனைப் பற்றி என்னிடம் பேசாதே. எந்தக் காலத்திலும் பெற்றவங்க எங்கள் தராசு தாழ்ந்து உயர்ந்து நின்றதில்லை."

"இப்பமட்டும். இவ கல்யாணத்திலை மட்டும் தாழ்ந்துட்டுதே...?" என்றாள் சுமதி கேலியாக.

"சும்மா பேசி பிரச்சனையை வளர்க்காதீங்க. மரகதம் நீ உள்ள போ. ராதிகா நீயும்தான்!" என்ற பரமசிவம் மூத்த பெண் பக்கம் திரும்பினார். "இதோ பாரும்மா சுமதி! இப்ப உன்னப்பாவாலை நீ கேட்கிறபடி தரமுடியாது. ராதிகாவுக்கு கொடுக்க இருப்பதிலை உன் பங்கைத் தந்தால் மீதியை தேடித் தந்து அவளைக் கட்டிக்கொடுக்கிறதுக்குள்ளே நான் இருப்பேனோ இல்லியோ. அதாலை அவ கலியாணத்தை நிறுத்திவிட்டு இருக்கிறவரை அவளை எங்ககூட வெச்சிருக்கலாம்னு இருக்கிறேன். இப்ப திருப்திதானே உங்களுக்கு?" என சுமதியின் அருகில் நின்ற அவள் கணவனையும் பார்வையால் உள்ளடக்கி கேட்டார்.

அதேவேளை வாசலில் அரவம் கேட்டது. கதவு தட்டும் ஓசையைத் தொடர்ந்து உள்ளே நுழைந்தான் இளைய பெண் ராதிகாவுக்கு பார்த்திருந்த மாப்பிள்ளை.

"என்ன.... என்ன மாமா திடீரென்று மாறிப் பேசிவிட்டீர்கள்? எனக்கு ஒண்ணுமே புரியவில்லை. அதான் நேரிலேயே கேட்டுத் தெளிவை ஏற்படுத்தலாம்னு வந்தேன்!" 'எங்கே ராதிகாவென' உள்ளே பார்த்தான். ராதிகா சோர்ந்தவளாக தலை கவிழ்ந்து தாயின் முதுகுக்குப் பின்னால் வந்து நின்றாள்.

எப்படி இந்தக் கேவலமான செய்தியைச் சொல்வதென தவித்துப் போய் நின்றிருந்த அப்பாவைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. மெல்ல அவளே விசயத்தை அளந்து கச்சிதமாகச் சொல்லி முடித்தாள். சில விநாடிகள் அங்கே எதுவித சத்தமும் எழவில்லை. அந்த நிமிட அமைதியை கலைத்தவனாக சுதாகர் பேசினான்.

"மாமா! உங்ககிட்ட பணத்தையோ, நகையையோ எதிர்பார்த்து நானிந்தக் கல்யாணத்துக்கு சம்மதிக்கலை. ராதிகாவின் படிப்பு, இத்தனை படிச்சு வேலைக்குப்போய் சம்பாதிக்கிற அளவுக்கு நீங்க பாடுபட்டிருக்கிறீங்கன்னா, அதுவே பெரிய சொத்தைச் சேர்த்த மாதிரித்தான். அதைவிட அவகிட்ட இருக்கிற அமைதி, அடக்கம் இவைதாம் எனக்கு வேண்டியவையாக இருக்கின்றன. பெரியவங்க நீங்க பேசி எடுத்த முடிவுதான் இந்த சீதனம். எனக்கு அதிலே சம்பந்தமே கிடையாது. இருக்கு... கொடுக்கிறீங்கன்னு நினைச்சேன். இப்பதான் தெரியுது நிலைமை. மாமா நாளைக்கு நாங்களும் பெண்ணைப் பெற்றுக்கொள்வோம். அவளைக் கட்டிக் கொடுக்கிறபோது இப்படித்தானே தவிப்போம்? இதிலும் பலமடங்கு தவிக்கலாம். நாம் செய்வது திரும்ப வட்டியுடன் நமக்கு கிடைக்கும் என்பது எனக்கு நன்கு தெரியும். ஆகவே எனக்கு நீங்களாக உங்க பெண்ணை மட்டும் தந்தால்போதும். என்னால் அவளை வைச்சு காலம்பூரா காப்பாற்ற முடியும்!" என அழுத்தம் திருத்தமாக கூறினான் சுதாகர்.

பரமசிவம் உணர்ச்சி மேலிட்டவராக திணறினார். "ரொம்ப நன்றி மாப்பிள்ளை. ரொம்ப நன்றி." என்றார் நாத்தழுதழுக்க.


மரகதம் தன் விழிகளை மூடித்திறந்து "அப்பாடா நிம்மதி, ஆண்டவனுக்கு நன்றி!" என மனதுள் கூறிக்கொண்டே பாவனையைக் காட்டினாள். அன்னையின் பின்னே என்னவாகுமோ என தவித்தவளாக நின்றிருந்த ராதிகா நிமிர்ந்து பார்த்தாள் அக்கா சுமதியை.

'இனி என்ன செய்யப் போகிறாய்? உன் புருஷன் அங்கம் குறைந்தவன்னு ஒப்புக் கொண்டு உனக்குத் தந்தவைகளை திருப்பித் தந்துவிடுகிறாயா..?' தங்கையின் பார்வையில் இப்படியொரு கேள்வி எழுந்து நிற்பதை யுணர்ந்தவளாக வெட்கத்துடன் சுமதி தலையைக் கவிழ்ந்துக் கொண்டாள். ●

# தான்யா

தான்யா என அழைக்கப்பட்ட அவள், காற்சட்டைக்கும், ஜாக்கெட்டுக்கும் உள்ளாகத் திணிக்கப்பட்டாள். அவளது கன்றிப்போன உறைபனி தடித்த பாதங்களுக்கு மேலாகக் காலுறைகளை இழுத்துவிட குலீக் தம்பதி உதவினார்கள். அவளது பையில் இருந்த பெட்ரோல் போத்தல்களை 'கெரில்லா' என்ற வார்த்தையின் அடையாளத்துடன் அவளது கழுத்தில் தொங்கவிட்டு, சதுக்கத்திற்குக் கூட்டிச் சென்றார்கள்.

உருவிய வாட்களுடன் குதிரை வீரர்கள் பத்துப்பேர் தூக்கு மேடையைச் சுற்றியிருந்தார்கள். அவர்களைச் சுற்றி நூற்றுக்கு



மேற்பட்ட ஜெர்மானிய போர்வீரர்களும் சில அதிகாரிகளும், தூக்கிலிடுவதைக் காண வருமாறு உள்ளூர் மக்களுக்கு கட்டளையிட்டிருந்தார்கள். ஆனால், ஒரு சிலரே வந்திருந்தனர். அந்தப் பயங்கரமான காட்சியைக் காண வேண்டாம் என சிலர் அமைதியாக நழுவிப்போய்விட்டார்கள்.

"சோவியத் யூனியனில் ஜெர்மன் படையெடுப்பை எதிர்த்துப் போராடிய பெண்களில் ஒருவரது உண்மைக் கதை."

சுருக்குக் கயிற்றுக்குக் கீழாக ஒன்றின் மீது ஒன்றாக இரண்டு சரக்குப் பெட்டிகள் வைக்கப்பட்டன. தான்யா மேல்பெட்டிக்கு உயர்த்தப்பட்டு, அவளது கழுத்தைச் சுற்றி சுருக்குப் போடப்பட்டது. அதிகாரிகளில் ஒருவன் தூக்குமேடையைப் புகைப்படம் எடுத்தான். மரண தண்டனைகளையும், கடும் தண்டனைகளையும் புகைப்படம் எடுப்பதில் ஜெர்மானியர்கள் கூடுதலான விருப்பம் கொண்டிருந்தார்கள். கமாண்டென்ட், தூக்கி விடுபவர்களுக்குச் சற்றுப் பொறுக்குமாறு அடையாளம் காட்டினார்.

தான்யா இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு உரத்த தெளிவான குரலில் அங்கு கூடியிருந்த கூட்டுப்பண்ணை விவசாயிகளை நோக்கி உரையாற்றினாள்: "ஏய் தோழர்களே ஏன் இவ்வளவு சோர்வாகக் காணப்படுகிறீர்கள்? மேலும் [illegible]வைக் காட்டுங்கள், சண்டையிடுங்கள்., ஜெர்மானியர்களைக் கொல்லுங்கள், எரியுங்கள், எலிகளைப் போல அவர்களை வேட்டையாடுங்கள்!"

அவளுக்கு அருகே நின்று கொண்டிருந்த போர்வீரன் அவளை அடிக்கவோ, அவளது வாய்க்குமேலாக வைக்கவோ தனது கையை உயர்த்தினான். ஆனால் அதை அப்பால் தள்ளிவிட்டு அவள் தொடர்ந்து கத்தினாள். "சாவுக்காக நான் பயப்படவில்லை. தோழர்களே! நம் மக்களுக்காகச் சாவது மகிழ்ச்சியானது..."

பொதுவான தோற்றத்தையும், தூக்குமேடையின் நெருக்கமான காட்சியையும் ஏற்கனவே படம் எடுத்துக் கொண்டுவிட்ட அதிகாரி இப்போது பக்கவாட்டில் எடுக்க முயன்று கொண்டிருந்தான். தூக்கிலிடுபவன் பதற்றமாகக் காணப்பட்டான். கமாண்டென்டினுடைய கண்ணையே நோக்கினான்.

"சீக்கிரமாக ஆகட்டும்!" கமிராவுடன் இருந்த அதிகாரியை நோக்கி கமாண்டென்ட் கத்தினான். இந்நிலையில் தான்யா அவனை நோக்கித் திரும்பி அவனுக்கும் ஜெர்மானியப் போர் வீரர்களுக்குமாகக் கத்தினாள்.

"நீங்கள் என்னைத் தூக்கிலிடப் போகிறீர்கள். ஆனால் நான் தனிமையானவள் அல்லள். நாங்கள் இருநூறு மில்லியன் பேர் இருக்கிறோம். எல்லோரையும் உங்களால் தூக்கிலிட முடியாது. என் சாவுக்குப் பழிவாங்காமல் விடமாட்டார்கள்...!" உள்ளூர் ஆண்களும், பெண்களும் அழுதார்கள். என்ன நடைபெறப் போகிறது என்பதைப் பார்க்கக்கூடாது என்பதற்காக சிலர் மறுபுறம் திரும்பிக் கொண்டனர்.

தூக்கிலிடுபவன் கயிற்றை இழுத்து தான்யாவினுடைய தொண்டையைச் சுற்றி சுருக்கை இறுக்கினான். தனது இருகைகளாலும் முழுப்பலத்தோடு, இழுத்து, நுனி விரல்களில் தன்னை உயர்த்திக்கொண்டு தன் வலிமை அனைத்தையும் ஒன்று திரட்டிக் கத்தினாள்.

"போய் வருகிறேன் தோழர்களே! சண்டையிடுங்கள், பயப்படாதீர்கள்...."

கீழிருந்த சரக்குப் பெட்டியை தனது உருக்கு நுனி கொண்ட காலணியால் தூக்கிலிடுபவன் தள்ளிவிட, அது நழுவி பனியில் விழுந்தது. மேல் பெட்டி கவிழ்ந்து பெரும் ஓசையுடன் தரைமீது விழுநதது. கூட்டத்தினர் அச்சத்தால் பின் வாங்கினர். யாரோ அலறினான். இந்த அலறல் நாடு முழுக்க எதிரொலித்தது.

அவள் எதிரியின் பிடியில், நாஜியின் தூக்கு மேடையில் மாண்டாள். தனது துயரத்தையோ தனது தோழர்களையோ அவள் காட்டிக்கொடுக்கவில்லை. கொள்கைத் தியாகியினுடைய சாவு அவளுக்கு நேர்ந்தது. ஒரு வீரனைப் போல மரணமடைந்தாள். எந்த வெற்றியாளனுக்கும் ஒரு போதும் கீழ்ப்பணியாத நாட்டு மக்களின் உண்மை மகளைப் போல மடிந்தாள். அவளது நினைவு என்றும் நிலைக்கட்டும்.

**நன்றி: தேசபக்த போரின் கதைகள்.**

# உயிரே... உயிரே...

தன் எதிரில் நின்ற இளைஞனையும் இளம் பெண்ணையும் வியப்புடன் பார்த்தார் ஜோதிட மணி சுப்புராமன்.

"என்ன வேணும்?"

"சார் என் பெயர் அருண். இவ ப்ரீதா. நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் மனப்பூர்வமாக நேசிக்கிறோம்."

"ரொம்ப மகிழ்ச்சி. கல்யாணம் செய்துக்க வேண்டியதுதானே? என்னிடம் எதுக்கு வந்தீங்க?"

"பெத்தவங்க சம்மதிக்கவில்லை."

"தற்கொலையா?" அவள் ஒரு நிமிடம் தயங்கினாள்.

"கவலைப்படாதே. நேத்துதான் அப்பா தோட்டத்தில் போடுவதற்காகச் செடிகளுக்கு அடிக்கிற பூச்சி மருந்தை வாங்கி வெச்சிருக்கார். அதை நாம ரெண்டு பேரும் தண்ணியிலே கலக்கிக் குடிச்சிடலாம்." ப்ரீதா சம்மதித்தாள்.

மறுநாள் அந்தி நேரத்தில் இருவரும் ஊருக்கு வெளியே இருந்த தோப்பில் சந்தித்தார்கள். தற்கொலை முயற்சிக்கான அத்தனை உபகரணங்களும் தயார்.

"அவங்களைக் கேட்டுக்கிட்டா காதலிச்சீங்க?"

"இல்லை!"

"இப்ப மட்டும் எதுக்கு சம்மதம்? பதிவுத் திருமணம் செய்துகிட்டுப் போய் அவங்க காலில் விழ வேண்டியதுதானே?"

"எத்தனை சுலபமாச் சொல்லிட்டீங்க. எங்களைப் பெத்து வளர்த்தவங்க... அவங்க மறுப்பு சொன்னால் அதற்கு வலுவான காரணம் இருக்கு என்கிறதை நாங்க ஏத்துக்க வேண்டாமா?"

"அப்படி என்ன காரணம்..? அந்தஸ்து, நெடுங்கால குடும்பப் பகை?"

"இவை எதுவுமே இல்லே."

சுப்புராமனின் முகத்தில் திகைப்பு தெரிந்தது.

"நீங்க வருகிறவங்க முகத்தைப் பார்த்துட்டே அவங்க எதிர்காலத்தைச் சொல்லிடுவீங்கன்னு தெரிஞ்சவங்க சொன்னாங்க..."

அவர் பதில் சொல்லாமல் இருவருடைய முகங்களையும் மாறிமாறிப் பார்த்தார்.

"ம்ஹூம்...இல்லை" என்றார்.

"புரியலையே!"

"நீங்க வாழ்க்கையிலே மட்டுமில்லை, சாவிலே கூட இணைய வாய்ப்பில்லே!" என்று தீர்மானமாகச் சொன்னார் அவர்.

வெளியே வந்ததும் "ப்ரீதா! இதை ஒரு சவாலாக ஏத்துக்கிட்டு நாம ஏன் தற்கொலை முயற்சியில் இறங்கக்கூடாது? சாவில் நம்மைப் பிரிக்க யாராலும் முடியாது."



**ரமணன்**

அருண், பூச்சிமருந்தை எடுத்து இரண்டு டம்ளர்களில் போட்டுத் தண்ணீரை விட்டுக் கலக்கினான்.

இருவரும் அவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு தயாரானார்கள்.

வாழத்துடித்த தங்களுக்கு இப்படி ஒரு முடிவா?

யோசித்துக் கொண்டிருக்கையில் பின்னால் ஏதோ சப்தம்.

இறக்கையை இழந்த புறா ஒன்று, பறக்க முடியாத நிலையில் வேகமாக நடந்து போக... அதைப் பிடித்துத் தன் உணவாக்கிக்கொள்ள பூனை ஒன்று துரத்திக் கொண்டு ஓடியது.

புறா சளைக்கவில்லை. தன் நடையின் வேகத்தை இன்னும் அதிகரித்து, குவியலாகக் கிடந்த குப்பைக்குள் தன்னை மறைத்துக் கொள்ள முயன்றது.

பூனை விடவில்லை.

குப்பையைக் கிளறி புறாவைத் தேடியது.

புறா விரைந்து அவர்கள் உட்கார்ந்திருந்த பக்கமாய் வரத் தொடங்கியது.

பூனை ஆக்ரோஷத்துடன் அதன்மீது பாய்ந்தது.

புறா சட்டென்று நகர்ந்து தப்பித்துக் கொண்டது.

அடுத்த பாய்ச்சலில் அது நிச்சயம் பூனையின் பிடிக்குள் சிக்கிவிடும். அதன் தலைவிதி நிர்ணயிக்கப்பட்டுவிடும்!

அத்தனை இயலாத நிலையிலும் புறா தன் உயிரைக் காத்துக்கொள்ள எத்தனை போராடுகிறது! உயிர் என்பது எத்தனை மகத்தானது!


அதிலும் மனிதனாகப் பிறந்து கூன், குருடு, நொண்டி, நோய், பிணி எதுவுமே இல்லாதவனாய் இருந்து, கல்வி அறிவு பெற்று அறிஞனாகி அதனால் உலகம் பயனுற வாழ்கிற வழியைப் பற்றி தான் ஏன் சற்றும் யோசிக்கவில்லை?

ப்ரீதா தன் தாயின் தங்கையின் மகள் என்கிற காரணத்தால் அவர்கள் கணவன், மனைவி உறவில் பிணைவதை இரண்டு குடும்பங்களும் விரும்பவில்லை. அவர்கள் எதிர்க்கிறார்கள் என்ற காரணத்துக்காகத் தற்கொலை செய்துகொண்டு அருமையான உயிரைப் போக்கிக்கொள்ள நினைப்பது எவ்வளவு அறிவீனம்?

காதலும் திருமணமும் மட்டுமே வாழ்க்கையல்ல.

அவற்றையும் கடந்து இந்த உலகத்தில் உய்விக்க... மனிதாபிமானத்தோடு செயல்பட்டு, மற்றவர்களின் துயரங்களைத் துடைத்து, நம்பிக்கையை ஏற்படுத்தும் தூண்டுகோலாக ஒரு அன்னை தெரஸா மாதிரி... ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் மாதிரி தன்னலமற்று வாழ்வது எவ்வளவு சிறப்பானது!

அருண் ப்ரீதாவின் கையிலிருந்து டம்ளரைத் தட்டி விட்டான். தன்னுடையதையும் கீழே போட்டுவிட்டு, விரைந்து சென்று புறாவைக் கையில் எடுத்துக் கொண்டான்! ●



**எங்கே இருக்கிறார்?**

இங்கே இயேசுநாதர் மறைந்திருக்கிறார். சற்று எட்டத்தில் வைத்துப் பார்ப்பீர்களோ, கிட்டத்தில் வைத்துப் பார்ப்பீர்களோ? முயற்சி செய்தால் கண்ணுக்கு காட்சியளிப்பார்.



படிப்பகம்

# கண்ணோடு காண்பதெல்லாம்

இலக்கியநயம்



அவன் முன்னால்
கவிதை மடல்
விரிந்து கிடந்தது!

உண்டதை
இரைமீட்டதுபோல,
எழுதியதை
மறுபடி மேய்ந்தான்!

அவன் என்ன
மாடா?
இரை மீட்பதற்கு?

மாடுதான்!
அவள் நினைவில்
முட்டி முட்டிமோதும்
மாடுதான்
மனது!

மாடு வண்டி
இழுக்கும்!
அவன் மனது
அவளை இழுக்கும்!

மாட்டுக்கு
வைக்கோல்!
மனதுக்கு
நினைவுகள்!

பாரம் இழுத்து
மாடு களைக்கும்!
நினைவுப்பாரம்
சுமந்து
மனம் களைப்பதில்லை!

அவன்
கவிதைகள்
அவளுக்காக மட்டும்!
அவளுக்கு மட்டும்!

"நினைவுகள்
உதிர்வதில்லை!
அடிக்கடி
அவிழ்வதுண்டு!

அவிழும்போது
உனக்குள் நான்
தொலைந்து போவதுண்டு!

முலையில்
கட்டிப் போட்ட
அழுக்குத் துணி முட்டை
அல்ல நம் நினைவுகள்!

கட்டிப்போட்ட
முத்துக்குவியல்
நம் நினைவுகள்!

நீ கடல்
நான்
உன்னில் கலக்கும்
நதி!

எப்போதும்
உன்னை நாடியே
ஓடி வருகிறேன்!

எப்போதும்
உனக்குள் வந்தே
ஒன்று கலக்கிறேன்!

நான் உற்பத்தியானதே
உனக்காகத்தானே!

நான் குதித்துவருவதே
உன்னை
நினைத்துதானே!

எந்த ஓடையில்
நான் ஓடும்போதும்
உன் நினைவில்தானே
சலசலக்கிறேன்!

என்னை மறந்துவிட
எப்படி நீ
துணிந்தாய்?

உன்னை மறந்துபோக
எனக்கு
துணிவில்லை!

மறக்க வேண்டும்
என்று
நினைக்கும்போதுதான்
அடிக்கடி
உன் முகம்
நினைவில் வருகிறது!

பறக்கத் துடிக்கும்போதுதான்
என் சிறகுகள்
என்னிடமில்லை
உன்வசம் என்பது
ஞாபகம் வருகிறது!

சிறகுகளை
பறித்து வைத்துவிட்டு
'பறந்துபோ'
என்று சொன்னால்
எப்படி பறப்பது?

அப்படித்தான்
உன்னை மறப்பதும்!

அமைதியாய் இருக்க
என்னால் முடியாது!

சமாதானத்தின்
எதிரியாக
என்னை நீ
ஆக்கிரமித்தாய்!

உன்னிடம்தான்
எத்தனை ஆயுதங்கள்!

எந்த எதிர்ப்புமின்றி
என்னை
வெற்றி கொண்டாய்!

தோல்வியும்
ஒரு சுகம் என்பதற்கு
பொருள்
உணர்த்தினாய்!

தோல்வியே
வெற்றிக்குரிய
படிக்கட்டுக்கள்
என்பது
எனக்கு மட்டும்
ஏன் பொருந்தாமல்
போனது?

ஒவ்வொரு படிக்கட்டிலும்
உன்னிடம் நான்
தோற்றுக்
கொண்டிருந்தேன்!

இறுதிப் படிக்கட்டில்
வெற்றியுமில்லை
தோல்வியுமில்லை!

நீதான்
பிரிந்து போய்விட்டாயே!
நான் யாருடன்
மோதுவது?

அந்தப் படிக்கட்டில்
நான் மட்டும் தனியாக
உனக்காக
காத்திருக்கிறேன்!

ஆயுள் முடிவதற்கிடையே
உன்னால்
வரமுடியும் என்றால்
காலம் முழுவதும்
காத்திருக்கத் தயார்!

நாம் இறுதியாக
பிரிந்த படிக்கட்டில்
என் இதயம்
துடித்துக் கொண்டிருக்கிறது!

உன் நினைவுகள்
இரத்த ஓட்டம்!

அதனால்தான்
இப்போதும் நான்
உயிர்வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்!

உன் வானத்தின்
சூரியன்
நான் என்றாய்!

அதுதான்
அஸ்தமிக்கட்டும் என்று
விடை தந்துவிட்டாயா?

இரவு போல
நீள்கிறது
நம் பிரிவு!

சூரியன் நான்
தொலைந்து கிடக்கிறேன்.
நிலா!
நீ எங்கே போனாய்!

நான் தொலைந்தாலும்
நீ வாழ்ந்தாலாவது
வானத்தில்
வெளிச்சம் இருக்கும்!

அந்த வெளிச்சத்தில்
நாம் இணைந்து நடந்த
காலடிச் சுவடுகள்உன்
கண்களுக்கு
நம் காதலைச் சொல்லும்!

நினைக்கும் போதெல்லாம்
மதுவாக வெறித்தாய்.
சிரிக்கும் போதெல்லாம்
பூவாக மலர்ந்தாய்!

இந்த வண்டுக்கு
தங்க இடம் தந்தாய்!
பசிக்கு விருந்தானாய்
தாகத்துக்கு தேனானாய்!

இப்போது
பசிக்கும், தாகத்துக்கும்
உன் நினைவுகள்
மட்டும் மிச்சமிருக்கின்றன!

எட்ட முடியாத
தூரத்தில் இருப்பதால்தான்
நிலாவுக்கு மரியாதை!

தோன்றி மறைவதால்தான்
சூரியனுக்கு மரியாதை!

அடிக்கடி வராதிருப்பதால்
மழைக்கும் மரியாதை!

இடைக்கிடையே
மின்னுவதால்தான்
கண்ணைப் பறிக்கும்
மின்னலுக்கு மரியாதை!

இதில் உனக்கு
எதுவாக இருக்க விருப்பம்?

எதுவாக இருந்தாலென்ன
அதற்கு தோதாக
நான் மாறிக்கொள்கிறேன்!

ஆனால் நான்
நானாக இருக்கும்வரை
நீ வந்தால்தான்
இதுவெல்லாம் முடியும்!

நான்
'அது' வாகிவிட்டால்?
ஒன்று செய்'
ஒரே ஒரு கண்ணீர்துளி
மட்டும் விட்டுப்போ!

என்னை புதைத்த
குழியில் இருந்தும்
காதல் துளிர்க்கட்டும்!

எழுதி முடிந்தபோது
அவன் கண்கள்
ஈரலித்திருந்தன!

முத்தாய்ப்பாக
அவன் எழுதினான்:

நீ வந்தால்
இடம் தருவதற்காக
என் கண்கள்
காத்திருக்கின்றன!

கண்ணின் கருமணியில்
உள்ள பார்வைக்கு பதிலாக
என்னின் உயிரே
நீ வந்து அமர்ந்து கொள்!

இதயத்தில் உன்னை
சிறைவைக்க
என் மனம் விரும்பாது!

கண்களில் கலந்து
எனக்கு ஒளியாய் இரு!

கண்மணியே
என் கண்ணில்
கலந்துவிடு!
கண்களால் கண்ட நீ
கண்களுக்கே
சொந்தமாகிவிடு!"

**கருமணியிற் பாவாய் நீ போதாயாம் வீழும்**
**திருநுதற்கு இல்லை இடம்!**

அதிகாரம்: 113 குறள்: 1123

தருவது
ரசிகன்

---

✉ 'வயது வந்தவர்களுக்கு' என்ற அறிவுப் போடு வெளியாகும் படங்களுக்கு கொழும்பில் கல்லூரி மாணவ மாணவிகள் முண்டியடிக்கிறார்களே. எப்படி அனுமதிச்சீட்டு கிடைக்கிறது?

ஆர்.முஸம்மில், கொழும்பு-14.

பதினைந்து வயதுப் பெண் ஒருத்தி வயது வந்தவர்களுக்கான படம் காணச் சென்றாள்.

அனுமதிச் சீட்டு தருபவர் அவளைப் பார்த்ததும், "இது வயது வந்தவர்களுக்கான படம். அவர்களுக்கு மட்டுமே அனுமதி!" என்று கூறினார்.

அதற்கு அப் பெண் கூறினாள்: "தெரியும்! அதனால்தான் என் குழந்தைகளை அழைத்து வரவில்லை!"



'ராஜஸ்தான்' படத்தில் சரத்குமார்-விஜயசாந்தி

✉ வடக்கு-தெற்கு பாலத்திட்டம் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

கே.ரங்கதாஸ், வவுனியா.

தென்பகுதி இளைஞர்கள் அந்தப்பாலத்தில் வவுனியா வரலாம். வவுனியாவில் இருந்து தமிழ் இளைஞர்கள் தென்பகுதிக்கு வருவதற்கு பாலம் பயன்படாது! 'பாஸ்' தேவை!

✉ யாழ் குடாநாடு காணி அபகரிப்பு விடயத்தில் தமிழ்க் கட்சிகள் உறுதியோடு செயற்படுமா?

எம்.வித்தியாதரன், கொழும்பு-05.

திட்டத்துக்கு அனுமதித்த அரசையோ, அதற்கு முன்னிற்கும் படையினரையோ ஏதாவது ஒரு கட்சியாகிலும் நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளதா? கண்டு பிடித்துக் கூறினால் ஆயிரம் பொற்காசுகள்! ஆரம்பமே ஊசலாட்டம். முடிவும் அப்படித்தான் இருக்கும்!

✉ 'சுவரொட்டிகள் அகற்றப்படுகின்றன; தேர்தல் திறம்பட நடக்க ஏற்பாடு' என்று திரும்பத் திரும்ப அரச பிரசாரசாதனங்கள் கூறிவருகின்றனவே?

அ.நயீம், கண்டி.

நியாயமான தேர்தல் நடக்கவுள்ளதாக இப்போதிருந்தே நம்பவைக்க வேண்டாமா? அதற்குத்தான்! நிச்சயமாக மோதல்கள், அதிகார துஷ்பிரயோகங்களுக்கு போதிய வாய்ப்புக்கள் உள்ளதாக எனக்குத் தோன்றுகிறது!

✉ ஜொள்ளர்களை திருத்த ஒரு வழி கூறுங்களேன்?

சி.சபேசன், திருமலை.

வழி தோன்றவில்லை. ஜொள்ளர்கள் பற்றிய கதை ஒன்று விழியில் பட்டது. படித்துப் பாருங்கள்:

இருட்டான தெருவில் தனியாக நடந்து போன பெண்ணை ஒருவன் திடீரென்று கட்டியணைத்து முத்தம் கொடுத்தான். அதனைப் பார்த்த பொலிஸ்காரர் ஒருவர் அவனைப் பிடித்தார்.

"ஏண்டா, தனியாப் போகும் ஒரு பெண்ணிடம் வம்பு பண்ணுகிறாயே, யாரடா நீ?" என்று அவன் முகத்தில் டார்ச்சை அடித்தார்.

உடனே அந்தப் பெண் "ஐயா! இவர் என் கணவர்தான்!" என்று கூறினாள்.

பொலிஸ்காரர் அந்தப் பெண்ணின் கணவனிடம்: "மன்னித்துக் கொள்ளுங்கள்; உங்கள் மனைவி என்று தெரியாது: அதுதான் உங்களைப் பிடித்து விட்டேன்!" என்று கூறினார்.

அதற்கு கணவன் கூறினான்: "பரவாயில்லை விடுங்கள்; நீங்கள் டார்ச் அடிக்கும் வரை இவள் என் மனைவிதான் என்பது எனக்கும் தெரியாது!"

✉ சிந்தியா! தேர்தல் பிரசாரம் எப்படி இருக்கிறது?

மா.விக்னேஷ், கம்பளை.

உண்மையைத் தவிர அனைத்தும் நிறைந்ததாக!

✉ அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை அள்ளி வீசிவருகிறார்களே?

வி.பாண்டியன், கொழும்பு-09.

பிறருக்கு கொடுத்த வாக்கை காப்பது நாணயம்! பிறருக்கு வாக்கு கொடுக்காது இருப்பது அறிவுடமை! இந்த இரண்டுமே அரசியல்வாதிகளிடம் கிடையாது!

✉ இலங்கை அணி தொடர் தோல்விகளை சந்திப்பது ஏன்?

என்.பிரகலாதன், மட்டக்களப்பு.

அணிக்குள் முரண்பாடுகள்! அது தவிர, அணியின் பலம், பலவீனங்களை ஏனைய அணிகள் கண்டு பிடித்து அதற்கேற்ப வியூகம் வகுக்கின்றன!

✉ முடிவில் எதிர்பாராத திருப்பம் வரக்கூடியதாக கதை (குட்டியாக) கூறுங்களேன்?

க.வாசுகி, மன்னார்.

நூறு மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் பத்து வினாடிகளுக்குள் அந்தத் தூரத்தைக் கடந்தால் அது பெரிய சாதனை.

சமீபத்தில் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற ஒரு போட்டியில் 6.9 வினாடிகளில் ஓடிச் சாதனை படைக்கப்பட்டது.

இதில் என்ன வித்தியாசம் என்றால், இதைச் செய்தது ஒரு சிறுத்தைப்புலி! (என்ன, கதை கச்சிதமா?)



ப்ரீத்தி சிந்தா

✉ 'நேசிக்கிறேன்' படத்தில் ப்ரீத்தி சிந்தா, 'உயிரே' ப்ரீத்தி சிந்தா, எதில் அசத்தல்?

எஸ்.விமலா, கொழும்பு-11.

'உயிரே'யில் திகட்டவில்லை.
'நேசிக்கிறேன்' ஜொலிக்கவில்லை!
அழகுப் பொம்மை!

✉ வாழ்க்கையில் பொய் பேசாது இருக்க முடியுமா?

ஆர்.ராஜ்குமார், மட்டக்களப்பு.

ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். எல்லா மாணவர்களையும் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

"இங்கே இதுவரை ஒரு பொய்கூடச் சொல்லாத மாணவன் உண்டா?"

சகல மாணவர்களும் மௌனமாக நின்றனர். ஆசிரியர் அமைதியாகப் பெருமூச்சு விட்டபடி கூறினார்:

"கடவுளே என் மாணவர்கள் முதன் முதலாக மௌனம் மூலம் ஒரே ஒரு உண்மையைப் பேசியிருக்கிறார்கள்!"

✉ இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் பதவி தொடர்பாக சர்ச்சை எழுந்திருப்பது உண்மையா?

ஆர்.மகேந்திரன், குருநாகல்.

உண்மை! ஜனாதிபதி சந்திரிக்காவின் மாமா முறையானவர் தலைவராக விரும்புகிறார். அணித்தலைவர் ரணதுங்காவும், அரவிந்தாவும் அவர் தலைவராவதை விரும்பவில்லை. தற்போதுள்ள தலைவரே மறுபடி போட்டியிட்டு தலைவராகலாம் என்கிறார்கள்! பனிப்போர் தொடர்கிறது!

✉ நீதிபதிகளும் அநியாயங்களுக்கு துணை போவார்களா? மூடிமறைக்க உதவுவார்களா?

எஸ்.சுதாகரன், கண்டி.

போவார்கள்! அவர்களும் மனிதர்கள் தானே! தங்களை நீதிபதிகளாக நியமித்த அரசாங்கங்களுக்கு விசுவாசமாக நடந்து, மேலும் உயர நினைக்கும் நீதிபதிகள் இந்த உலகில் இல்லாமலில்லை. அதேசமயம் விதிவிலக்குகளும் உள்ளனர் இன்னொன்று-முன்னாள் அரசாங்க காலத்தில் நியமனமான நீதிபதிகள் இந்நாள் அரசாங்கம் ஒன்றுக்கு எதிராக தீர்ப்புக் கூறுவதும் நடப்பதுண்டு!

## சிந்தியா பதில்கள்

✉ வெற்றிக்கு மூலதனம் என்ன?

அ.ஸ்ரீதரன், கல்கிசை.

வெற்றிக்கு மூலதனம் தன்னம்பிக்கை.
தன்னம்பிக்கைக்கு மூலதனம் துணிச்சல்.
துணிச்சலுக்கு மூலதனம் பயம் இல்லாமை!

✉ இலங்கை அணிவீரர் மகிள ஜெயவர்த்தனே பிரகாசிப்பாரா?

பா. அபிராமி, நீர்கொழும்பு.

அவர் ஆட்டத்தில் இலாவகமும், தன்னம்பிக்கையும் பளிச்சிடுகிறது! ஆனால் டெஸ்ட் போட்டியில் திடீரென்று அணியின் துணைத் தலைவராக்கி அவர் தோளில் சுமையேற்றியது தப்பு! அதன் பின்னரே தன் மீதுள்ள எதிர்பார்ப்பு கூடிவிட்டதால் அவர் பதற்றமடைந்துவிட்டார். குறைந்த ஓட்டங்களோடு போன வேகத்தில் திரும்புகிறார்.

✉ சிந்தியா! மோனிகாவின் பேட்டியைப் பார்த்தால் கிளின்ரன்மீது இப்போதும் மோகம் உள்ளதுபோல் தெரிகிறதே?

என்.பாலசேகரன், வத்தளை.

முத்தம் தருவதில் கிளின்ரன் கில்லாடி என்று கூறியதைப் பார்த்தால் பித்தம் தீரவில்லை என்றுதான் தெரிகிறது!

✉ தமிழ்ப் படங்கள் தொகை குறைந்து டப்பிங் படங்கள் அதிகமாகிவிடுமோ?

வா.விஜயன், பதுளை.

பயப்படாதீர்கள்! பல படங்கள் தயாரிப்பில் உள்ளன!

✉ 'மர்மதேசம்' நாடகத்தில் கறுப்பு யார் சொல்லுங்கள் பார்ப்போம்?

பி.ரமணி, கொழும்பு-07.

ராஜேந்திரனாக இருக்கலாம். அன்றும் இன்றும் என்று குழந்தைப் பருவம் முதல் காண்பித்ததற்கு காரணம் இல்லாமல் போகுமா?!

---

(ஸ்போர்ட்ஸ்)

## சம்பாத்திய வீரர்



உலக சாதனைப் புத்தகமான கின்னஸ் விவரப்படி ஒரு வருடத்தில் அதிகபட்சமாகச் சம்பாதித்த ஒரே ஒரு விளையாட்டு வீரர் மைக் டைசன்தான்.

1996ம் ஆண்டு மூன்றே மூன்று குத்துச் சண்டைப் போட்டிகளில் கலந்து கொண்டு ஏழரைக் கோடி டொலர்கள் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 525 கோடி ரூபாய்கள்.) சம்பாதித்தார். 1986ம் ஆண்டு உலக அதிபார குத்துச் சண்டை சாம்பியன் பட்டத்தை வென்றார். அப்போது இவரது வயது 20 வருடங்களும் 144 நாட்களும். இதன் மூலம் உலகின் இளம் வயது அதிபார குத்துச் சண்டை சாம்பியன் என்ற சாதனைக்குச் சொந்தக்காரரானார்.

இது போன்ற பல சாதனைகளைச் செய்த டைசன், பாலியல் வல்லுறவு புரிந்ததற்காக சிறையில் இருந்தார். பின் குத்துச் சண்டைப் போட்டியொன்றில் இன்னொரு வீரரான ஹோலிஃபீல்டின் காதைக் கடித்ததால் குத்துச் சண்டைப் போட்டியில் பங்கேற்க சில காலம் தடையும் விதிக்கப்பட்டார்.

மறுபடி விளையாட வந்த வேளையில், இவர் தனது காரின் மீது மோதிய ஸ்கூட்டர் பயணிகளைத் தாக்கியதால் இவருக்கு ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவரது வேண்டுகோளுக் கிணங்க ஒரு வருட சிறைத் தண்டனை, 8 மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

இப்போது தன்னை சிறைச் சாலையில் இருந்து விடுவித்து வீட்டுக்காவலில் வைக்குமாறு கேட்டுக் கொண்டார். இந்தக் கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக மார்ச 26ல் சிறையிலிருந்து வீட்டுக்காவலில் வைக்கப்படவுள்ளார்.

## விளையாடத்தடை



இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகளுக்கு இடையேயான ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் நடைபெறுகின்றன. இதன் முதலாவது ஆட்டம் கடந்த 19ம் திகதி இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே ஜம்ஷெட்பூரில் நடைபெற்றது.

அப்போட்டியின்போது பாகிஸ்தான் அணித்தலைவர் வாஸிம் அக்ரம் 'ரன்-அவுட்' முறையில் ஆட்டமிழந்தார் என நடுவர் அறிவித்தார். ஆனால் அந்த முடிவிற்கு மறுமுனையில் ஆடிக் கொண்டிருந்த பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஷ்டாக் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து போட்டி நடுவர் கம்மி ஸ்மித், சக்லைன் முஷ்டாக்கிற்கு தண்டனை விதித்துள்ளார். இதன்படி இந்தியாவில் நடைபெறும் 3 நாடுகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டிகளில் ஒன்றில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## நடுவர்கள்

மே மாதம் 14ம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 20ம் திகதி வரை ஏழாவது உலகக் கோப்பைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளுக்கான நடுவர்களைத் தேர்வு செய்து அனுப்புமாறு ஒவ்வொரு நாட்டு கிரிக்கெட் சபைக்கும், சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் அறிவித்து இருந்தது.

இதற்காக கிரிக்கெட் விளையாடும் நாடுகளில் இருந்து, தேர்வு செய்யப்பட்ட நடுவர்கள் விபரம் வருமாறு:

டேவிட் ஷெப்பேர்ட், பீற்றர் வில்லி (இங்கிலாந்து), எஸ்.வெங்கட்ராகவன்(இந்தியா), ஸ்ரீவ் டன் (நியூஸிலாந்து), ஜாவெட் அக்தர் (பாகிஸ்தான்), கே.டி. ஃபிரான்ஸிஸ் (இலங்கை) ஸ்ரீவ் பக்னர் (மேற்கிந்தியத் தீவுகள்), இயன் றொபின்சன் (ஸிம்பாப்வே), ரூபி கொயாட்சன், தேவ் ஒச்சார்ட் (தென்னாபிரிக்கா)

## இவர்தான் அவர்



சிம்ரான்

# திருமறை தரும் போது நெறி 54

# சாதுவான சிங்கங்கள்

ஆண்டவருடைய திருக்கடாட்சத்தைப் பூரணமாகப் பெற்றிருந்த தானியேல், ஓர் இரவு முழுவதும் சிங்கங்கள் வசித்து வந்த குகைக்குள் இருந்தார். அச்சிங்கங்கள் பல நாட்கள் உணவுகளெதுவும் தரப்படாமல் பசியுடன் விடப்பட்டிருந்தன. அவற்றுக்கு வேறு மிருகங்களின் இறைச்சியும் இறந்த மனிதர்களின் உடல்களும் தினசரி உணவாகக் கொடுக்கப்படுவதுண்டு. ஆனால் தானியேலை அச்சிங்கங்களுக்கு இரையாக்க வேண்டும் என்று எண்ணங்கொண்ட சில சூதுமதியினர், அவற்றுக்கு வேறு உணவு எதுவும் கொடுக்காமல் பட்டினி போட்டிருந்தனர்.

தாரியு மன்னர், தானியேல் சிங்கக் குகைக்குள் தள்ளப்பட்டதிலிருந்து எந்த உணவும் உட்கொள்ளாமல், இரவு முழுவதும் தூக்கமின்றித் தவித்தார். தானியேலை சிங்கங்கள் தீண்டாமல் காத்தருளுமாறு இஸ்ரயேலரின் ஆண்டவரை அவர் பிரார்த்தித்த வண்ணம் இருந்தார்.



தானியேலுக்கு விரோதமாகச் சதி செய்த கூட்டத்தினர், தங்களுடைய நடவடிக்கைகளுக்கு இடம் தராத- தமது எதிரியான தானியேல் சிங்கங்களின் பசி தீர்வதற்குப் பயன்பட்டிருப்பார் என்று கருதி, குடித்து, வெறித்து இரவு முழுவதையும் கும்மாளமிட்டுச் செலவிட்டனர்.

இராஜகுமாரன்

எப்போது பொழுது புலரும் என்று மன்னவர் ஏங்கிக் கொண்டிருந்தார். அதே வேளை எப்போது கதிரவன் தோன்றுவான்; எப்போது தானியேலின் ஒரு சிறு எலும்புத் துண்டோ ஒரு துளி இரத்தமோ குகைக்குள் கிடைக்காமலிருக்கும் என்பதனை உணரலாம், என்று மமதை கொண்டவர்களாக தானியேலின் விரோதிகள் காத்துக்கிடந்தனர்.

## குகை திறந்தது

சூரியன் கிழக்கே தோன்றியதும், மன்னர் தனது பரிவாரங்களுடன் குகையின் முன் வந்து சேர்ந்தார். அதே சமயம் மற்றொரு புறத்திலிருந்து ஆட்டமும் பாட்டும் பேரொலியும் வான் முட்ட எழுந்தது. தண்டல்காரர்கள், பாபிலோனியக் குருக்கள் மற்றும் சில அரச அதிகாரிகள் ஆகியோர் ஒன்று திரண்டு வந்தனர்.

குகையின் முன்புறம் மன்னர் போய் நிற்பதைக் கண்டதும் பேரொலி எழுப்பியவர்கள் தங்கள் வாய்களை மூடியபடி எட்டத்திலேயே நின்ற வண்ணம் அவதானித்தனர்.

மன்னர் தாரியு, குகையை மூடியிருந்த பாறையின் ஒருபுறம் இருந்த சிறு நீக்கல் வழியாக ஏக்கம் நிறைந்த குரலில், மெதுவாகக் குரல் கொடுத்தார். "ஆண்டவர் மீது அளவற்ற பற்றுதல் கொண்ட தானியேல்! சிங்கங்களால் உமக்கு எந்தவிதமான ஆபத்தும் ஏற்பட்டிருக்க முடியாது என்பதை நான் அறிவேன். நான் நினைப்பதுபோல நலமுடனேயே இருக்கிறீர்கள் அல்லவா?" என்று கேட்டார்.

குகைக்குள்ளிருந்து எவ்வித தயக்கமோ தாமதமோ இல்லாமல் பதில் வந்தது: "மன்னவரே! எனக்கு எவ்வித தீங்கும் நடக்கவில்லை. இங்குள்ள சிங்கங்கள் என்னுடன் சாதுவாக நல்லுறவுடன் நடந்தன. என்னுடன் அவை மிகவும் அன்பை பாராட்டிக் கொண்டிருக்கின்றன!" என்று கூறினார்.

மன்னர் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தவராக, தன்னுடைய காவலர்களை ஏவி, குகையை மூடியிருந்த பாறையை விலக்கும்படி கட்டளையிட்டார். அவர்களும் அப்பாறையைச் சிறிதளவு நகர்த்தி, தானியேல் மட்டும் வெளியேறி வர ஒரு சிறு வழியை ஏற்படுத்தினர். தானியேல் காவலர்களிடம், குகையை எதுவித அச்சமுமின்றி முழுமையாகத் திறக்கும்படி கூறினார். மன்னரையோ அவருடன் வந்த எவரையோ, சிங்கங்கள் எதுவும் செய்யாது என்றும் சொன்னார்.

காலவர்கள் குகையை முழுமையாகத் திறந்து உள்ளே பார்த்ததும், பேராச்சரியமடைந்தனர். தானியேலைச் சுற்றிச் சுற்றி வந்த சிங்கங்கள், அவருடைய பாதங்களை தமது நாக்கினால் தடவி தமது அன்பை வெளிக்காட்டின. குகை வாயில் வரையும் வந்து தானியேலை வழி அனுப்பிவிட்டு அங்கேயே நின்றன.

எட்ட நின்று பார்த்துக் கொண்டிருந்த தானியேலின் விரோதிகள் அஞ்சி நடுங்கினர். அவர்களனைவரையும் பிடித்திழுத்து வருமாறு மன்னர் காவலாளர்களை ஏவினார். அவர்களும் ஓடிச் சென்று அனைவரையும் பிடித்திழுத்துக் கொண்டு வந்தனர். அத்தனை பேரையும் சிங்கக் குகைக்குள் தள்ளி விடுமாறு மன்னர் பணித்தார். அதுவரை சாதுக்கள் போல் நின்றிருந்த சிங்கங்கள் அவர்கள் மீது பாய்ந்து, நகங்களால் கீறி, கடித்து புசிப்பதை மன்னரும் ஏனையோரும் காணக்கூடியதாக இருந்தது.

அரண்மனை திரும்பியதும் மன்னர் அரசவையை அவசரமாகக் கூட்டினார். "இஸ்ரயேலர் வணங்கும் தெய்வமே உண்மையுள்ள தெய்வம்; பாபிலோனியக் குடிமக்கள் அனைவரும்- தானியேலை எத்தீங்கும் அணுகாமல் பாதுகாத்த ஆண்டவரையே வணங்க வேண்டும்!" என்றும் சட்டம் இயற்றினார்.

*தானியேல், மேதிய இனத்தவரான தாரியு மன்னரின் ஆட்சிக்காலத்தில், சிலர் செய்த சூழ்ச்சியினால் சிங்கக் குகைக்குள் அடைக்கப்பட்டு பின்னர் ஆண்டவரின் அனுக்கிரகத்தால் காப்பாற்றப்பட்டார் என்பதைப் பார்த்தோம்; திருவிவிலியத்தில் 'தானியேல்- இணைப்புகள்' எனும் பகுதியில் மற்றுமொரு கதை இடம் பெறுகிறது. பாரசீக மன்னரான சைரசு என்பவரின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றதாக இக்கதை கூறப்பட்டுள்ளது.*

## பேல் தெய்வம்

பாரசீக மன்னரான சைரசு, தானியேலை தன்னுடைய உற்ற நண்பராகப் பாராட்டினார். மிகுந்த மதிப்பும் மரியாதையும் அவருக்கு அரசவையிலும் இராச்சியத்திலும் வழங்கப்பட்டிருந்தன.

தானியேலிடம் சைரசு மன்னர் ஒரு நாள் உரையாடிக்கொண்டிருக்கும்போது, கடவுள் நம்பிக்கை பற்றிய விவாதங்கள் எழுந்தன. பாரசீகர்கள் வணங்கும் பேல் தெய்வமே உண்மையானதென்றும், அத்தெய்வத்தை தானியேல் ஏன் வணங்கக்கூடாது என்றும் மன்னர் கேட்டார்.

தானியேல் தான் வணங்கும் ஆண்டவரிடமே தான் பூரணமான நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டுள்ளதால் வேறு எத்தெய்வத்தையும் தான் வணங்கவேண்டிய அவசியமில்லை என்றும் கூறினார். மன்னரோ, தாங்கள் வணங்கும் தெய்வம் உண்மையானது என்பதனை நிரூபிக்க- அந்த பேல் தெய்வத்தின் முன் தினமும் படைக்கப்படும் பலிப் பதார்த்தங்கள் அனைத்தையும் தெய்வம் தின்று விடுவது ஒன்றே போதுமானது என்று வாதாடினார்.

புத்திக்கூர்மையுள்ள தானியேல், பேல் தெய்வத்துக்குப் படைக்கப்படும் எந்த உணவுப் பதார்த்தத்தையோ குடிபானங்களையோ அத்தெய்வத்துக்கான உருவம் உண்பதேயில்லை என்று திட்டவட்டமாகக் கூறினார்.

அன்றிரவே தெய்வத்துக்குப் படைக்கப்படும் அத்தனை தின்பண்டங்களையும் வழமை போல் படைக்கும்படி மன்னரிடம் தானியேல் தெரிவித்தார். மன்னரின் பணியாட்கள் படையல்களை பேல் தெய்வச்சிலை முன்பாகப் பரப்பினர். தானியேல் அடுப்புச் சாம்பல் கொண்டு வருமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாறு கொண்டு வரப்பட்ட சாம்பலை தரை எங்கும் பரப்பும்படி கூறினார். பேல் தெய்வத்தின் ஆலயக் கதவுகளையெல்லாம் மூடி மன்னரின் முத்திரை பதிக்கப்பட்டது.

அடுத்த நாட்காலை மன்னரும் தானியேலும் ஒன்றாக ஆலயத்தை வந்தடைந்தனர். கதவுகள் மூடப்பட்டு- பதிக்கப்பட்ட முத்திரை எவ்வித பங்கமுமின்றிச் சிதைக்கப்படாமல் இருந்தது. காவலர்களால் முத்திரை உடைக்கப்பட்டது. கதவுகளும் திறக்கப்பட்டன. மன்னருடைய பார்வை பேல் தெய்வத்தின் முன்பாகப் படைக்கப்பட்டிருந்த படையல்களைத் தேடியது; அதேவேளை தானியேல் தரையில் தெளிக்கப்பட்டிருந்த சாம்பலை ஆராய்ந்தார்.

## மாயமாக மறைந்த படையல்

படையல்கள் யாவற்றையும் தின்று பானங்கள் யாவற்றையும் பருகி- வெறும் பாத்திரங்கள் மட்டுமே அங்கு காணப்பட்டன. மன்னர் பெருமிதமடைந்தார். அதேவேளை ஏற்கனவே- முதல் நாளன்று தானியேலுக்கும் தனக்குமிடையில் இடம் பெற்ற விவாதத்தையும் எண்ணிப்பார்த்தார். பேல் தெய்வம் உண்மையானதென்றால், அதன் முன்புறமாகப் படைக்கப்படும் தின்பண்டங்களை உண்டு பானங்களையும் குடித்திருக்க வேண்டும். அவ்வாறானால் தானியேல் கொல்லப்படுவார். படையல்களைத் தின்று, பானங்களை பேல் தெய்வம் குடித்து விட்டமையினால்- தமது அறிவிப்பின்படி- தமது மிக உன்னதமான நண்பர் தானியேலின் உயிரைப் பறிக்க வேண்டிய நிலை உருவாகி விட்டதே என்று வேதனைப்பட்டார், மன்னர் சைரசு.

தானியேல், தரையில் தூவிய சாம்பல் அலங்கோலமாகக் கிடந்ததைக் கண்டு கொண்டார். ஆண், பெண், பிள்ளைகள் போன்றோரின் பல கால் அடையாளங்கள் தரையில் காணப்பட்டன.

மன்னர் தன்னை மறந்த நிலையில், "பேல் தெய்வமே! உமது பெருமையை அறிந்து கொண்டேன். நீரே உண்மையான தெய்வம்...!" என்று பக்திப் பரவசத்துடன் தாளப் பணிந்தார்.

தானியேல், "மன்னவரே! சற்றுக் கீழே குனிந்து தரையைப் பாருங்கள். இதில் காணப்படும் காலடிகள் யாருடையவை என்பதை விசாரித்தறியுங்கள். அப்போது உண்மை- பொய் புலப்படும்!" என்றார்.

மன்னர் அப்போதுதான் தரையில்- தன் முன்னிலையில் பரப்பப்பட்ட அடுப்புச் சாம்பல் மீது பல கால் அடையாளங்கள் பதிந்திருப்பதைக் கண்டார். பேல் தெய்வத்தின் ஆலயத்தில் அர்ச்சகர்களாக இருக்கும் அனைவரையும் குடும்பத்தாருடன்- அழைத்து வருமாறு கட்டளையிட்டார்.

ஆலயக்குருமாரும் அவர்களுடைய குடும்பத்தினரும் மன்னர் சைரசு முன்னால் வந்து தரையில் மண்டியிட்டு அழுது புலம்பினர். தலைமைக்குரு உண்மையை ஒப்புக் கொண்டார். பலிபீடத்தின் ஒரு புறம் அமைக்கப்பட்டிருந்த சுரங்கப் பாதையினூடாக குருமாரும் மனைவி பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரும் இரவில் உள்ளேபுகுந்து படையல்களை உண்டு பானங்களைக் குடித்து வந்ததாக உண்மையை வெளிப்படுத்தினார். (தொடர்ந்து வரும்)

**திருமறை 52 விடை** ☛ அறுபது முழ உயரம்: ஆறு முழ அகலம்


**பரிசு பெறுவோர்:**

1. யூ. குணவதி, அம்பாறை வீதி, மல்வத்தை.
2. கே. ஜெயந்தி, வேவஸ்ச குருப், லோவர் டிவிஷன், பதுளை.
3. கே.கே. சாமுவேல், கம்பியட்டிய, யகலதென்ன, கண்டி.
4. பொ. விநாயகமூர்த்தி, தேசிகர் வீதி, காரைதீவு-10.
5. தி. தேவி, தூய யோவான் பெண்கள் இல்லம், ஊறணி, மட்டக்களப்பு.

**திருமறை 54** வினா:- சைரசு மன்னர் எந்த இனத்தைச் சேர்ந்தவர்?

ஏப்ரல். 03க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 54—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**




# ம(ர)ற தமிழன் மணியண்ணையுடன் ஒரு சந்திப்பு

கா.பூ.க: வணக்கம் அண்ணே! மரத்தமிழன் மணியண்ணை அவர்களே! தமிழ் மக்களை நாடோடிகளாக மாற்றுவதற்கு இரகசிய திட்டம் தீட்டப்படுகிறதாமே?

ம.ம: மாண்புமிகு ஜனாதிபதிக்கு உடனடியாக தெரிவித்துவிட்டேன். கரிசனையோடு கவனிப்பதாக ஜனாதிபதி கூறியதாக, அமைச்சர் தெரிவித்ததாக, அமைச்சரது செயலாளர் தன் உதவியாளர் மூலம் என்னிடம் தகவல் கூறியுள்ளார்.



கா.பூ.க: அரசு ஒன்றும் தெரியாத பாப்பா, வேறு யாரோ கொண்டுபோய் தலையில் போடுகிறார்கள் பீப்பா, அப்படித்தானே சொல்கிறீர்கள். காணி சுவீகரிப்புக்கு வானத்திலிருந்தா உத்தரவு போனது? குடியேற்ற திட்டத்திற்கு சந்திர மண்டலத்தில் இருந்தா சம்மதம் கிடைத்தது?

ம.ம: இந்த விஞ்ஞான யுகத்தில் எதுவேண்டுமானாலும் நடக்கலாம். அயல் கிரக வாசிகள்கூட யாழ்ப்பாணம்மீது ஆசைப்படலாம். அது அரசுக்கு தெரியாமல் இருக்கலாம். அதனால்தான் அம்மையாருக்கு உடன் தெரியப்படுத்தினேன்.

கா.பூ.க: எப்படித் தெரியப்படுத்தினீர்கள்?

ம.ம: விஞ்ஞானத்தின் வியத்தகு படைப்பான, தமிழிலே இணையம் என்று அழைக்கப்படும் இண்டர்நெட் மூலமாக, எங்கள் செய்தியை துரித கதியில் தெரிவித்தோம்.

கா.பூ.க: அப்படியானால் உடன் பதில் அதே வேகத்தில் கூறப்படாதது ஏன்?

ம.ம: தேர்தல் களத்திலே, வெற்றிக் குறியிலே மொத்தக் கவனமும் செலுத்துவதால், மெத்தனமாக இருந்திருக்கலாம்.

கா.பூ.க: தேர்தல்தான் தேசிய இனப் பிரச்சனையைவிட அரசுக்கு முக்கியம் என்பதை இப்போதாவது ஏற்கிறீர்களா?

ம.ம: இதற்கெல்லாம் பதில் சொல்லுமளவுக்கு விவேகம் இல்லாதவர்களல்ல நாங்கள்.

கா.பூ.க: காணிச் சுவீகரிப்பு தொடர்ந்தால் என்ன செய்வீர்கள்?

ம.ம: கண்டிப்போம்! நாலுபக்கத்தில் நல்ல றிக்கை வெளியிடுவோம்.

கா.பூ.க: செம்மணி புதைகுழியை மூடி மறைக்க முயற்சி நடப்பது உண்மையா?

ம.ம: நாங்கள் கேட்டோம் என்பதற்காக செம்மணிக்கு தமது அதிகாரிகளை அம்மணியார் அனுப்பியது ஒன்றே போதும்! அடுத்த தேர்தலில் அதனைச் சொல்லியே மக்களை சமாளித்து விடலாம்!

கா.பூ.க: புதை குழிகள் வெறுமனே கிடந்தால் என்ன செய்வீர்கள்?

ம.ம: (தன்னை மறந்தவராக) அப்படி இருக்கவேண்டும் என்றுதானே நாங்களும் எதிர்பார்க்கிறோம். எலும்புக்கூடுகள் கிடைத்தால் சனம் எங்களை விட்டு வைக்குமோ? அரசுக்கு எதிராக எழுங்கோ, எழுங்கோ என்றல்லோ கழுத்தைப் பிடிக்குங்கள். புதைகுழிகள் சுத்தமாக இருந்தால்தான் எங்களுக்கு நிம்மதி.

கா.பூ.க: வாழ்க்கையில் முதற் தடவையாக உண்மையைப் பேசிவிட்டீர்கள்?

ம.ம: (தன்நிலை உணர்ந்தவராக) யாரங்கே, என் வாயைக் கிளறி உண்மையைக் கறந்த இந்த கந்தசாமியை கவனியுங்கள். ஓடி வாருங்கள்!

(கா.பூ.கந்தசாமியார் ஆளைவிட்டால் போதும் என்று தலைதெறிக்க ஓடுகிறார்.)

காதிலை பூ கந்தசாமி



உயிர் தப்பிவரும் பத்திரிகையாளர்கள் அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற சுதந்திரம் உள்ளது. அது அவர்களது ஜனநாயக உரிமையுமாகும்.

## இரவல் காட்டுன்




நன்றி: 'ஐலண்ட்'




படிப்பகம்




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# நினைவிருக்கும்வரை

↓ உலகப் பிரபலஸ்தர்கள் அவர்கள் வாழ்வில் பயன்படுத்தும் சகல பொருட்களும் விலை மதிப்பற்ற சொத்துக்களாகக் கருதப்படும். அவற்றை பக்குவமாகப் பாதுகாத்து வைத்திருப்பவர்கள், அவற்றைத் தம் நண்பர்களுக்கும் ஏனையோருக்கும் காட்டுவதில் பெருமைப்படுவார்கள்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நூதனமான நினைவுப் பொருட்களைச் சேகரித்து வைத்து பின்னர் மகா மகா கொள்ளை விலைக்கு விற்றும் பெரும் பணம் சேர்ப்பவர் றிச்சாட் வில்சன் என்பவர்.

1998 மார்ச் மாதத்தில் வில்சன் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியான ஜோன் எஃப் கென்னடி பயன்படுத்திய உள்ளங்கிகள் இரண்டை ஏலத்தில் வாங்கியுள்ளார்.

இவற்றுக்காக இவர் 3,450 டொலர் செலவிட்டுள்ளார். (இலங்கை நாணயப் படி 2 இலட்சத்து 41 ஆயிரத்து 500 ரூபாய்)

றிச்சாட் வில்சன் தனது மனைவியுடன் (படத்தில் காணப்படுபவர்) ஜனாதிபதி கென்னடி பயன்படுத்திய வேறு பல உள்ளங்கிகளையும் நடிகை மார்லின் மன்றோவின் உள்ளாடைகளையும் கொண்ட கண்காட்சி ஒன்றை அண்மையில் நியூயோர்க் நகரில் நடத்தியுள்ளார்.



டெக்ஸாசில் ஜனாதிபதி ஜொன் எஃப் கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டபோது அவர் அணிந்திருந்த கறுத்தக் கண்ணாடி 46 ஆயிரம் டொலருக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது.

இந்த ஏலத்தில் புது ... சாதனைகள் படைக்கப் பட்டன ... கொண்டு ...களை பாருங்கள்: கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டபோது அணிந்திருந்த கறுத்த கண்ணாடி 46 ஆயிரம் டொலருக்கு விறகப்பட்டது. நமநாட்டு மதிப்பில் 32 இலட்சத்து 20 ஆயிரம்.

இதற்கே வாய்பிளந்தால் எப்படி?

இன்னும் இருக்கிறது.

கென்னடி பயன் படுத்திய பிளாஸ்ரிக் சீப்பு என்ன விலைக்கு போனது தெரியுமா? 1,265 டொலர். நம்நாட்டு மதிப்பில் 88 ஆயிரத்தி 550 ரூபா. யப்பா! அமெரிக்காவில் அதன் சாதாரண விலை. ஆக. 17 ரூபா 50 சதம்.

# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



சானுஜன் // 29.03.1999

கோபால்புரம், நிலாவெளியைச் சேர்ந்த நவநீதராசா, குறுமன் காடு, வவுனியாவைச் சேர்ந்த லலிதா தேவி தம்பதியினரின் செல்வப் புதல்வன் சானுஜன் தனது முதலாவது பிறந்தநாளை 29.03.99 தமதில்லத்தில் (நோர்வே) வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். சானுஜனை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா அம்மம்மா, பெரியம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அத்தைமார், ஈசன் சித்தப்பா, அக்காமார், அண்ணாமார், அத்தான்மார், மச்சாள்மார், சித்திமார் மற்றும் உறவினர்களும், நண்பர்களும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் இறையருள் பெற்று நீடுழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

# பெறுமதி



↑ 'பில்லியட்' என்பது ஓர் உள்ளக விளையாட்டு. பெரும்பாலான தனவந்தர்களின் இல்ல மண்டபங்களிலோ, பொழுது போக்குச் சங்க (கிளப்) மையங்களிலோ இந்த விளையாட்டு நடைபெறுவதுண்டு.

டென்னிஸ் பந்தைவிடச் சற்றுச் சிறிய பந்துகளை நீண்ட நெடிய தடியைக் கொண்டு தட்டி மேசை ஓட்டைகளுக்குள் விழுத்துவதுதான் ஆட்டம். இதில் உலகளாவிய போட்டிகளும் நடைபெறுவதுண்டு.

இந்த பில்லியட் விளையாட்டுக்கான மேசை ஒன்றைத்தான் படத்தில் பார்க்கிறீர்கள். அதிக மதிப்பு வாய்ந்த இந்த பில்லியட் மேசைக்கு 23 கரட் தங்கத் தகடுகளாலான அங்கி போர்த்தப்பட்டுள்ளது. உன்னதமான மரவேலைப்பாடுகளும் கொண்டது.

பில்லியட் மேசைகளை வடிவமைத்து விற்பனை செய்து வரும் நிறுவனம் ஒன்றின் உரிமையாளர்களான அண்டி மற்றும் ஜில் அற்கிஸ்ஸன் தம்பதியினரால் இம் மேசை வடிவமைக்கப்பட்டது.

இந்த மேசையின் பெறுமதி என்ன தெரியுமா? ஒரு இலட்சம் டொலர்கள். தம் நாட்டு மதிப்பில் 70 இலட்சம் ரூபாய். பில்லியட் மேசைகளில் உலகில் மிகப் பெறுமதியான உலக சாதனை மேசை இதுதான்.

# விஷவிளையாட்டு

↓ 'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்பது பழமொழி மட்டுமல்ல: எக்காலத்துக்கும் பொருந்தக்கூடிய பொது மொழி.

ஆனால் கொடிய விஷப்பாம்புகளையும் தமது தோள்களிலும் மார்பிலும் போட்டு விளையாடும் சாகசக்காரர்களும் இல்லாமலில்லை.

மலேசியாவின் பெர்லிஸ் மாநிலத்திலுள்ள லோங்காவி எனும் தீவில் வசிப்பவரான ஒஸ்மான் அயுப் என்பவர் மிக நீளமான கொடிய



விஷப் பாம்பின் வாயைத் தன் வாயினுள் வைத்துக் கடித்துக் கொண்டு அதன் உடலைத் தன் மீது படர விட்டுள்ளார்.

மலேசியாவில் பெர்லிஸ் மாநிலத்தின் 1997 செப்டம்பர் மாதத்தில் முதன் முதலாக பாம்பாட்டிகளுக்கான சர்வதேசப் போட்டி நடைபெற்றது. அப்போது இவ்வாறு பாம்புடன் விளையாடிய ஒஸ்மான் அயுப் முதலாவது பரிசான இரண்டாயிரம் அமெரிக்க டொலரைப் பெற்றுக் கொண்டார். ஆபத்தான சாதனைதானே!






சிறுபான்மையினர் சிந்தித்தால் சிறப்பு வரும்!
சிந்தனை சிதறிவிட்டால் அழிவு வரும்!
நேர்மையான தேர்தல்மூலம் ஜனநாயக வாக்குரிமையை எதிர்கால சமுதாயத்தின் விடிவுக்காகப் பாதுகாத்திடுவோம்.

வேலம்மாள் செல்லசாமி

மேல் மாகாண சபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்து ஐக்கிய தேசியக் கட்சியின் அபிமான வேட்பாளரை வரவேற்போம்.





# சேகரிப்பு

→ பொழுது போக்குக்காக சில பொருட்களைச் சேர்த்து வைத்து, அவற்றில் மனதைப் பறிகொடுத்து இன்பம் காண்போரைப்பற்றி 'முரசு' பல தகவல்களை அவ்வப்போது தந்திருக்கிறது. இங்கு சில படங்களைத் தந்திருக்கிறோம். இவை பழப் பொதிகளில் ஒட்டப்படும் 'ஸ்ரிக்கர்ஸ்'.







ஃபிரான்ஸ் நாட்டில் பௌர்போன்-லான்சி என்ற இடத்தில் வாழும் அந்தோனி செக்கோ என்பவர் இத்தகைய ஸ்ரிக்கர்களை மொத்தம் 11 ஆயிரம் சேர்த்து வைத்திருக்கிறார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையானவை. இது உலகசாதனையாக கின்னஸில் பதியப்பட்டுள்ளது.



படிப்பகம்